நன்றி - நூலகத்திட்டம்



சரிநிகர்
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**தன்வினை**

துரோகம் என்றும் காட்டிக் கொடுத்தல் என்றும் நீர்
துரோதம் கொண்டு மண்டையிலே போட்டதுமோர் அளவாமோ? பிரபா
விரோதம் கொண்டு நும் தலைக்கு வைக்கும் வேட்டுக்கு
பரோப காரம் உண்டோ பகர் !

-ஈழமோகம்

இதழ் 40 | பெப்.10 - பெப். 23, 1994 | விலை 7/=

# பெரும்பான்மை இனத்தின் ஜனாதிபதியே விஜேதுங்க!

## -கலாநிதி நீலன் திருச்செல்வம்

ஜனாதிபதி விஜேதுங்க அவர்களுடைய சமீபகால அரசியல் பேச்சுக்கள் எதிர்நடை போடுவதாக அமைந்துள்ளன. இலங்கையில் இனப்பிரச்சினை என்ற ஒன்றில்லை; இங்கு நிலவுவது பயங்கரவாதப் பிரச்சினை தான் என ஜனாதிபதி தொடர்ந்து கூறி வருவதானது வடகிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தேவையில்லை என்பதை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. தேசிய ஐக்கியத்தை வலியுறுத்துவதை விட பெரும்பான்மை இனங்களின் உரிமைகளையும் தேவைகளையும் வலியுறுத்துவதிலேயே அவர் கண்ணும் கருத்துமாக உள்ளார்.



1970ஆம் ஆண்டுக்குப் பிறகு பதவியில் இருந்த எந்த ஆட்சித்தலைவரும் இலங்கையின் அரசியல் முறையில் சிங்கள அரசியலாதிக்கத்தை நிலை நாட்டுவதற்காக இந்தளவு வெளிப்படையாக செயற்பட்டது கிடையாது. இத்தகைய செயற்பாடானது முறையான அரசியலதிகாரப் பங்கீட்டையும், சமமான வளங்களின் பங்கீட்டையும் வலியுறுத்தி வருகின்ற சிறுபான்மையினர் மத்தியில் விரக்தியை ஏற்படுத்துவதோடு அவர்களை தேசிய நீரோட்டத்தில் இருந்து மேலும் வெளித்தள்ளுவதாகவே அமையும்.

இந்நடவடிக்கையின் மூலம் ஜனாதிபதி விஜேதுங் இழக்கக் கூடிய சிறுபான்மையினரின் ஆதரவை விட கூடியளவு பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நிலைப்பாட்டில் இருந்தே இவ்வாறு செயற்படுவதாகத் தெரிகிறது. ஆனால் ஜனாதிபதியின் இந்நிலைப்பாடானது பயங்கர விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது.

இனத்துவ கற்கை நெறிகளுக்கான சர்வதேச நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்.

சிறுபான்மை இனங்களுக்கு எதிராக ஜனாதிபதி விஜேதுங்க அவர்கள் ஆற்றிவரும் உரைகள் தொடர்பாக கலாநிதி நீலன் திருச்செல்வத்துடன் சரிநிகர் உரையாடிய போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

→ 15

## லேக்ஹவுஸ் பத்திரிகையாளரும் கடத்தப்பட்டார்



செந்தில் வேலவர்

லேக்ஹவுஸ் நிறுவனத்தைச் சேர்ந்த பத்திரிகையாளரான தேவராசா செந்தில் வேலவர் (26) என்ற இளைஞர் இனந்தெரியாதவர்களால் பெப்.முதலாம் திகதி கடத்தப்பட்டுள்ளார் என நம்பப்படுகிறது. இதுவரை இவர் பற்றிய விபரம் எதுவும் தெரியவரவில்லை.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தமிழ்ப்பத்திரிகையான தினகரன் ஆசிரியபீடத்தில் கடமையாற்றி வந்த செந்தில் வேலவர் பெப்.முதலாம் திகதி காலை ஆறரை மணியளவில் தனது பம்பலப்பிட்டி வீட்டிலிருந்து கடைக்குச் சென்றிருக்கிறார். காலை ஒன்பது மணியாகியும் இவர் வீடு திரும்பவில்லை. இதே வேளை ஒன்பது மணியளவில் அவரது வீட்டுக்குச் சென்ற இராணுவத்தினரும், பொலிஸாரும் வீட்டைச் சல்லடை போட்டுச் சோதனை நடாத்தியிருக்கின்றார்கள். ஏறத்தாழ இரண்டரை மணித்தியாலம் வரை இச்சோதனை இடம் பெற்றிருக்கிறது. இதுவரை செந்தில் வேலவர் யாரால் கடத்தப்பட்டார்? எங்கு வைத்திருக்கப்படுகிறார் என்ற எந்த விபரங்களும் தெரியவில்லை.

இதே போல மகேஸ்வரராஜா தயாளரதன் (27) என்ற இளைஞரும் டிசெ.16ம் திகதி இரவு கடத்தப்பட்டிருக்கிறார். இவர் மனைவி, மகளுடன் (3வயது) தங்கியிருந்த பரிஸ் லொட்ஜ்க்கு இரவு வெள்ளை வானில் வந்தோரே கடத்திச் சென்றுள்ளனர். இதுவரை எவரும் எங்கு வைக்கப்பட்டுள்ளார்கள் எனத் தெரியவில்லை.

## மாத்தையாவுக்கு இன்னமும் மரணதண்டனை வழங்கப்படவில்லை

### யாழ்ப்பாணத்தில் புலிகள் உத்தியோகபூர்வ அறிவிப்பு

புலிகளின் முன்னாள் பிரதித் தலைவர் மாத்தையாவுக்கு இன்னும் மரண தண்டனை விதிக்கப்படவில்லை. தடுத்து வைக்கப்பட்ட அவர் மீதான விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. விசாரணைகள் முடிவடைந்ததும் அவர் செய்துள்ள குற்றங்கள் தொடர்பான விபரங்கள் மக்களுக்குத் தெரிவிக்கப்படும். அதே வேளையில் அவருக்குரிய தண்டனையும் வழங்கப்படும் என்று யாழ்ப்பாணத்தில் புலிகள் முதல் தடவையாக அறிவித்துள்ளனர்.



யாழ்ப்பாணத்தில் புலிகளால் பரவலாக நடாத்தப்படும் கருந்தரங்குகளிலேயே புலிகள் இவ்வாறு தெரிவித்து வருகின்றனர். பூநகரி மீதான புலிகளின் தவளைப் பாய்ச்சலைத் தொடர்ந்து படுதோல்வியையும், பின்னடைவையும் சந்தித்துள்ள படையினர் எந்த வேளையிலும் யாழ்குடாநாட்டின் மீது மூர்க்கத்தனமான தாக்குதல்களை நடாத்தலாம் என்றும், அவ்வாறான நிலைமைகளை எதிர்கொள்வதற்காக மக்களைத் தயார்படுத்தும் வகையிலும் பரவலாக கருத்தரங்குகளைப் புலிகள் நடாத்தி வருகிறார்கள். கருத்தரங்குகளின் முடிவில் பொதுமக்கள் கேள்விகளைக் கேட்க அனுமதிக்கப்படுகின்றனர். இவ்வாறான சந்தர்ப்பம் ஒன்றில் மாத்தையா தொடர்பாக கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவருக்கு மரணதண்டனை வழங்கப்படவில்லை என்றும், தடுத்து வைக்கப்பட்டுள்ள அவர்மீது தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை புலிகளின் அதிகாரபூர்வமான வானொலியான புலிகளின் குரலும் கடந்த வாரம் முதல் மாத்தையாவைப் பற்றித் தெரிவிக்கத் தொடங்கியுள்ளதுடன், அவர் புரிந்துள்ள குற்றங்கள் குறித்தும் ஒவ்வொன்றாகப் பிரச்சாரப்படுத்தத் தொடங்கியுள்ளது.

றோ (RAW)எனப்படும் இந்தியாவின் உளவு நிறுவனத்துடன் சேர்ந்து பிரபாகரனுக்கு எதிராக இரகசியங்களை வெளியிட்டதுடன் யாழ்ப்பாணத்தின் முன்னாள் தளபதி கிட்டுவின் மரணத்திற்கும், ஆனையிறவு இராணுவ முகாம் மீதான புலிகளின் தாக்குதல் பின்னடைந்து தோல்வியடையவும் மாத்தையாவே காரணமாக இருந்தார் என புலிகளின் குரல் வானொலி தெரிவித்துள்ளது.

ஏற்கனவே லண்டனிலிருந்து வெளியாகும் புலிகளின் புத்திரிகையான 'களத்தில்' கனடாவிலிருந்து வெளிவந்த டி.பி.எஸ்.ஜெயராஜின் 'செந்தாமரை' கொழும்பிலிருந்து வெளியாகும் நாளிதழ்கள், சஞ்சிகைகள் மாத்தையா விவகாரம் குறித்து எழுதியிருந்த போதிலும் இது குறித்து யாழ்ப்பாணத்தில் புலிகள் எதுவித பிரதிபலிப்புக்களையும் வெளியிடாமல் நீண்ட மௌனம் சாதித்து வந்தனர். எனினும் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களின் கேள்விக் கணைக

→ 15

## கிட்டுவைப் பிரபாகரனே காட்டிக் கொடுத்தார் !


### மாத்தையா பிரிவினர் குற்றச்சாட்டு

கிட்டுவைப் பிரபாகரனே காட்டிக் கொடுத்தார். தமிழீழத்தை விடத் தனது தலைமையே முக்கியம் எனக்கருதும் பிரபாகரன் இயக்கத்துக்காக ஆக்கபூர்வமாக எதனையும் செய்யவில்லை. உண்மையாக உழைத்த 300க்கும் மேற்பட்ட போராளிகள் எங்கே என்று தெரியாத நிலையில் உள்ளனர். பிரபாகரன் அந்நிய சக்திகளின் கைக்கூலியாகி விட்டார் என புலிகளின் மாத்தையா பிரிவினர் புலிகள் தலைவர் பிரபாகரனைக் குற்றம் சாட்டி துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளனர். அப்பிசுரம் வருமாறு;

தமிழீழ விடுதலைப் போராட்டம் பல இழப்புகள் தியாகங்களுக்கூடாக உச்சக்கட்டத்தை அடைந்த நிலையில், தலைமைப்பதவியை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட வே.பிரபாகரனின் துரோகத்தனம் எமது இயக்கத்துக்குள்ளேயே நூற்றுக்கணக்கான போராளிகளைப் பலியெடுத்தும், பலியெடுத்துக் கொண்டும் இருக்கின்ற நிலைமையை உருவாக்கிவிட்டது. போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தும் தலைமை வெறி கொண்ட பிரபாகரனின் துரோக நடவடிக்கைகளுக்கெதிராக குரல் கொடுத்தவர்கள் உயிருடன் இருந்ததே இல்லை. இலங்கை அரசு அழித்தொழித்த தமிழர்களின் தொகையளவே இவர்களால் அழிக்கப்பட்ட தமிழர்களின் தொகை என கணக்கிடலாம். இவரது ஆரம்பகால இயக்கச் செயற்பாடுகள் துரோகத்திலிருந்து ஆரம்பமானது தான்.

-பற்குணம், மைக்கல் என்ற சக போராளிகளை கொன்றமை.

- தங்கத்துரை, குட்டிமணி ஆகியோரை சிறீலங்கா அரசுக்குக் காட்டிக் கொடுத்




தமை.

-செட்டியைச் சுட்டுக் கொன்றது.

-மன்னார் பொறுப்பாளர் விக்ரரை பின்னாலிருந்து துப்பாக்கியால் சுட்டுக் கொன்றது.

-குமரப்பா, புலேந்திரனுடன் 10 போராளிகளுக்கு சயனைட் கொடுத்துக்

→ 15

நன்றி - நூலகத்திட்டம்



# இராணுவத்தினரின் புதிய கட்டளைகள்

## மட்டக்களப்பிலிருந்து ஒரு றிப்போர்ட்

முன்பென்றால் கிழக்கின் மார்கழி மாதம் எல்லோரின் மனதிலும் குளிர்பாயும் சந்தோஷங்கள் நிறைந்திருக்கும். நெல்லும் சோளமும் கிழங்கும் விளைந்து கொண்டிருக்கும். வாடிகளில் சூட்டுக்கட்டைக்கு பக்கத்தில் குளிர்காய்ந்து கொண்டிருக்கும் முகங்களில் சந்தோஷம் கரைபுரண்டு கொண்டிருக்கும். கையில் இருக்கும் சுட்ட கிழங்கை வாய் கொறித்துக் கொண்டிருக்கும்.

சொல்லிவைத்தாற் போல் காப்பறுக்கிற வெள்ளமும் (கார்த்திகை விரதத்துக்கு) நத்தார் வெள்ளமும் பொங்கல் வெள்ளமும் வானம் பீச்சியடித்து பூமியெல்லாம் கொட்டி நிரப்பும், வயலும் வாய்க்காலும் நிரம்ப வடியும். குடிசைகளுக்கெல்லாம் வெள்ளம் புகுந்து சுகம் விசாரிக்கும். அரிசியும் மாவும் சீனியும் அரசாங்கள் கொடுக்கும். தெருவெல்லாம் வெள்ளம் நிரம்பி வடியும். குளக்கட்டுக்களின் ஓரங்களில் கொக்கும் கோடைப்பூவும் தலைநிமிர்த்திப் பார்க்கும். பார்க்கவும் கேட்கவும் அந்தக் காலங்கள் எவ்வளவு சுகமானவை.

கடந்த மாதம் கிழக்கில் இயக்கக்காரர்களைப் போல் (எல்லாத்தையும் அழித்து நாசமாக்கி விட வேண்டும் என்பதைப் போல்) இயற்கையும் உக்கிரமாக இருந்தது. இடியும் மின்னலும் மழையும் கொடூரமாய் கொட்டித்தள்ளின. வீடுகளும் தெருக்களும் அகதிமுகாம்களிம் நீரில் மூழ்கின. சில இடங்களில் ஆறு ஏழு அடிவரையும் வெள்ளம் நின்றது. மன்னம்பிட்டியாவில் பதினான்கு அடிவரை வெள்ளம் பாய்ந்தது.

படுவான்கரைப் பிரதேசமும் உன்னிச்சையும் வாகரையும் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. வயல்களையெல்லாம் வெள்ளம் அள்ளிக் கொண்டு போனது. இங்குள்ள மக்கள் நீரில் மூழ்கினர். பலகால்நடைகள் அழிந்து போயின. காடுகளுக்குள் கிடந்த விஷப்பாம்புகள் நிறையவே ஊர்களுக்குள் ஓடி வந்தன. (ஏற்கனவே நிறைய விஷப்பாம்புகள் ஊர்களுக்குள் முகாமிட்டிருக்கும் விடயம் இந்தப் பாம்புகளுக்கு எங்கே தெரியப் போகிறது!) விஷப்பாம்புகள் தீண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களும் உண்டு. கைவைத்தியம் செய்தவர்களும் உண்டு.

புனர்வாழ்வு அமைச்சும், அரசஅதிபர் மோனகுருசாமியும் பிரிகேடியர் ரொகான்குணவர்த்தனாவும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்புக்கு தேவையான நிவாரணப் பொருட்களை அரசு தேவையான அளவு அனுப்பி வைத்துள்ளது என்றும் எல்லோருக்கும் சகலவிதமான நிவாரணவசதிகளும் செய்யப்பட்டுள்ளதென்றும் அறிவித்தார்கள்.

ஆனால் மக்கள் அகதிமுகாம்களிலும் பள்ளிக்கூடங்களிலும் கோயில்களிலும் தஞ்சமடைந்திருந்தார்கள். அரச ஊழியரல்லாத குடும்பங்களுக்கு மட்டுமே ஐந்து பேருக்கு மேற்பட்ட ஒரு குடும்பத்திற்கு ஒரு கிலோ சீனியும், மூன்று கிலோ மாவும் ஐந்து கிலோ அரிசியும் வழங்கப்பட்டது. ஏனையவர்களுக்கு எதுவும் வழங்கப்படவில்லை. படுவான்கரையிலும் வாகரையிலும் உன்னிச்சையிலும் பலநாட்கள் பிந்தியே அதுவும் இராணுவ முகாம்களை அண்மித்த மக்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது.

மக்களின் தேவைகளை அறிந்து அவற்றை நிவர்த்தி செய்யவேண்டிய அரசஅதிபர் மோனகுருசாமி பிரிகேடியர் ரொகான்குணவர்த்தனாவுடன் சேர்ந்து அரசபடைகளின் முகாம்களுக்கு விசிற்பண்ணி அவர்கள் மழையில் நனைந்த விட்டார்களா குளிருக்கு ஜக்கட் இருக்கிறதா என அரசபணி செய்து கொண்டிருந்தார்.



அரச அதிபர் மோனகுருசாமி.

அதே நேரம் அரசபடைகளுடன் நிற்கும் தமிழ் இயக்கங்களும் அதன் தலைவர்களும் பாண் கொடுத்தோம், சோறு கொடுத்தோம் என பத்திரிகைகளில் அறிக்கை விட்டு கொட்டை எழுத்துக்களில் வராத தங்கள் பெயர்களைப் பார்த்து ரசித்தனர். மழையும் வெள்ளமும் சூட்டோடு சூடாக கையில் ஒரு தங்கச்செயினுடன் ஆரையம்பதியிலுள்ள ஒரு வீட்டுக்குச் சென்ற ரெலோக்காரர் ''அம்மா இந்தச் செயினை வச்சிப் போட்டு ஐயாயிரம் ரூபா காசு தாங்க நம்மட சனங்கள் இந்த வெள்ளத்தில் அடிபட்டு எவ்வளவு கஸ்ரப்படுதுகள் ஏதாவது வாங்கிக் கொடுக்க வேணும்'' என்றனர். பயந்து போன வீட்டுக்கார பெண்மணி ''தம்பி எனக்கு செயினும் வேணாம் இந்தக் காசும் வேணாம் இந்தாங்க மூவாயிரம் ரூபா எனப் பயத்தினால் கொடுத்தார். (காசு கேட்டு வந்த அன்வர் தான் ஏற்கனவே இப்பெண்ணின் கர்ப்பிணியான மகளை இழுத்துவச்சு சுட்ட புண்ணியவான். இவர்களின் குடும்பத்தில் ஏற்கனவே காசு வாங்கிப் போட்டு ராம் தலைமையிலான ரெலோவினர் கர்ப்பிணியான மகள் மகன் தகப்பன் என மூவரை ஒரேநேரத்தில் சுட்டுக் கொன்றவர்கள்) இப்படியாகத்தான் ரெலோவின் பாணும் சோறும் நிவாரணம் இருந்தது.

எல்லாம் முடிந்துவிட்டது. வீடு வாசல்களை கால்நடைகளை இழந்தவர்கள் அப்படியே இருக்கிறார்கள் நீர்ப்பாசன இலாகாவின் அனுமதியின்றி இராணுவத்தினரால் உடைக்கப்பட்ட உன்னிச்சைக் குளம், புழுகுநாவிக் குளம் என்பனவற்றின் கதவுகள் திருத்தப்பட முடியாத நிலையில் உள்ளது. குளங்களிலுள்ள நீர் இன்னமும் வெளியேறிக் கொண்டிருக்கிறது. அருகிலுள்ள இராணுவத்தினரின் நீந்தல், குளித்தல், துவைத்தல் போன்ற அனாவசியமான தேவைகளுக்காக நீர் வெளியேறி விரயமாகிக் கொண்டிருக்கிறது.

இதனால் உன்னிச்சைக் குளத்திலிருந்து சிறுபோகத்திற்கு எட்டாயிரம் ஏக்கர் நிலங்களுக்கு பாய்ச்சப்படும் நீர் இந்த முறை ஐயாயிரம் ஏக்கருக்காவது பாய்ச்சப்படுமா என்பது சந்தேகமே. இதே மாதிரித்தான் புழுகுநாவிக் குளத்தின் நீர் மட்டமும் நாளுக்கு நாள் வெகுவாகக் குறைந்து கொண்டே வருகின்றது. இதிலிருந்து வெளியேறும் நீர் இராணுவத்தினரின் தேவைக்காக தற்போது பயன்படுத்தப்படுகிறது. இதனால் இக் குளங்களை நம்பி பெரும்போகத்தில் எல்லாவற்றையும் இழந்து நொந்துபோயிருக்கும் விவசாயிகள், சிறுபோகத்திலும் தங்களது நெற்செய்கையை தொடர முடியாதளவுக்கு இக் குளங்களின் நீர்மட்டம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகின்றது.

இதெல்லாம் இப்படியிருக்கும்போது அண்மையில் கமநலச்சேவை உத்தியோகத்தர்களையும் விவசாயிகளையும் அழைத்த பிரிகேடியர் றொகான் குணவர்த்தனவும், அரச அதிபர் மோனகுருசாமியும் பல புதிய கட்டளைகளைப் பிறப்பித்துள்ளார்கள். இராணுவ முகாம்களுக்கு ஒன்றரைமைல் சுற்றளவிலுள்ள வயல்களுக்கு மட்டுமே யூரியா விசிற அனுமதி கொடுக்கப்படும். படுவான்கரைப் பிரதேசத்தில் ஒரு வீட்டில் ஐம்பது மூடைகளுக்கு மேல் நெல் வைத்திருக்க முடியாது. அதற்கும் பிரிகேடியரின் அனுமதி பெற்றிருக்க வேண்டும். வயல்களில் தங்கியிருப்போர் வேலை செய்வோர் பற்றி அருகிலுள்ள இராணுவ முகாம்களில் பதிவு செய்திருத்தல் வேண்டும். பதிவு செய்யாமல் யாருமிருந்தால் பயங்கரவாதிகளாக தண்டிக்கப்படுவார்கள்.

அறுவடை செய்து கொண்டு வரும் நெல் ஏக்கருக்கு முப்பது மூடைக்கு மேல் கொண்டு வரமுடியாது. அதுவும் அருகிலுள்ள இராணுவ முகாம்களில் பரிசீலிக்கப்பட்டு இறக்கி எண்ணிக் காட்டிய பின்பே கொண்டுவர முடியும். வரும் வழியிலுள்ள ஏனைய முகாம்களிலும் இந்நடவடிக்கை தொடரும். உரியவரின் காணியில் மட்டுமே உரியவர் பயிரிட முடியும். ஏனையவர்கள் செய்தால் கைது செய்யப்படுவார்கள். நெல் குத்தும் ஆலை வைத்திருப்பவர்களும் பிரிகேடியரிடம் பதிவு செய்திருத்தல் வேண்டும் என்ற பல புதிய கட்டளைகளை வெள்ளம் வடியமுதலே பிறப்பித்துள்ளார்கள். பிரிகேடியரினதும், அரச அதிபர் மோனகுருசாமியினதும் இந்நடவடிக்கைகள் இம் மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் விசனத்தையும் உண்டுபண்ணியுள்ளது.

அதுசரி ரொகான் குணவர்த்தனா இலங்கைப் படைகளின் ஒரு பிரிகேடியர். ஒரு இராணுவத்துக்குரிய குணாம்சம் தான் அவரிடம் இருக்கும். ஆனால் இந்த மோனகுருசாமியும் திடீரென மட்டக்களப்பில் இன்னொரு பிரிகேடியர் போல தன்னைக் காட்டிக் கொள்வது ஏன்?

**-வர்மன்-**

# சரிநிகரின் நாட்குறிப்பு

**ஜனவரி -25**

கதிரவெளியில் உள்ள இராணுவமுகாமில் ஆயுதக் களஞ்சியத்தில் வைக்கப்பட்ட குண்டு வெடித்ததில் 10 பேர் காயம்.

**ஜனவரி -26**

மட்டக்களப்பு வன்னியனார் வீதியில் அதிகாலை ஆறுமணியளவில் மர்மத் துப்பாக்கி வேட்டு. சுட்டவர்கள் சுடப்பட்டவரை இழுத்துக்கொண்டு ஓட்டோவில் மறைத்து விட்டனர்.

**ஜனவரி -27**

புளொட் இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்று P.L.O என்ற புதிய குழுவை உருவாக்கிய அதன் தலைவர் உமாப்பிரகாஸ் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொலை.

**ஜனவரி -28**

வாகரைப் பிரதேச புலிகள் பொறுப்பாளர் விக்கி உட்பட 6 புலிகள் சுட்டுக் கொலை செய்யப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவிப்பு.

**பெப் -01**

மட்டக்களப்பில் புலிகளுக்கும் படையினருக்கும் ஏற்பட்ட மோதலில் இரு புலிகள் கொல்லப்பட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஏறாவூரில் புலிகளின் முகாம் முற்றுகை. 30நிமிடங்களில் புலிகளின் பிரதேசத் தலைவர் ஜொராட் உட்பட 6 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அங்கிருந்து ஆயுதங்கள், தாஸ்தாவேஜுகள் புத்தகங்கள் கைப்பற்றப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாராளுமன்றத்தின் மூலம் ஜனாதிபதியை தெரிவு செய்யும் முறை வேண்டும். இல்லையேல் நாம் சிறுபான்மையினரிடம் கையேந்தி நிற்க வேண்டும். தேர்தலில் வெற்றி பெறுவதற்காக சிறுபான்மையினருக்கு வாக்கு நிதிகளை அள்ளி வழங்குவதற்கு நாம் தயாராகி விடுகிறோம். இத்தகைய நிலைமையினால்தான் ஒரே இரவில் மத்திய மாகாணத்தில் ஆயிரக்கணக்கான பிரஜாவுரிமைகளைக் கொடுக்க வேண்டி ஏற்பட்டது என அனுராதபுரக் கூட்டத்தில் ஜனாதிபதி உரையாற்றினார்.

**பெப் -02**

அடுத்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை பாராளுமன்றமே தெரிவு செய்ய வேண்டும் என ஜனாதிபதி உரை.

வவுனியாவில் பாதுகாப்பு அரண்களை அமைப்பது என்ற போர்வையில் பொதுமக்களின் விவசாய நிலங்கள் பறிமுதல் செய்யப்படுவதனை பலரும் கண்டித்துள்ளனர். இது தொடர்பாக வடகிழக்கு ஆளுனர் லயனல் பெனான்டோ இந்நடவடிக்கைகளை உடன் நிறுத்துமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

**பெப் -03**

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரைப்பகுதியில் நடந்த மோதலில் மூன்று புலிகள் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிப்பு.

கிழக்கு மாகாணத்தில் செங்கலடியில் எஸ்.யோகநாதன், சிவலிங்கம் ஆகிய இருவரும் இனந் தெரியாதோரால் சுட்டுக் கொலை.

கல்விராஜாங்க அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரனை கொலை செய்ய முயற்சி. மூன்றுமுறிப்பில் 4 பேர் கைது.

**பெப் -04**

இயக்கத்துக்கு வெளியில் உள்ளவர்களுடன் பாலுறவு கொண்டதாக மூன்று பெண்புலிகளுக்கு வல்வெட்டித் துறையில் பகிரங்க மரணதண்டனை.

**பெப் -07**

அரசு பொருளாதாரத் தடையை நீக்கினால் அதற்கு ஈடாக சிறைவைக்கப்பட்டுள்ள படையினரையும் பொலிஸாரையும் விடுவிக்கத் தயார் என விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தரான அன்ரன் பாலசிங்கம் அறிவிப்பு.

வடகிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகான முயற்சி. புலிகளுடன் பேச்சு நடத்த அங்கிலிக்கன் திருச்சபை பேராயர் கெனத் பெனான்டோ, சர்வதோய தலைவர் ஆரியரட்ண ஆகியோரை உள்ளடக்கிய 'குழு யாழ் விஜயம்.

நாட்டை இழந்தால் கடலுக்குள்தான் விழ வேண்டும் பெரும்பான்மையோர் பிளவுபட்டால் நாடு அழிபடும். ஜனாதிபதி உரை.

**பெப் -08**

நிபந்தனைகளுடனோ நிபந்தனைகள் இன்றியே எல்.ரி.ரி.ஈ.யுடன் பேச்சு வார்த்தை கிடையாது என அரசின் உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடபிராந்தியம் தான் நாட்டின் மிகவும் வரண்ட பிரதேசம். அங்கே நதிகள் ஒன்றும் இல்லை. நீர் இல்லை. விவசாயம் இல்லை. மின்சாரம் இல்லை. அவ்வாறாயின் அங்கே எப்படி வாழ்கிறார்கள். அவர்கள் வாழ்வது தென்பகுதி மக்களினாலேயே. உணவும் ஏனைய பொருட்களும் தெற்கில் இருந்தே அனுப்பப்படுகிறது. இவ்வளவையும் செய்யும் எங்களை இனவாதிகள் என எப்படி அவர்கள் அழைக்கமுடியும். நாங்கள் உணவு அனுப்பாவிட்டால் அங்குள்ளவர்கள் பட்டினியாகத்தான் இருக்க வேண்டும். மாதந்தோறும் 536 மில்லியன் ரூபாவை பென்சனாக அனுப்புகிறோம். எங்களது அரசாங்கத்தில் லிங்கங்கள் இருக்கிறார்கள்.

சரிநிகர்
4.ஜெயரட்ன மாவத்தை
திம்பிரிகஸ்யாய
கொழும்பு -05
தொலைபேசி: 584380

## ஜனாதிபதியின் பேச்சும் மூச்சும்

பெப்ரவரி 4, 1994.

இலங்கையின் 46வது 'சுதந்திர' தினத்தன்று திரைக்கு வந்திருக்கிறது இனப்பிரச்சினை பற்றிய ஒரு சிங்களத் திரைப்படம்.
படம்: நொமியென மினிஸு (இறவாத மனிதர்கள்)
நெறியாள்கை : இலங்கை பாராளுமன்றத்தின் பிரதிசபாநாயகர் காமினி பொன்சேகா. அவரே பிரதான பாத்திரமேற்று நடித்தும் உள்ளார்.
படத்தில் ஒரு காட்சி: யுத்த களத்தில் ஒரு போராளி நிலத்தில் வீழ்ந்து கிடக்கிறான். அவனைக் குறிபார்த்துக் கொண்டிருக்கிறது ஒரு படையதிகாரியின் துப்பாக்கி. 'நீ வெறும் கூலிக்காகப் போராடுகிறாய். நானோ எனது இனத்துக்காக, இன விடுதலைக்காகப் போராடுகிறேன்' என்று படையதிகாரியைப் பார்த்துக் கூறுகிறான் அந்த இளைஞன். படையதிகாரி சொல்கிறான்: நீ ஒரு இனத்துக்காக, இனவாதத்துக்காகப் போராடுகிறாய். நானோ முழு நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் போராடுகிறேன்.

கடந்த நான்கு தசாப்தகால இலங்கை அரசியலில் முனைப்புப் பெற்று வந்த சிறுபான்மை இனரின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை அந்தப்படத்தில் இப்படித்தான் சித்திரித்துச் செல்கிறார் காமினி பொன்சேகா.
85இல் வெளிவந்த இவருடைய கொட்டி வலிகய (புலியின் வால்) பார்த்தவர்களுக்குப் புரியும் இனப்பிரச்சினை பற்றி அவர் என்ன சொல்ல விரும்புகிறார் என்பது. அதனைப் பார்த்தவர்களுக்கும் பார்க்காதவர்களுக்கும் தெரியும் 'யுத்தகளத்திலே பயங்கரவாதிகளுக்கெதிராகப் போர்புரியும் படையினருக்கு போதிய ஆயுதங்களும், வாகனங்களும் இல்லை' என்று யுத்தத்துக்கு ஆதரவாக இவர் பாராளுமன்றத்தில் முழங்கியது. அவ்வப்போது முழங்கி வருவது.
இப்படி முழங்குபவர் தன்னுடைய சொகுசுக்காரைப் படையினருக்குக் கொடுத்திருக்கலாமே என்று காமினி பொன்சேகாவை விடத் தீவிரமான சிங்கள பத்திரிகை ஒன்று கேட்டிருந்தது இன்னொரு விடயம்.

காமினி என்கிற இந்த வாலைப் பற்றிய உசாவலின் போதுதான் இன்னொரு 'வால்' பற்றியும் ஞாபகம் வருகிறது.
நின்றும் இருந்தும், கிடந்தும், உருண்டும் மீளவும் ஐ.தே.கவினுள் நுழைந்து விட்டார் காமினி திசநாயக்கா!
பிரேமதாச காலத்தில் இல்லாத ஜனநாயகம் டிங்கிரி பண்டாவின் காலத்தில் எப்படி வந்தது? என்று அவரைக் கேட்பதில் அர்த்தமில்லை.
சிறுபான்மையினருக்கு எதுவுமே போய்விடக்கூடாது. அதே நேரத்தில் பிரச்சினையையும் தீர்த்ததாகவும் காட்டிக் கொள்ள வேண்டுமென்பதற்காக புத்திசாலித்தனமாக இல-இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டவர் காமினி திசநாயக்கா.
அதே காரணத்திற்காக இல-இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்தவர் முன்னாள் ஜனாதிபதி பிரமதாசா.
ஆக, நோக்கம் ஒன்றே. வழிமுறைதான் வேறாகியிருந்தது. கொழுக்கட்டையும் மோதகமும் போல.
ஐ.தே.கவிலிருந்து காமினி வெளியேறிய போது அதனை ஜனநாயக அரசியலுக்கான முதற்படி என தமிழ் மக்களோ, முஸ்லீம் மக்களோ நம்ப அவர்கள் காதில் ஒன்றும் பூச்செருகி இருக்கவில்லை.
இந்த இடத்தில் இன்னொரு காமினியைப் பற்றியும் சொல்ல வேண்டும்.
ஜே.ஆர் காலத்தைய அமைச்சரவையில் அமைச்சராயிருந்து இல-இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்து தனது பதவியை ராஜினாமாச் செய்து வெளியேறி தற்போது சிங்களப் பாதுகாப்பு சபையின் தலைவராக இருக்கும் காமினி ஜயசூரிய தான் அவர்.
'இது இனப்பிரச்சினையல்ல; வெறும் பயங்கரவாதம்தான் என்று தற்போதைய ஜனாதிபதி டி.பி சொன்னதும் முதற் பாராட்டுத் தந்தி அனுப்பியவர் இந்தக் காமினி ஜயசூரிய.
இப்போது காமினி ஜயசூரிய டி.பி அரசின் நண்பராகி விட்டார். டி.பி, காமினி ஜயசூரியாவின் தேசப்பற்றை பொதுமேடைகளில் பாராட்டி வருகிறார். ஹிட்லருக்கு கோயபல்ஸ் போல டி.பிக்கு இவர்.
கடந்த 40 ஆண்டுகால இலங்கை அரசியலில் படிப்படியாக முனைப்புப் பெற்று வந்த சிறுபான்மையினரின் கோரிக்கைகளை இனவாதமாகவும் பயங்கரவாதமாகவும் சித்திரிப்பதிலும், எத்தகைய அதிகாரத்தையும் சிறுபான்மையினர் பெற்று விடாதிருப்பதில் குறியாயிருப்பதிலும் இந்த மூன்று காமினிகளும் ஒரே குட்டையில் மட்டைகள்தான்.
இதற்கு சிகரம் வைத்தாற் போல பெப்ரவரி முதலாம் திகதி அநுராதபுரத்திலும், அடுத்து வந்த தினங்களில் வேறு பல இடங்களிலும் ஜனாதிபதி ஆற்றி வரும் உரைகள் அமைகின்றன.
அவர் உதிர்த்த சில மணிமொழிகள் இவை:
- ஜனாதிபதி தேர்தலில் இரண்டு பிரதான கட்சிகள் போட்டியிடுவதனூடாக பெரும்பான்மை இனம் இரண்டாக பிளவுபடும். அவ்வாறு பிளவுபட்டால் ஆட்சியமைக்க சிறுபான்மையினரது வாக்குகளை நம்பியிருக்க வேண்டி ஏற்படும். இதனால்தான் ஒரே இரவில் ஆயிரக்கணக்கில் குடியுரிமை கொடுக்க வேண்டி ஏற்பட்டது. அதற்காக அவர்களுக்கு எதையாவது கொடுக்க வேண்டும். எனவே தேர்தல் மூலமாக ஜனாதிபதி தெரியப்படுவதற்குப் பதிலாக ஜனாதிபதியைப் பாராளுமன்றம் மூலம் தெரிவு செய்ய வேண்டும்.
- இந்நாட்டிலுள்ள பெரும்பான்மையினர் சிங்களவர். சிங்களவர்தான் நாட்டை ஆள வேண்டும். அவர்கள் கடந்த காலத்தில் நாட்டை ஆண்டனர். எதிர்காலத்திலும் ஆட்சிபுரிவார்கள்.
- பெரும்பான்மையினத்தோடு எப்படி ஒத்துழைப்பது என்று சிறுபான்மையினர் தெரிந்து கொள்ள வேண்டும்.
- கொடி படர வேண்டுமானால் மரம் இருக்க வேண்டும்.
- தோட்டங்களைப் பிரிட்டிஷார் சொற்ப தொகை கொடுத்து அதன் சொந்தக்காரர்களிடமிருந்து வாங்கினார்கள். அதனை நாம் தோட்டத் தமிழர்களுக்கு வழங்கினால் சிங்கள மக்கள் எம்மைத் திட்டுவார்கள்.
- நான் பிரபாகரனுடன் பேசத் தயாராக இருக்கிறேன். அவர் தான் வருகிறாரில்லை. அவர் வராமல் நான் மேசையுடனும் கதிரையுடனுமா பேசுவது. எங்குமே பயங்கரவாதிகள் அரசியலுக்கு வருவதில்லை.

மாண்புமிகு ஜனாதிபதி அவர்களே,
தமிழ் பேசும் மக்களின் உரிமைக்கான கோரிக்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்தே ஆரம்பமாகி, ஆயுத ரீதியான போராக வெடித்து ஒரு தசாப்தம் கடந்த பின்னரும், உங்களால் இவ்வாறு தான் பேச முடியுமென்றால், சிறுபான்மை இனங்களின் பிரச்சினையை இப்படித்தான் புரிந்து கொள்ள முடியுமென்றால், பேரினவாதம்+பயங்கரவாதம் தான சிறுபான்மையினருக்கான உங்களது தீர்வு என்றால், சிங்களவர்தான் உங்களது நாட்டை ஆளவேண்டுமென்றால் நீங்களே உங்களது நாட்டை ஆளுங்கள். விரைவில் அவர்கள் தங்களது நாட்டை தாங்களே ஆளுவார்கள் என்பதைத் தவிர வேறென்ன சொல்ல முடியும்!



# வடக்கை பாதுகாக்க இந்த அரசால் முடியாது!

**அத்த என்ற சிங்கள வார இதழுக்கு முன்னாள் பிரிகேடியர் ரஞ்சன் டி சில்வா அளித்த பேட்டியிலிருந்து சில பகுதிகள்:**

**வடக்கே யுத்தம் தோன்றுவதற்கு வழிவகுத்த காரணிகளாக நீங்கள் எவற்றைக் கருதுகின்றீர்கள்?**

வடக்குப் பிரச்சினைக்கான காரணிகளாக பொருளாதார, சமூக, கலாசார பின்னணிகளையே பொதுவாகக் குறிப்பிடலாம். யுத்தத்துக்கான காரணிகளை ஆராயும் போது வடக்கு மக்களின் இது தொடர்பான யோசனைகள், அவர்களின் நம்பிக்கைகள் என்பன பற்றி நாம் அக்கறை காட்ட வேண்டுமென நினைக்கிறேன். உண்மையில் இதற்கான காரணங்களைத் தேடும் போது மட்டுமல்ல, இப்பிரச்சினைக்கான மாற்றுத் தீர்வைத் தேடும் போதும், அவர்களின் கருத்துக்களில் கவனம் செலுத்த வேண்டும். அவர்களின் கருத்துக்கள் சரியானதா பிழையானதா என விவாதிக்கப் போவதில்லை. இருந்தாலும் அஃவற்றை நாம் தூர நோக்கோடு அவதானிக்க வேண்டும் என நினைக்கிறேன். வடக்கு மக்கள் தங்களுக்குப் பாராபட்சம் காட்டப்படுவதை உணர்கிறார்கள். ஒரு இனம் என்ற ரீதியில் ஏனைய இனத்துக்கு வழங்கப்படும் உரிமைகள் தங்களுக்கு வழங்கப்படுவதில்லை என்று அவர்கள் நினைக்கிறார்கள். அதே போல் அவர்கள் கோருவதும், உணர்வதும் தங்களது பிரதேசங்களில், தங்களது கடமைகளை தங்களின் மொழியில் செய்ய வேண்டும் என்பதை.
வடகிழக்கு மக்கள் தேர்தல் கடமைகளை தமது மொழிகளிலேயே செய்ய வசதிகளைச் செய்து தருமாறு வழக்கறிஞர் டெஸ்மன் பெர்ணாண்டோ தேர்தல் ஆணையாளருக்கு கூறியிருந்த செய்தி அண்மையில் ஐலன்ட் பத்திரிகையில் வெளியாகியிருந்தது. தேர்தல் என்பது உயர்வானது. அக்கடமையை தங்களுக்குத் தெரிந்த மொழியில் ஆற்ற வழி செய்ய வேண்டியது மிக முக்கியமானது.



இவ்வாறே வடக்கு யுத்தத்திற்கான காரணிகளின் ஒன்றாக உயர் கல்வியையும் குறிப்பிடலாம். பல்கலைக்கழக அனுமதிக்கான புள்ளி நிர்ணயிக்கும் முறை அவர்களது பலத்த கண்டனத்துக்கு உள்ளாயிற்று. வடக்கு மக்கள் அதில் தங்களுக்கு வித்தியாசம் காட்டப்படுவதாக உணர்ந்துள்ளார்கள். அதே போன்றுதான் தொழில் வாய்ப்பும். மறுபக்கத்தில் 1977க்குப் பின்னால் நாட்டில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக, வடக்கின் சிறு உற்பத்திக்களுக்கான சந்தைப்படுத்தலிலும் ஏற்பட்ட பிரச்சினைகள் அவர்களது விமர்சனத்துக்கு உள்ளானது.

இதன்படி பொருளாதார, சமூக, கலாசார பின்னணிகள் வடக்கு யுத்தத்திற்கான மூலமாக இருந்திருக்கிறது என நான் எண்ணுகிறேன். மறுபக்கத்தில் சிங்கள -தமிழ் மக்களுக்கிடையே இருந்த நம்பிக்கை கடந்த 15 ஆண்டுகளில் மோசமாக வீழ்ச்சியடைந்து விட்டதும் வடக்குப் பிரச்சினை வேகம் கொள்ளக் காரணமாயிற்று.

**வடக்கில் இருப்பது பயங்கரவாதமா, அல்லது இனப்பிரச்சினையா? இப்பிரச்சினைக்கு யுத்தம் மட்டும் தான் தீர்வு என நீங்கள் நம்புகிறீர்களா?**

பயங்கரவாதம் என்பது நிச்சயமான காரணத்தினை அடைவதற்காக பயன்படுத்தும் ஒன்றே. இன்று வடக்கில் இருப்பது பயங்கரவாத நிலைமையை அடைந்துள்ள யுத்தம். தெளிவாக யுத்தம்! வடக்கு மக்கள் இதற்கு அரசியல் தீர்வே தீர்வு தரக்கூடியது என நம்புகின்றார்கள். யுத்தத்தின் மூலம் முடிவொன்றை ஒரு காலமும் காணமுடியாது. பிரச்சினையின் யதார்த்தம் சமூக பொருளாதாரக் காரணமாயின் அதனை துப்பாக்கிக் குண்டுகளினால் தீர்க்க முடியாது. இனவாத கோணத்திற்கு அப்பால் தூர நோக்கோடு அரசியல் தீர்வுக்கான முயற்சிகளை மேற்கொள்வது சகல கட்சிகளினதுள் கடமையாகும்.

**தற்போது இலங்கை இரண்டாக இருப்பது சாதாரண தெளிவு இந் நிலைமையினை மீண்டும் விலக்கி ஐக்கிய இலங்கையை உருவாக்குவதற்கு முடியும் என நம்புகிறீர்களா? அவ்வாறாயின் அதற்கான மார்க்கம் என்ன?**

அவ்வாறு முடியும். நாட்டில் மீண்டும் ஐக்கியத்தை கொண்டு வரமுடியும் என நான் நம்புகின்றேன். அதனை இன்று, நாளை அல்லது 24 மணி நேரத்தில் ஏற்படுத்த முடியாது. 10 வருடமாக பிழைப்பு வாதத்தினையும் தனிப்பட்ட தேவைகளையும் அடிப்படையாகக் கொண்டு அரசியல் கட்சி என்ற வகையில் லாபமடைவதற்காக செயற்பட்டதன் விளைவே இன்று இனப்பிரச்சினையாகவுள்ளது. எனவே குறுகிய காலத்திற்குள் தீர்வுக்காக முயல்வது கடினமானது. புலிகள் அமைப்பு வேறான தேசம் கோரினாலும் வடக்கு மக்களுக்கு இன்று அந்தளவு தேவை இல்லை என்றே நான் எண்ணுகின்றேன். நாட்டின் ஐக்கியத்தை காப்பதற்கு பிரதானமாக செய்ய வேண்டியது இனங்களுக்கிடையில் மீண்டும் நம்பிக்கையை உருவாக்குவதே. அதற்கு கடந்து போன நிலைமைகளுக்கான தலைமைத்துவத்தை மாற்றி மக்களின் விசுவாசத்தை வெல்லக்கூடிய தலைமைத்துவத்தை மக்கள் தெரிவு செய்ய வேண்டும். இரண்டாவது இப்பிரச்சினைக்கு தீர்வு யுத்தமே எனும் எண்ணத்தைக் கைவிட வேண்டும். மூன்றாவது, தூரநோக்கோடு யதார்த்தத்தோடு நெருங்கியவாறு அரசியல் சுயலாபத்தை அப்புறப்படுத்தி சகல கட்சிகளும் சகல அரசியல் குழுக்களும் சகல அமைப்புகளும் பொதுவாக வரும் அரசியல் தீர்வுக்காக செயலாற்ற வேண்டும். மேலும் பல்வேறு திசைகளிலிருந்து கொழும்பு வந்து சுகவாழ்க்கை வாழ்ந்து கொண்டு இவ் யுத்தத்திற்கு உரமளித்துக் கொண்டு வேறுவழியில் உரிமையை பெற்றுக் கொள்ளலாம் என பேசுவோரும், வேறு சிந்தனைகளை முன்வைப்போரும் தயவுசெய்து இதற்கான தீர்வுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன்.

**இவ் யுத்தத்திற்கு தீர்வுகாண ராஜீவ்- ஜே.ஆர் ஒப்பந்தத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட இந்திய அமைதிகாக்கும் படையின் செயற்பாடுகள் பற்றி கூறமுடியுமா?**

அந்நிய நாட்டின் இராணுவம் நம்நாட்டிற்கு வருவது பற்றி நான் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளமாட்டேன். என்றாலும் இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்திய படையினர் இலங்கை வந்தனர். வடக்கு மக்களும் அவர்கள் வரும் போது வரவேற்றார்கள். புலிகள் அமைப்புக்கு எதிராக அவர்கள் யுத்தம் புரிந்தார்கள். புதிய நிலையொன்று உருவானது. அனேகமாக புலிகள் அமைப்புக்கு முதுகெலும்பு உடைந்தது. வடக்கே மாகாணசபை தேர்தலும் நடத்தப்பட்டது. வடக்கே மக்கள் வாழ்க்கையில் வித்தியாசம் ஏற்பட்டது. அந்நிலைமை தொடர்ந்திருந்தால் இன்றைய நிலையவிட மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம். அக்காலப்பகுதிக்குள் நமது படையினர் அதிகாரிகள் உயிரிழப்புக்கு உள்ளாக வில்லை. அன்றும் இன்றும் உள்ள நிலைமையை ஒப்பிட்டுப் பார்த்தால் உங்களுக்கு வித்தியாசங்களை விளங்கிக் கொள்ள முடியும் என நான் நினைக்கிறேன்.

**இன்று பாதுகாப்பு படையினரிர் யுத்தத்திற்கு முகம் கொடுத்துவரும் அதேவேளையில் எதிர் நோக்கிய பிரதான தோல்வியாக நீங்கள் எதனைக் கொள்கிறீர்கள்?**

இதில் சுட்டிக்காட்டக்கூடியது நமது படையில் தோன்றிய வீழ்ச்சியே இது. அதற்கு சிறந்த உதாரணம்தான். இவ்வளவு காலமும் இராணுவ சேவையில் இருந்த குறைந்த தகுதி கல்வி மட்டத்தில் 8ம் வகுப்பு சித்தியடைந்திருப்பதும், உடல் மட்டத்தில் 5 அடி 8 அங்குல உயரம் இருப்பதுமாகும். ஆனால் இன்று அந்த தகுதி கல்விமட்டத்தில் 5ம் வகுப்பு தாண்டியிருந்தால், போதுமாமென்றும் உடல் மட்டத்தில் 5 அடி உயரம் இருந்தால் போதும் என்றும் குறைக்கப்பட்டுள்ளது. இன்று யுத்தக்கலை விரைவாக வளர்ச்சியடைந்து வருகிறது. புதிய தொழிநுட்பங்களுடன் உற்பத்தி செய்யப்பட்டுள்ள புதிய உபகரணங்களை பாவிப்பதற்கு நல்ல கல்வி தகுதியுடையோர் இருக்க வேண்டியது அவசியம். அப்படி இல்லையாயின் புதிதாக சேர்ந்து கொள்பவர்களுக்கு தகுந்த பயிற்சிகளை வழங்குவது அவசியம். ஆனால் இன்று நிலைமை என்ன? 8ம் வகுப்பு சித்தியடைந்த ஒருவருக்கு அன்று 3 மாத பயிற்சி இருந்தது. இன்று 5ம் வகுப்பு சித்தியடைந்தவர்களுக்கு 6 வார பயிற்சி. சரியாகச் சொல்லப் போனால் புரொய்லர்களை சந்தையில் போடுவதைப் போல் இருக்கிறது என மக்கள் கூறுகிறார்கள். இது மோசமானது. குறிப்பிட்ட பயிற்சிகள் இல்லாவிட்டால் யுத்தம் செய்ய முடியுமா? நவீன யுத்த நுட்பங்களை கையாள முடியுமா?

**-முன்னாள் பிரிகேடியர் ரஞ்சன் டி சில்வா**

நன்றி: 'அத்த'

நான்காவது உலகத்தமிழாராய்ச்சி மாநாடு. திட்டமிடப்பட்ட அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட வேண்டியது. அதற்கான ஆயுத்தங்களையும் மாநாட்டுக் குழுவினர் செய்து முடித்து விட்டனர். **தனிநாயகம் அடிகளார், பேராசிரியர் சு.வித்தியானந்தன்** ஆகியோர் அதில் முன்னின்றனர்

சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசு இதனை விரும்பவில்லை. யாழ்ப்பாணம் வசதியில்லை என்று பல சாக்குப் போக்குகளைக் கூறியது. ஆனால்

யாழ்ப்பாணத்திலிருந்த அனைத்து சிகரங்களும், சப்பறங்களும் யாழ்நகரில் கட்டப்பட்டன வீதிகளெல்லாம் சோடனைகள் நிரம்பி வழிந்தன. சந்திகளெல்லாம் வாழைமரங்கள், தென்னை மரங்கள், கமுக மரங்கள்.

அப்போது எல்லோரும் தமிழ் என்றே முணுமுணுத்தனர். வீதியெங்கும் சனம் நிறைந்து வழிந்தது.

முற்றவெளியிலும், வீரசிங்கம் மண்டபத்திலும் மாநாடுகள் நடைபெற்றன. ஆய்வரங்குகள், கலையரங்குகள்.

மாநாட்டின் ஆறாம் நாள் என்று

ஓடினார்கள். மோதி விழுந்தார்கள். விழுந்து மிதிபட்டார்கள். மிதிபட்டுக் குழறினார்கள். எழும்புவதற்கிடையில் இன்னொரு மிதி. அல்லோல கல்லோலப்பட்டார்கள்.

இருள்திசை தெரியாது. இடையிடை வாகனங்களின் வெளிச்சத்தில் வீதி இது வெனத் தெரிந்து ஓடினார்கள்.

ஐயா என் கை பிடித்து, ஓட்டம் எனும்படியான விரைவான நடை. மிக வேகமான நடை. நான் தொலையக் கூடாது.

இது பொய்யோ, புளுகோ, புனைவோ அல்ல.கற்பனை என்றும், கதைகட்டல் என்றும் சொல்லி விட முடியாது. வைனோம்.

நாம் இடிபட்டோம். கிழிபட்டோம். ஐயா என் கையை இறுகப் பற்றியிருந்தார். தோட்டம் கொத்திக் காய்த்த கையின் பிடியில் என் கை வலித்தது. ஓடிக் கொண்டிருந்தோம்.

தொப்பென வெள்ள வாய்க்காலுக்குள் விழுந்தோம். எதிர்பார்க்கவில்லை. அதலபாதாளத்தை நோக்கிப் போவது போல இருந்தது. சேறு. பற்றைகள், பிசுங்கான் துண்டுகள். வெள்ள வாய்க்கால் ஏற முடியவில்லை.

இருட்டினுள் ஐயா என் முகம் தேடினார். ''ராசா ஏதும் குத்தினதா?'' என்று கேட்டார்.

ஐயாவின் கையை நான் பிடித்தேன். ஒன்றும் தெரியாத இருள். வெள்ள வாய்க்காலை விட்டு மேலேற முடியவில்லை.

விடியும் வரை காத்திருந்தோம்.

மெல்ல வெளிச்சம் பரவ, கற்கள் வைத்து அடுக்கி ஐயா என் கை பிடித்து மேலேற்றி விட்டார்.

## எதிலிருந்து தொடங்குவது? -2

வெளிப்படையான காரணம் -எழுந்து வரும் தமிழ்த் தேசிய எழுச்சிக்கு இம்மாநாடு மேலும் உற்சாகத்தைக் கொடுக்கலாம். இது ஆபத்தில் முடியும் என்பதாகும். சிறீலங்கா அரசு யாழ்ப்பாணத்தில் இம்மாநாடு நடப்பதைத் தடுப்பதில் முனைப்புடன் செயற்பட்டது.

இம்மாநாடு கொழும்பில் நடப்பதாக இருந்தால் அரசு தான் இதனை நடாத்துவதாகவும், முழுச் செலவும் அரசினது பொறுப்பாக அமையும் என்றும் கூறியது.

மாநாடு யாழ்ப்பாணத்திலா, கொழும்பிலா என முடிவெடுப்பதில் பல மாதங்கள் இழுபறிப்பட்டன. மாநாட்டுககுழுவினர் திட்டவட்டமாக யாழ்ப்பாணத்தில் நடத்துவது என்பதில் உறுதியாக இருந்தனர்.

இரண்டாவது தமிழாராய்ச்சி மாநாடு சென்னையில் நடைபெற்றது. அப்போ

நினைக்கிறேன். - நீண்ட ஊர்வலம், ஒன்று சென்றது. தமிழின் பல்வேறு அம்சங்களை வெளிப்படுத்திய ஊர்வலம். தமிழ், தமிழன்னை, தமிழ்ப்புலவர்கள், தமிழ் அரசர்கள் அவர்கள் வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகள், போன்ற பல விடயங்கள் ஊர்வலத்தில் காட்சிப் பொருளாகின.

ஊர்வலத்தை நாச்சிமார் கோயிலடியிலும், பரமேஸ்வராச் சந்தியிலும், தண்டவாளத்தடியிலும், ஆரியகுளச் சந்தியிலும் என்று ஓடி ஓடிப் பார்த்தோம்.

தமிழ் உணர்வு நம் இரத்தத்தில் கொப்பளித்துக் கொண்டிருந்தது. தமிழ் நம் தோளில் ஏறி உட்கார்ந்தது. சிறுவனாயினும், தினவெடுத்த தோள்கள்.

மாநாட்டின் இறுதி நாள். நம்மூர் கோயில் திருவிழாவின் இறுதிநாளான பூங்காவனத் திருவிழா முடிவது போன்று -மாநாட்டின் இறுதிநாள் விழா. எப்படியும் போகத்தான் வேண்டும்.

## எனக்கும் தமிழ்தான் மூச்சு

தைய **அண்ணாதுரை** தலைமையிலான **தி.மு.க.** அரசு அதனைப் பெருவிழாவாகக் கொண்டாடியது. அவ்விழாவிலிருந்து சற்றும் குறைந்ததாக இம்மாநாடு அமைய முடியாது என்பதில் மாநாட்டுக் குழுவினர் உறுதியாக இருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் மாநாடு என முடிவாக்கப்பட்டது. அரசு எவ்வகையிலும் உதவி செய்வதில்லை எனத்தீர்மானித்தது. உபத்திரவம் செய்வது என்றும் தீர்மானித்தது.

அரசு, தமிழ் நாட்டிலிருந்து அரசியல்வாதிகள், கலைஞர்கள் வருவதனை முற்றாகத் தடை செய்தது. தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழ் அறிஞர்களும், வருவது கட்டுப்படுத்தப்பட்டது. **முனைவர் சாலை இளந்திரையன் சாலினி இளந்திரையன்** ஆகியோரே வருகைதந்த குறிப்பிடத்தக்க தமிழறிஞர்கள்

மாநாட்டிற்கு வருவதற்குத் தடை செய்யப்பட்டிருந்த **இரா.ஜனார்த்தனம்** எப்படியோ மாநாட்டின் இறுதி நாளன்று மேடையில் தோன்றினர்.

யாழ்ப்பாணத்தில் மாநாடு நடைபெறுகின்ற போது யாழ்ப்பாண நகரத்தின் மேயராக **திரு அல்பிரட் துரையப்பா** அவர்கள் வீற்றிருந்தார்கள்.

இவை வரலாறு.

இதிலிருந்து ஒட்டியும், வெட்டியும், விலகியும் நிற்பது நம் கதை.

அப்போது நான் சிறுவன். பதின்மூன்று வயதில் என் பருவம்.

நம் இரத்தத்தில் காலாதி காலமாக ஊட்டப்பட்டிருந்த உணர்வுகள் இருந்தன. நம்மூச்சு தமிழ் என்றே உரைத்தது. நம் பேச்சும் அதுவாகி நின்றது.

நம் தலைவர்கள் **ஜீ.ஜீ., செல்வா** நமக்குத் தெரிந்த ஏனைய தலைவர்கள் **அண்ணா, கருணாநிதி.**

மாநாடு யாழ்ப்பாணத்தில் என்றவுடன் மனம் குதூகலித்தது. சந்தர்ப்பம் கிடைத்த நாட்களிலெல்லாம் ஐயாவின் கைபிடித்துப் போனேன்.

ஐயாவிடமும் அடம்பிடித்து, ஐயாவின் கை பிடித்துப் போனேன்.

மதியம் சாப்பாடு. பின் பஸ். யாழ்ப்பாணம். மாலை. பொழுது பட்டது. முன்னிரவு. இருள். வண்ண வண்ண விளக்குகள் தெருநீளமெங்கும் இருந்தன. கண்ணுக்கு அழகு.

''திரிதூண்டி, விளக்கெடுத்துத் தீப்பெட்டி உரசலினால் சிறு வெளிச்சம் மெதுமெதுவாய்ச் சிணுங்கி சிணுங்கி அழுகின்ற '' நம்மூரிலிருந்து, யாழ்நகரில் வண்ண வண்ண விளக்குகளில் அழகுகளைப் பார்ப்பது கொடுப்பினை.

அறிஞரின் பேச்சொன்றும் காதில் ஏறவில்லை. ஏறவும் தேவையிருக்கவில்லை.

நமக்குத் தேவையென்ன? தமிழ். அழகு. விழா. உல்லாசம். நமக்குக் கண்ணுக்குத் தெரிந்தவை வண்ண வண்ண விளக்குகள். அதன் அழகு.

பார்த்துக் கொண்டு நின்றேன்.

ஒலி பெருக்கியில் வார்த்தைகள் வந்து மோதுகின்றன. கைதட்டல். ஆரவாரம். வார்த்தைகள். வார்த்தைகள். சலிப்

பொடி நடை. சூரியன் எழுமுன் வீடு அடைந்தோம்.

நாம் போய்ச் சேரமுன் செய்தி போய்ச் சேர்ந்தது.

தமிழராய்ச்சி மாநாட்டில், பொலிஸ் சுட்டு, பலர் செத்திருக்கிறார்கள்.

ஒன்பது பேர் இறந்திருக்கிறார்கள்.

இரா.ஜனார்த்தனம் வந்ததுதான் காரணம் என்கிறார்கள். மின்சார ஒழுக்கினால், மின்சாரம் தடைப்பட, சனம் வெருண்டு ஓட பொலிஸ் கட்டுப்படுத்த முடியாமல், துப்பாக்கிப் பிரயோகம் செய்தது என்றும் ஒரு கதை. சனம் திரண்டு பொலிஸின் மீது வன்முறை பிரயோகித்தார்கள் அதனால் பொலிஸ் சுட நேர்ந்தது என்றும் கூறினார்கள். உண்மைக்குப் புறம்பான செய்திகள் என்பதிலும் பார்க்க 'வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகின்ற' செய்திகள்.

**'தமிழைப் பேசுவதன்றித் தவறு என்ன செய்தோம்?'** என்று ஆதங்கப்பட்டோம்.

தமிழுக்கு விழாவெடுத்தோம். தமிழன்னைக்கு ஆபரணங்கள் பூட்டி அழகு பார்த்தோம். தமிழ் எங்கள் மொழி என்

**——— டேவிட் நந்தகுமார்**

பூட்ட முடியாத முறையில், உணர்ச்சியில் தோய்த்தெடுத்த பேச்சுக்கள். உணர்வுகள் பொங்க அடிக்குரலில் உறுமி உறுமிப் பேசினார்கள். அழகாக இருந்தது.

வண்ண விளக்குகளும் அழகாக இருந்தன.

எந்த யமன் இந்த வேலை செய்தான்? அனைத்து விளக்குகளும் அணைந்தன. ஒரே அந்தகார இருள். ஐயா, '' ராசா...'' என்று கூப்பிட்டு எட்டிக் கையைப் பிடித்தார்.

சடசடவென்று வெடிச்சத்தம். இடையிடை மின்சாரம் மின்னி மின்னி எரிந்தது. வெடிச்சத்தம்தான். தீனமான குரல்கள்

சனங்கள் ஓடத் தொடங்கினார்கள். எங்கு ஓடுகிறோம் என்று தெரியாமல்

பதில் பெருமைப்பட்டுத் திரிந்தோம்..

இதுவே, நம் உயிருக்கு ஆபத்தானது. ஒன்பது உயிர்களைப் பலி கொண்டது. மகிழ வந்த, ரசிக்க வந்த ஒன்பது உயிர்கள் பலியிடப்பட்டன.

கதை பரவியது; இவற்றுக்கெல்லாம் காரணம் யார் என்ற கதை பரவியது. யாழ்ப்பாணம் சிறீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர், யாழ்ப்பாணம் மாநகரசபை மேயர் **அல்பிரட் துரையப்பா** அவர்கள் தான் இதற்கெல்லாம் காரணம் என்று கதை பரவியது; மக்கள் பேசிக்கொண்டார்கள். குறிப்பாகத் தமிழ் இளைஞர்கள் இதைப்பற்றி ஆத்திரத்துடன் பேசிக் கொண்டார்கள்.

(வரும்)

# நாலு வார்த்தை எழுத விடு

சூர்யா

## கவிஞன் கட்டற்றவன்

இப்பத்தி தொடர்பாகச் சிலரிடம் ஒரு கருத்து நிலவுகின்றது. 'தனக்குத்தான் எல்லாம் தெரியும்' எனத் தொனிப்பட சூர்யா எழுதுவதாக ஒரு நண்பர் கூறினார். சூர்யாவுக்கு இரண்டு கொம்பு முளைத்திருப்பதாக இன்னொருவரின் கருத்து. இவை புறந்தள்ளி விடக் கூடியவை அல்ல.

இந்த இடத்தில் ஒரு சிறு விளக்கம். அவ்வாறான ஒரு தொனிப் பொருளை இப்பத்தியில் வரும் குறிப்புகள் கொண்டிருக்குமாயின், அதற்கு சூர்யாவே பொறுப்பு. அத்தகைய தொனிப்பொருளை சூர்யாவே விரும்பவில்லை. சூர்யாவையும் மீறி அது வருவதாயின் அது இந்தச் சூர்யாவின் எழுத்தின் பலவீனம்.

இப்பத்தியில் வருகிற குறிப்புகள் விமர்சனக்கட்டுரைகள் அல்ல. பார்த்த, கேட்ட, வாசித்த, ரசித்த சிலவற்றைப் பற்றி சிறு குறிப்புகளைத் தான் இதில் வரைவதுண்டு. ஆனால் இதில் எழுதப்படுகின்ற குறிப்புகள் பற்றி யாரும் விமர்சிக்கலாம். உரிமையுண்டு. வரவேற்கிறோம். (சரிநிகர் இத்தகைய விமர்சனங்களுக்கு நிச்சயமாக இடம் தரும் என நம்புகின்றேன)

மற்றது. மனதில் படுகிற **உண்மைகளே** இப்பத்தியில் எழுதப் படுவதுண்டு. **உண்மைகள் சிலரிற்கு இனிக்காது.** ஆனால் அதற்கு சூர்யா பொறுப்பும் அல்ல. இப்பத்தியில் ஒருமுறை **ஜெபாலனின் ஒரு அகதியின் பாடல்** எனும் கவித் தொகுப்பு பற்றி சிறுகுறிப்பு வந்தது. அது வக்கிரமான விமர்சனக் குறிப்பு என ஜெயபாலனே எழுதியிருந்தார். புகழ்வது மட்டும் என்பது நமக்கு இயலாது. ஜெயபாலனது பலவீனங்களைத் தனிப்பட்ட முறையில் தெரியும் என்பதால் தான் அவர் வரிகளில் சில கேள்விகள் எழுப்பப்பட்டது. ஜெயபாலனைத் தெரிந்தவர்களுக்கு சூர்யாவின் அக்குறிப்பு ஆச்சரியத்தைத் தந்திருக்கப் போவதில்லை. ஜெயபாலனிற்கு ஒரு பதிலினை சரிநிகரிடம் கொடுத்திருந்தேன். சரிநிகர் அதனைப் பிரசுரிக்கவில்லை.

பாரதிதாசன் கூறுவது போல ''கவிஞன் கட்டற்றவன்'' என்பது தான் சூர்யாவின் எண்ணமும்.

## அரங்காடிகள்

இவ்வருடத்திற்கான அரங்க செயற்பாடுகள் தொடர்பாக **'அரங்காடிகள்'** பொதுக்கூட்டம் ஒன்றினை கூட்டினர். அரங்காடிகளின் வேலைத்திட்டம் தொடர்பாக பலர் பலவித ஆலோசனைகள், அபிப்பிராயங்கள் ஆகியவற்றை முன்வைத்தனர். அரங்காடிகள் தமது வேலைத்திட்டத்தை மூன்று அம்சங்களில் அடக்கினர்.

1) நாடக, அரங்க படைபபாக்கத்தை நிகழ்த்துதல்

2) அதற்கான குறிப்பிட்டளவு ரசிகர் அவையினை உருவாக்கல்.

3) நாடகம், அரங்கு தொடர்பான அறிவு, ஆய்வு முதலியவற்றை ஊக்குவித்தல்.

இவ்வாறு அவர்கள் தெளிவு படுத்திய போதும், அத ன் தொடர்ந்த செயற்பாடுகளே மேற்கூறிய அம்சங்களின் வெற்றியை வெளிக்காட்டும்.

மற்றுமொன்று, அங்கு வந்திருந்தோரில் சிலர் மெச்சத்தகுந்த ஆலோசனைகள் வழங்கினர். ஆனால் அவற்றைச் செயற்படுத்துவதற்கு போதிய உற்சாகத்தையும் உழைப்பையும் அவர்கள் வழங்கவும் வேண்டும்.

இராமன் அணை கட்ட அணில் கொடுத்த கல்லைப் போல சூர்யாவால் முடிந்தது இதில் எழுதுவதுதான். தொடர்ந்தும் அரங்காடிகளுக்குப் போதிய உற்சாகம் தர இப்பத்தி பயன்படும்.

## நெஞ்சம் கிளர்ந்து......

இராத்திரி என் ஆசிரியரின் மகளது திருமணத்திற்குச் சென்றேன். தவில் நாதஸ்வரம் முழங்கிக் கொண்டிருந்தன. நான் என்னூர் வரை போனேன்.

எனக்குக் கவிதை எழுதத் தெரியாது. சிறுகதை சுட்டுப் போட்டாலும் வராது நல்ல கவிதை, சிறுகதை பார்த்து ஏங்கியிருப்பேன். ஆனால் இராத்திரி நான் அடைந்த கிளர்ச்சி என்னை எழுதத் தூண்டியது. கொஞ்சமாகச் சில வரிகள். இப்போது இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது நம் கிராமம். எமது கோயிலில் இராணுவம் முகாமிட்டிருக்கலாம்.

எங்கள் கோயில் திருவிழாவோவெனின், தவிலும், நாதஸ்வரமும் நீட்டி முழங்கும். சிறுவனாக நான் இருக்கிற போது **அளவெட்டி வி.தட்சிணாமூர்த்தியின்** தவிலின் லயத்தையும், தவிலை முழங்கும் அழகையும் அவர் நெஞ்சில் புரளுகின்ற மீன் சின்னம் பொறிக்கப்பட்ட பதக்கத்தின் கண்ணில் இருக்கிற சிவப்புக் கல்லையும் பார்த்து ரசித்திருக்கிறேன். பகல் திருவிழாவென்றால், வடக்கு வீதியில் தட்சிணாமூர்த்தியுடன் **இணுவில் சின்னராசா, கைதடி பழனி, நாச்சிமார் கோயிலடி கணேசு,** அளவெட்டி குமரகுரு எனத் தவில் மேளச்சமா நடக்கும். கச்சேரியென்றால் அதுதான்.

இது ஒரு நாள் திருவிழாவென்றால், மறுநாள் திருவிழாவில் தெற்கு வீதியில் **அளவெட்டி என்.கே.பத்மநாதன், எஸ்சிதம்பரநாதன், அளவெட்டி எம்.பி. பாலகிருஷ்ணன், சாவகச்சேரி எம்.பஞ்சாபிகேசன்** இவர்களது நாதஸ்வரக் கச்சேரி நடைபெறும். **மல்லாரி** வாசிப்பார்கள். பொல்லாத வேளை அது. நெஞ்சுருகும். அம்மாள் புன்னகை சிந்திப்பார்த்தபடி இருப்பார். பகல் திருவிழா முடியவே மாலை ஐந்து மணியாகி விடும். இரவுத் திருவிழா 7 மணிக்கே தொடங்கி விடும்.

தேர்த்திருவிழா அன்று நாதஸ்வரம் வாசிப்பதற்கென்று பெருங்கூட்டம். தேரில் இருந்து அம்மாள் இறங்கிச் செல்கின்ற போது, மலர்களால் ஆன பந்தலில், மலர்மாரிக் குளியலுடன் அம்மாள் ஆடி.ஆடி உட்செல்வார். நாதஸ்வரத்தில் நெஞ்சைப்பிழிந்து எடுத்து விடுவார்கள். கண்ணால் கண்ணீர் பெருகும். நாதஸ்வரம் வாசிக்கின்ற சிதம்பர நாதனின் கண்களில் இருந்து கூட கண்ணீர் பெருகும். சாத்துப்படியில் அம்மன் என்ன அழகாக இருப்பார். உருகி உருகி நாதஸ்வரம் வாசிக்கிற போதும், உருகி உருகிச் சனம் மனம் குமுறுகிற போதும், அம்மாள் புன்னகை சிந்தியிருப்பாள். எம் இரத்தத்தில் ஊறிய உணர்வுகள் இவை. தவிலும், நாதஸ்வரமும் எம்மை ஆட்டிப்படைத்த கணங்கள். இப்போது அம்மாள் என்ன செய்வார்? ஆளை மயக்கிற புன்னகை, அருள் சுரக்கிற கண்கள் இதுவெல்லாம் எங்கள் அம்மனிடம் இருக்குமா?

கவிஞர் ச.சி.யின் வரிகளில் **''எம் நெஞ்சம் கிளர்ந்து நினைவு தளிர்க்குமே''.**

நன்றி - நூலகத்திட்டம்



# மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரின் ஆதரவுடன் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம்:

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல எல்லைக் கிராமங்களிலும், மற்றும் படையினர் நிலை கொண்டுள்ள இடங்களை மையமாக வைத்தும் அரசினால் திட்டமிட்ட முறையில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## வலைவாடியில் 145 குடும்பங்கள் குடியேற்றப்பட்டன!

இதன் ஒரு நடவடிக்கையாக வாழைச்சேனை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள வலைவாடி என்ற கிராமத்தில் அண்மையில் 145 குடும்பங்கள் கொண்டு வரப்பட்டுக் குடியேற்றப்பட்டுள்ளன. உண்மையில் 1983ம் ஆண்டிற்கு முன்னர் மீன் பிடித் தொழிலைச் செய்வதற்காக வந்த தென் பகுதிச் சிங்களவர்களே இங்கு குடியிருந்தனர். 1983ம் ஆண்டளவில் பிரச்சினைகள் அதிகரித்ததன் காரணத்தினால் தங்கள் சொந்த இடங்களுக்கு இவர்கள் சென்று விட்டனர். தற்போது அரசு முன்பு இருந்த குடும்பங்களை விட அதிக குடும்பங்களை 'மீளக்குடியமர்த்தல்' எனும் போர்வையின் கீழ் இங்கு குடியேற்றியுள்ளது. இவர்களுக்குப் பாதுகாப்பாக ஒரு இராணுவமுகாம், ஒரு பொலிஸ் நிலையம் என்பன அமைக்கப்பட்டுள்ளன. அத்தோடு அண்மையில் புனர்வாழ்வு அமைச்சில் இருந்து வருகை தந்த உயர் அதிகாரிகள் இக்குடியேற்றக் கிராமத்திற்குச் சென்று குடியேற்றவாசிகளை நேரில் சந்தித்ததோடு இவர்களுக்குத் தேவையான அன்னத்தையும் உடன் செய்து கொடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரையும் விடுத்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து அவர்களுக்கு வங்கிக்கடன், இலவச மீன் பிடி உபகரணங்கள், விசேட வீடமைப்புத் திட்டங்கள் என்பன உடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்தோடு மீளக் குடியமர்வதற்கான சில கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டதோடு தொடர்ந்து உலர் உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் உண்மையில் இங்கு குடியேற்றப்பட்ட சிங்கள மக்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட பணத்தையும் உணவுப் பொருட்களையும் பெற்றுக் கொண்டு தங்களது சொந்தப்பகுதிகளுக்குச் சென்று விட்டார்கள். அவர்களில் சிலர் அடுத்த கட்ட உணவுப் பொருட்களைப் பெறுவதற்காக மீண்டும் இங்கே வந்து தங்கியுள்ளனர். உண்மை நிலையைப் பார்க்கும் போது இச் சிங்கள மக்கள் தங்கள் விருப்பத்திறகு மாறாக ஆசை காட்டியே இங்கு குடியேற்றப்பட்டுள்ளார்கள் என்பது புலனாகின்றது.

## வாகரையில் குடியேற்ற முயற்சி!

### புல்லுமலை கரடியனாறிலும் குடியேற்ற முயற்சி:

இதே போன்று புல்லுமலை, கரடியனாறு ஆகிய கிராமங்களை அண்டியுள்ள தமிழ்க் கிராமங்களிலும் சிங்களக் மக்களைக் குடியேற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்தோடு சிங்கள மக்களைக் குடியேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ள இடங்கள் அனைத்தும் தமிழ் மக்களைக் கொண்டே துப்பரவு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு தமிழரும் ஒரு வாரத்தில் இரண்டு நாட்கள் சம்பளமில்லாமல் இவ்வாறான வேலைகளில் ஈடுபட வேண்டும் என இராணுவத்தினரால் கட்டாய்படுத்தப்பட்டுள்ளனர். இதற்கு மறுப்பவர் எல்லோரும் புலிகள் எனக் காரணம் காட்டிக் கைது செய்யப்படுகின்றனர்.

### பெண்கள் மீது படையினரின் பலாத்காரம்

அத்தோடு இக்கிராமங்களில் படையினரின் பாலியல் பலாத்காரங்களும் இடம்பெற்று வருகின்றன. எதிர்ப்புத் தெரிவிக்கும் பெண்கள் புலிகள் எனக் கூறி படையினரால் கைது செய்யப்பட்டு பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றனர். அண்மையில் இவ்வாறு இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டு இதுவரை அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பது தெரியாமலே உள்ளது. இப்பகுதிகள் மட்டக்களப்பில் இருண்ட பகுதிகளாகவே காணப்படுகின்றதன் காரணமாக அரசின் இவ்வாறான அட்டூழியங்கள் வெளித் தெரியாமலே போய் விடுகின்றன.

### வாகரையிலும் குடியேற்ற முயற்சி:


வாகரை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் சிங்களவர்களைக் குடியேற்ற ஆலோசனை நடாத்தப்படுவதாக நம்பகரமாகத் தெரிய வந்துள்ளது. வாகரையின் வடக்கு எல்லையான வெருகல் தொடக்கம் தெற்கில் மாங்கேணிவரை உள்ள கடற்கரையை அண்டிய பகுதிகளிலேயே குடியேற்றங்களை அமைக்க ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிகின்றது.

**சத்தியேந்திரா**

### ஸ்ரீ.ல.சு.கட்சி

ஆட்சிக்காலத்தின் போது இப்பகுதிக் காணிகள் அனைத்தும் ஒருவருக்கு 50 ஏக்கர் என்ற வீதத்தில் சிங்களவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. 'தென்னந் தோட்டங்களை உருவாக்குவதற்கான காணிகள் வழங்கல்' என்ற போர்வையிலேயே இக்காணிகள் அன்று சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டன. ஸ்ரீறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமராக இருந்த காலத்தில் அவருக்கு வேண்டியவர்களுக்கே காணிகள் வழங்கப்பட்டன. இவருக்கும் வாகரையில் 90 ஏக்கர் காணி சொந்தமாக உண்டு. இவ்வாறு வழங்கப்பட்ட காணிகளில் எதுவுமே பயிரிடப்படாமல் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக அவை தரிசாகவே கிடக்கின்றது. இவை அனைத்தும் சிங்கள மக்களுக்கே வழங்கப்பட்ட காணிகள் என்ற காரணத்தினால் இக்காணிகளில் தெற்கில் இருந்து சிங்கள மீனவக் குடும்பங்களைக் கொண்டு குடியேற்ற இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. அதேபோல் மாங்கேணி என்னும் இடத்தில் உள்ள மர முந்திரிகைத் தோட்டத்திலும் கற்குடாவில் ஏற்கனவே குடியேற்றிய சிங்களவர்களைக் கொண்டு குடியேற்றவும் திரைமறைவில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்னறன.

இதன் மூலம் திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்களுக்கிடையிலான தமிழர்களது தொடர்பை துண்டிக்க அரசு நடவடிக்கை எடுப்பதை அவதானிக்கக்கூடிய தாக இருக்கின்றது. தமிழ் பேசும் மக்களது பிரதேசங்களை திட்டமிட்டுப் பிரித்தலினூடாக கிழக்கில் அவர்களை சிறுபான்மையினராக்கும் திட்டத்தை இராணுவத்தினரின் உதவியோடு அரசு செய்ய முற்படுவது அம்பலத்துக்கு வந்துள்ளது. இதை எதிர்த்து இன்றுவரை எவருமே குரல் எழுப்பாததும் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.




கொழும்புப் பல்கலைக்கழக -இந்து மன்றம் விவேகானந்தர் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிற சமயம் மேற்படி புதிய அரங்கு ஒன்றைத் தரிசிக்கக் கிடைத்தது. அதனைச் சம்பாதித்த அனைத்துக் கலைஞர்களுக்கும் வந்தனம்.

கொழும்பில் நடைபெறுகின்ற பெரும்பாலான நிகழ்வுகளை (கவனியுங்கள் ! நாடகம், அரங்கு என்று கூற வாய் கூசுகிறது) நாம் புறங்கையால் தட்டி விடுகிறோம். அவை விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவை ( அதனையும் புரிந்து கொள்ளுங்கள்)

# திருமலை தில்லைநகரில் அதிகாரிகளின் அடிவருடித்தனம்

நகரின் மத்தியில் உட்துறைமுக வீதி, கடற்காட்சி வீதி, வெலிங்டன் வீதி ஆகிய மூன்று வீதிகளையும் தொட்டுக் கொண்டிருக்கும் பிரதேசம் தில்லை நகர். அரசியல் வாதிகளால் மட்டும் தான் கஷ்டத்தில் மக்களை ஆழ்த்த முடியுமென்றில்லாமல் அடிவருடித்தனமான அதிகாரிகளால் கூட மக்களை இம்சிக்க முடியுமென்பதற்கு தில்லை நகர் ஒரு எடுத்துக்காட்டு.

1950களின் தொடக்கத்திலிருந்தே மூவின மக்களும் இங்கு சந்தோஷமாக வாழ்ந்து வருகிறார்கள். அடுத்த வேளை அவர்கள் உழைக்க வேண்டியிருந்த போதிலும் கூட நிம்மதியாகவும் ஒருவருக்கொருவர் அனுசரனையாகவும் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். 1987 இல் திருமலையில் வெடித்த கலவரம் காரணமாக சிங்கள மக்களும், 90ல் தமிழ் மக்களும் இடம்பெயர்ந்த போதிலும் திரும்பவும் அவர்கள் தத்தம் இடங்களில் குடியேறி வாழ்ந்து வருகிறார்கள்.

நிலைமை இவ்வாறு இருக்க அரசியல்வாதி ஒருவரின் உறவினர் சிலர் 87 இல் சிங்கள மக்கள் வெளியேறிய போது, அந்தக் காணிகள் தங்களுடையவை என்று வேலி போட முயன்றாரெனினும் இந்திய அமைதிப் படையினரால் எச்சரிக்கப்பட்டு துரத்தப்பட்டனர். அத்தோடு வாலைச் சுருட்டிக் கொண்ட அப்பேர் வழிகள் 90ல் தமிழ் மக்கள் அகதிகளான போது, பணத்துக்கு ஆசைப்பட்ட நில அளவையாளர் ஒருவரைக் கொண்டு, மக்கள் அற்ற காணிகளை அவசரம் அவசரமாக அளந்ததோடு அந்நிலங்கள் முழுவதும் தங்களுக்கே சொந்தம் என்று கூறி, திரும்பவும் தமிழ்மக்கள் வந்த போது குடியேற விடாது தடுக்க முயன்றனர்.

இதற்கு அப்பகுதியைச் சேர்ந்த மூவின மக்களும் எதிர்ப்பு தெரிவித்ததோடு விடயம் பொலிஸ் நிலையம் வரை சென்ற போது, அப்போதைய திருமலை பொலிஸ் பொறுப்பு அதிகாரியினால், அந்த நபர்கள் மீளவும் எச்சரிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார்கள். இதன் பின்னர் அவர்கள் அந்தக் காலப் பகுதியில் திருகோணமலை நகரமும் சூழலுக்குமான உதவி அரசாங்க அதிபரை நாடினர். அந்தத் தமிழ் உதவி அரசாங்க அதிபர் அரசியல்வாதியின் உறவினர்களின் உறவைப் பேணுவது தனது எதிர்காலத்திற்குப் பயன்படுமென்று நினைத்தாரோ என்னவோ அப்பகுதி மக்களுக்கு நிவாரணங்கள் வழங்க முற்று முழுதாக மறுத்து விட்டார். அதுமட்டுமன்றி அம்மக்களுக்கு வழங்கப்பட்ட புனர்வாழ்வு குடும்ப அட்டையின் பின்புறத்தில் தனது அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட வகையில் 'விசுவாசமிக்க' தில்லை நகர் கிராம சேவை உத்தியோகத்தரைக் கொண்டு **''அத்துமீறல் காணிகள்''** என்று சிவப்பு மையினால் வேண்டாத குறிப்பொன்றினை இடவைத்து தனது அடிவருடித்தனத்தை வெளிப்படுத்திக் கொண்டார்

இப்பிரச்சினை 93 ஜனவரியில் இடம் பெற்ற ஜனாதிபதி நடமாடும் சேவைக்கு அப்பகுதி மக்களால் எடுத்துச் செல்லப்பட்ட போது அவ்வதிகாரி தனது செல்வாக்கினால் பிரச்சினையை மேலிடத்துக்கு செல்லவிடாது தடுத்து விட்டார். அன்றிலிருந்து இன்றுவரை இப்பகுதி மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படுவதில் புறக்கணிப்புகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

இது ஒரு புறமிருக்க திருகோணமலை நகராட்சி மன்றமும் ஒழுங்காக இம்மக்களிடம் வரிகளை வசூலித்துக் கொண்டு, இம்மக்களின் தேவைகளில் அலட்சியம் காட்டி வருகிறது. நீர், மின்சார வசதிகளில் மாத்திரமல்ல, பாதை செப்பனிடலில் கூட இம்மக்கள் திட்டமிட்டுப் புறக்கணிக்கப் பட்டுள்ளார்கள். மழை நாட்களில் இவர்கள் முழங்கால் வரைஃ பாயும் வெள்ளத்தைக் கடந்தே தினமும் செல்கிறார்கள்.

தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட நகராட்சி மன்றம் இயங்கிய போது, நன்கு செப்பனிடப்பட்டு பேணப்பட்ட இப்பாதைகள் தற்போது குப்பையும், வெள்ளக்காடாகவுமே காட்சியளிக்கிறது. போதாக்குறைக்கு கடற்காட்சி வீதியில் உள்ள நகரசபை விடுதி வளவில் இருந்து வரும் கழிவு நீர் கூட இப்பகுதி மக்களின் பாதையூடாகப் பாயவிடுவதே வேதனைக்குரியது.

க.கோணேஸ்வரன்
திருகோணமலை

நன்றி - நூலகத்திட்டம்






**நான் ஒரு பெண்.**
**நான் ஒரு பெண்ணாக இருப்பதற்காகப் பெருமைப்படுகிறவள்.**

ஏனென்றால் நான் ஒரு பெண்
பெண்ணாக இருப்பதற்காகப் பெருமைப்படுகிறவள்.

என்னையும் என் போன்றவர்களையும் இந்தச் சமூகம் நோக்குகின்ற முறைக்கெதிராக குரல் எழுப்புமாறு நான் நிர்ப்பந்திக்கப்படுகிறேன். பெண்களை முழுமையாகவும், தனிநபராகவும், ஆண்கள் அனுபவிக்கும் முறைக்கெதிராகவும், நான் குரல் எழுப்புகிறேன். பெண்களைச் சிறுமைப்படுத்திப் பார்க்கும் முறை பெண்கள் கூட தம்மை அப்படிப் பார்க்கும் படி செய்து விடுகின்றது.

நான் ஒரு பெண்; மற்றப் பெண்களையும் போலவே அறிவுள்ளவள்; சிந்திக்கும் ஆற்றல் உள்ளவள். எனக்கென சொந்தமான புத்தியும் கொண்டவள்.; என்னுடைய சுயதேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக ஆண்களில் தங்கி நிற்பதற்கு நான் ஒன்றும் மூளை இல்லாதவளோ முட்டாள் பிரஜையோ அல்ல.

நான் உணர்வு பூர்வமாகவும் ஆனவள் மட்டுமல்ல எனக்கென எந்த யதார்த்த இலட்சியங்களை நான் உருவாக்கிக் கொள்கிறேனோ அவற்றையெல்லாம் அடையக் கூடியவளும் கூட.

எனக்கும், என்போன்றவர்களுக்கும் உரித்தான உறுதியும், சக்தியும் ஒரு பெண் என்ற முறையில் என்னிடம் இருக்கின்றன.

நானோ அல்லது மற்றப் பெண்களோ நம்பிக்கை இழந்த நிலையில் தன்னம்பிக்கை அற்றவர்களாய் சொந்தப் பாதுகாப்பிற்காகவோ, அல்லது சுயதேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காகவோ குடிவெறியிலும் சிகரெட் புகையிலும் மூழ்கின்ற இளம் ஆண்களின் கைகளைப் பற்றிக் கொள்ள விரும்புவதற்கு ஒன்றும் அழகான மூளை அற்ற பிராணிகள் அல்ல.

அப்படியென்றால், பெண்கள் தொடர்ச்சியாக கீழ்த்தரமான முறையில் சிறுமைப்படுத்தப்பட்டும், வக்கிர மனோபாவத்துடனும் சித்திரிக்கப்பட்டும், பொதுசன தொடர்புச் சாதனங்களில் விளம்பரப்படுத்துவது ஏன்? நான் சினிமாவுக்குப் போகும் போது ஒவ்வொரு முறையும், அதில் காண்பிக்கப்படும் விளம்பரங்களில் பெண்கள் சித்திரிக்கப்படும் விதங்களைக் கண்டு என்னை நானே இறுகக் கட்டிக் கொள்வதும், பற்களை நறநறவென கடித்துக் கொள்வதும் அருவருப்படைவதும் ஏன்?

இவை போன்ற, பெண்களுக்கெதிரான மோசமான கருத்துக்களை விட்டுவிடாது கட்டிக் காப்பாற்ற எமது சமூகம் வற்புறுத்துவது ஏன்? ஒவ்வொரு பெண்ணுக்கும் இருக்கின்ற உரிமைக்கான மதிப்பைப் படிப்படியாக அழித்து அவதூறு செய்யும் இவ்வாறான விளம்பரங்களை அரசாங்கம் அனுமதிப்பது ஏன்?
திரைகளிலும் பத்திரிகைகளிலும் இது போன்ற சித்திரிப்புகளை பார்க்கிற போதெல்லாம் பெண்களும் சரி, ஆண்களும் சரி ஒரே மாதிரியாக எவ்வித எதிர்ப்புணர்வுமின்றி அமைதியாக இருக்கிறார்களே ஏன்? நாம் பார்ப்பதையெல்லாம் உண்மையென நம்புமளவிக்கு எமது மூளைகள் சலவை செய்யப்பட்டு விட்டதனாலா? எனவே அவற்றைப் பற்றிக் கதைப்பதில் அர்த்தம் இல்லை என்பதனாலா?

**நான் ஒரு பெண்.**
**ஒரு பெண்ணாக இருப்பதற்காகப் பெருமைப்படுகிறவள்.**

நான் தகுதியும், சுயமரியாதையும் எனக்குரிய பெருமையையும் மதிப்பையையும் கொண்ட ஒரு மனித ஜீவி. அப்படியெனில் என்மீதும் என் போன்றவர்கள் மீதும் ஆண்கள் தொடர்ச்சியாக ஓநாய்கள் போல் சீழ்க்கையடிப்பதும், ஏளனமாகச் சிரிப்பதும், இகழ்ச்சியுடன் பேசுவதும் ஏன்? மிருகங்களுக்கு மட்டுமே செய்யக்கூடிய பாணியிலான தொல்லைகளை அவர்கள் தொடர்ந்தும் எமக்குத் தருவது ஏன்?

பாலியல் தொல்லைகள் அவை எந்தவடிவில் வந்தாலும் கூட பெண்களை மிக ஆழமாகச் சிறுமைப்படுத்துகின்ற, இழிவுபடுத்துகின்ற தன்மையையே வெளிப்படுத்துகின்றன. மெல்லிய உடலமைப்பும் கருணையும், அழகும் உடைய, ஆண்களின் பாவனைப் பொருட்களாக, அவர்களுக்கு மகிழ்வூட்டும் பொருட்களாக இருக்க வேண்டியவர்களே பெண்கள் என்ற கண்ணோட்டத்திலிருந்தே இப்போக்கு எழுகிறது.

பெண்கள் உடமை கொள்வதற்கும், அனுபவிப்பதற்கும், பின் தேவையற்ற போது வீசி விடுவதற்குமான பாலியல் பொருட்கள் மட்டுமே. இவற்றை உடலியல்ரீதியாக அடையமுடியாது போகின்ற போது பெண்களை தங்கள் மனம் போன போக்கில் எல்லாம் கேளிக்கை செய்கின்றார்கள்; தங்களுக்கு அடிமைப்பட்டுப் போக ஒருத்தி வரும்வரை இவ்வாறு மனத்தளவில் அனுபவிக்கிறார்கள்.

நான் மனிதத் தன்மையுள்ள ஒரு பெண். நான் மனித ஜீவியாக மதிக்கப்படுவதற்கும் உரிமையுடையவள். ஆண்கள் தாம் விரும்பியபடி என்னை மதிப்பிடுவதற்கும், காதலிப்பதற்கும், மற்றப் பெண்களைப் போலவே நானும் ஒன்றும் இறைச்சித் துண்டல்ல. என்னை அடிமையாக்கி அவர்களின் பரந்த எதிர்ப்பார்ப்புக்களை வரிசையாகத் திருப்தி செய்த பிறகு, கழித்து விடுவதற்கும் நான் ஒன்றும் இறைச்சித் துண்டல்ல.

**நான் ஒரு பெண்.**
**அதற்காகப் பெருமைப்படுகின்ற ஒருத்தி.**

உலகம் எனது அழகை வரைவிலக்கணப்படுத்தியபடி அல்லாமல் எனது வரைவிலக்கணப்படி நான் அழகான பெண் அதற்காகப் பெருமைப்படுகிறவள். என்னுடைய உடற்பலத்தில் என்னுடைய சகிப்புத் தன்மையில் எனது விடா முயற்சியில் எனக்குள்ளேயே ஒரு பெண்ணாக இருப்பதில் இருக்கின்றது என்னுடைய அழகு. என்னுடைய முழுமையும் பெண்ணாக இருப்பதிலேயே என் அழகு இருக்கிறது. நான் பார்க்கும், அலங்கரிக்கும், நடக்கும் போக்குகளில் இது ஒன்றும் தங்கியிருக்கவில்லை.
அப்படியானால் பெண்களை நீச்சலுடையில் அணிவகுக்க வைக்கின்ற வக்கிரமான அழிவு நடவடிக்கைகளில் பெண்களை ஈடுபடுத்தி, அவர்கள் ஆழகாகவும் மெலிந்த உடல்வாகு உடையவர்களாகவும் இருக்கிறார்களா என்று இன்றைய பெரிய விமான சேவையாளர்கள் எல்லாம் பரீட்சித்துப் பார்ப்பது எதற்காக?

இந்த வகையான முறை கெட்ட செயல்களுக்கெல்லாம் பெண்கள் தம்மை ஈடுபடுத்த அனுமதிப்பது ஏன்? பெண்களுக்கு வேலை வாய்ப்புகள் வேண்டுமாயின் முக்கியமாக வழவழப்பான அழகான ஒடுங்கிய கவர்ச்சிகரமான உடல் அமைப்புகளைப் பெண்கள் கொண்டிருக்க வேண்டும் என்று கூறுபவர்களின் முகங்களில் பெண்கள் காறித்துப்பாதது ஏன்?

இவைகள் எல்லாம் ஒரு வகைப் பாலியல் சுரண்டல்களோ என பெண்கள் இன்னமும் உணராமல் இருப்பது ஏன்? பெண்களின் முக்கியத்துவமும், ஆளுமையும் பார்வையிலேயே கணிப்பிடப்படுகின்றன. அவளும் தனக்கான கணீப்பீட்டை மற்றவர்கள் பார்க்கும் முறையிலேயே செய்து கொள்கிறாளே ஏன்?

**நான் ஒரு பெண்.**
**ஒரு பெண்ணாக இருப்பதற்காகப் பெருமைப்படுகிறவள்.**

மற்றெல்லாப் பெண்களைப் போலவே நானும் எனது உடலுக்காகப் பெருமைப்படுகிறேன். ஏனென்றால் என் உடல் ஆண்களுடையதில் இருந்து வித்தியாசமானதாயும் தனித்துவமுடையதாயும் இருக்கிறது. மற்றப் பெண்களைப் போலவே நானும் ஒரு பெண்ணாயிருப்பதற்கான எனது இயற்பண்புகளுக்காகப் பெருமைப்படுகிறேன். எனது பெண்மைக்காகவும், அதன் பாலியற் தன்மைக்காகவும் கூட. அப்படிப் பெருமைப்படுவதற்கான சகல உரிமைகளும் எனக்கும் இருக்கின்றன.

நாங்கள் ஆடைகளை அணிவதும், அல்ஙகாரப்படுத்துவது, தலைவாடுவதும் நாங்கள் எங்களுக்காகச் செய்பவை. மற்றவர்களின் கேடு கெட்ட மகிழ்ச்சிக்காக அல்ல. ஏனெனில், நாங்கள் நாங்களாகவும் பெண்களாகவும் இருப்பதில் பெருமைப்படுகிறோம்.

எனவே ஒரு பெண் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்படுகின்ற போதெல்லாம், அவள் கவர்ச்சிகரமாகவும் உணர்வுகளைத் தூண்டும் விதத்திலும் உடையணிந்திருந்ததே அதற்குக் காரணம்; எனவே அவளுக்கு அது தகும் என்று இன்னமும் இச்சமூகம் விடாப்பிடியாக கூறி வருவது ஏன்? இக்குற்றச்சாட்டையே பாலியல் பலாத்காரம் செய்யும் கயவர்களும் பெண்கள் மீது சுமத்துவது ஏன்? எட்டு வயதுப் பெண்பிள்ளை மிகவும் கடுமையான முறையில் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்ற வேளைகளில் கூட ஏனைய பெண்களும் இக்குற்றச்சாட்டை நம்புவது ஏன்?

ஆண்கள் கவர்ச்சியாக ஆடையணிந்து அலங்கரித்துச் சென்றால் குற்றம் சாட்டப்படுகின்றார்களா? அல்ல; அவன் அப்படி அழகாக இருந்து கொண்டு பாலியல் தேவைகளுக்காக அழைக்கும் போது குற்றம் சாட்டப்படுகின்றானா? நான் நினைக்கவில்லை.

அப்படியானால் அவர்களுக்கெதிராக நடாத்தப்படும் மிலேச்சத்தனமான தாக்குதல்களுக்கு அவர்களே பழிகாரர்களாக்கப்படுவது ஏன்? இந்தப் பாலியல் பலாத்காரம் அவர்களை நாதியற்றவர்களாய் குற்றவாளிகளாய் குறுகிப் போக வைப்பது ஏன்? இந்தச் சமூகப் பெண்களைப் பாராபட்சமாக நடாத்துவதால் அல்லாமல் வேறு எதனால் இவையெல்லாம் நடக்கின்றன்.

**நான் ஒரு பெண்.**
**ஒரு பெண்ணாக இருப்பதில் பெருமைப்படுகிறேன்.**

இந்த உலகம் என்னைச் சுரண்டியும், மோசடி செய்தும், சிறுமைப்படுத்தியும் என்னை ஒரு காட்சிப் பொருளாக குறைத்து அவமதித்தும் நடாத்தினாலும் கூட நான் நானாக இருப்பதற்காகப் பெருமைப்படுகிறேன்.

**மூலம் :ஜக்குலின் அன் சுரின்**

**தமிழில் : செல்லம்மா**

## ஒரு விடியற்காலைச் சேவல்



காலா காலமாக கர்வப்பட்ட
அவர்களும்;
அந்தச் சேவலும்!

பகல் போகும், இரவு வரும்
நீண்ட கறுத்த அரவமாய்
எங்கும் ஊரும்!

தூக்கம் துறந்து விடியலுக்காக
நிர்வாண விழிகளின்
நீண்ட கால இருப்பு அது!

நட்சத்திரங்கள் சில உதிரும்
நிலவு ஓடி ஒழியும்
சூரியனைத் தேடி
தவம் நடக்கும்
சண்டை செய் வீரனைப் போல
'சடசட 'வென்றடித்து
சேவல்
கொக்கரக்கோ -பாடும்...
கிழக்கின் கோடியில் விடியல்!

அன்றும் அப்படித்தான்
இரவு வந்தது-
மேகம் சிவந்து
பூமி பதைந்து
வானம் உடைந்ததாய்...
பேரிரைச்சல்-
ஆர்ப்பரித்த அவர்களும்,
மூச்சிறைத்த சேவலும்....
எங்களால் விடியுமென்று
எல்லோரும் நம்பினர்;
எனினும்,
கூவுவாரில்லாமலே பொழுது,
-அல்லது தேசம்
புலர்ந்து கொண்டிருந்தது?

ஏ.ஜீ.எம்.ஸதக்கா

## சிறகு முளைத்த கவிதை

கவிதை கூட்டமெல்லாம்
பாட்டம்பாட்டமாக வந்து
என் மா மரத்தில் குந்தியது.

என்ன அதிசயம்!
கவிதைக்கெல்லாம் சிறகு முளைத்து விட்டது
எல்லோரும் கதைத்துக் கொண்டு
எட்டி எட்டி பார்த்தார்கள்.

ஒரு கவிதை
இன்னொன்றுக்கு ஏறி மிதித்தது.
இன்னும் சில
சொண்டுக்குள் சொண்டை
ஒட்டிக் கொண்டு நின்றன.

காகமும் குயிலும்
மரத்தை சுற்றி
கத்திக் கத்தி பறந்தது.
அங்கு நின்ற ஆண்கவிதையொன்று
ஒரு காகத்தின் தலையில்
சிறுநீர் அடித்தது
காகம் மண்ணில் விழுந்தது
எல்லாக் கவிதைகளும்
கைதட்டிச் சிரித்தது.

மாம்பிஞ்சுகளை பறித்து
கடித்துத் துப்பியது ஒரு வெறிபிடித்த கவிதை.

மா மரம் அசையாமல் நின்றது
காற்றைக் கைது செய்து கொண்டது கவிதைகள்.

உலகம் அழியப் போகிறது
கவிதைக்கெல்லாம் சிறகு முளைத்து விட்டது.
சுதந்திர காற்றுக்கூட இனி நமக்கு இல்லை
என்று தங்களுக்குள் பேசிய வாறு
அங்குமிங்கும் ஓடியது பூனையும் -நாயும்

முகயட் அபார்

# சாதி அமைப்பும் யாழ்ப்பாணத் தமிழர்களும்

## ஒரு சமூகவியல் பரிசீலனை

வ.ஐ.ச.ஜெயபாலன்

(சென்ற இதழ் தொடர்)

நூற்றாண்டு காலமாக இடம்பெற்று வருகின்ற சமூக மேம்பாடுகளின் பின்னரும் கூட வர்க்க அமைப்பு அதிமேல், அதி கீழ் மட்டங்களில் சாதியமைப்புடன் ஒத்து வருகிற தன்மை பெரிதும் பாதிக்கப்படவில்லை. பாதிப்படைந்து வருகின்ற நடுத்தர வர்க்க மட்டங்களில் தான் சாதி ஒடுக்குதலுக்கெதிரான கிளர்ச்சிகளும், சாதிவாரியான அரசியல், பொருளாதார வாய்ப்புகளுக்கான போட்டிகளும் வெளிப்பட்டு வந்திருக்கிறது.

19ம் நூற்றாண்டில் பிற்கூற்றில் யாழ்ப்பாணத்திலும், தமிழகத்தின் சில பகுதிகளிலும், மேற்தட்டுச் சூத்திரரான வெள்ளாளர், கலாசார ரீதியாக ஒத்தும், சமூக பொருளாதார ரீதியாக சற்றுக் கீழ்ப்பட்டும், கிட்டியும் இருந்த மடப்பள்ளிகள், அகம்பாடியர் போன்ற பல்வேறு சாதிகளை உள்வாங்கி 'சாதிவாரிவிரிவாக்கம்' அடைந்தமையும், 'பெரும்பான்மைத்தன்மை' பெற்றமையும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும். இத்தகைய சாதிவாரி விரிவாக்கம், பெரும்பான்மைத் தன்மை அடைவதும் சாதியமைப்பின் ஒரே உச்சச் சாதியும், ஒரே உச்ச வர்ணமுமான பிராமணருக்கு மட்டும் சாத்தியமில்லை. சூத்திரர் மத்தியில் சாதிவாரி விரிவாக்கமடைதலும், பெரும்பான்மைத் தன்மை அடைதலும் கால காலமாக இடம்பெற்று வருகிற ஒரு நிகழ்வு என நான் கருதுகிறேன். மாறுபட்ட சமூக பொருளாதார அரசியற் சூழலில், பல்வேறு சாதியினரிடை உருவாகிற சமூக மேம்பாட்டு நிலைமைகளும், பல்வேறு ஒடுக்கப்பட்ட சாதியினரது கிளர்ச்சிகளும், இத்தகைய சாதிவாரிவிரிவாக்கத்துக்கு தூண்டுகோலாக அமைந்தது.

சாதி விரிவாக்கம் பல்சாதி வருணங்களுக்கும் மட்டுமே சாத்தியம். சாதிவாரியாக விரிவடையமுடியாத நிலையில், சமூக பொருளாதார ஆதிக்கம் உள்ள பிராமணரின் வலதுசாரி அணி இந்துசமயவாரியாக விரிவடைந்து அரசியல் ஆதிக்கத்தைக் கைப்பற்ற எடுக்கும் முயற்சியே இன்றைய இந்திய அரசியற் சிக்கலின் அடிப்படை.

கோட்பாட்டு ரீதியாக வர்க்க அமைப்பு, மேல்வர்க்கம் சிறுத்தும், கீழ்வர்க்கங்கள் படிப்படியே பெருத்தும் செல்கிற வகையில் நேர்ப்பிரமிட் மாதிரிகை வடிவிலும், சாதியமைப்பு எதிர்மாறாக மேல்சாதியினர் பெருத்தும், கீழ்ப்பட்ட சாதியினர் சிறுத்தும் தலைகீழ்ப் பிரமிட் மாதிரிகை வடிவிலும் அமையும் எனவும் ஆய்வாளர்கள் விளக்கியுள்ளனர். எனினும் உயர்சாதியினருள் சாதிவாரி விரிவாக்கமும், பெரும்பான்மைத் தன்மையும் அடையமுடியாத பிராமணர்கள் இந்த மாதிரி அமைப்புக்கு விதிவிலக்காவர்.

சாதிவாரி விரிவாக்கமும், பெரும்பான்மைப் படுதலும் பிராமணருக்குச் சாத்தியப் பட்டிருப்பின் சாதிவாரிச் சமூகங்களின் வரலாறு- உதாரணத்துக்கு தமிழக வரலாறு - வேறுதிசையில் நகர்ந்திருக்கும்.

பிரிட்டிஷ் நிர்வாகிகள் உருவாக்கிய பிராமணர் - பிராமணர் அல்லாதார் பகுப்பும், அதை அடியொற்றி பிராமணர் ஆதிக்கத்துக்கு எதிராக மேற்தட்டுச் சூத்திரசாதிகளைச் சேர்ந்தவர்கள், நீதிக்கட்சியின் தலைமையில் திரட்டிய பிராமணரல்லாதார் அணியும் இயல்பாகவே தமிழக மாநிலப் பரப்பில் வாழ்ந்த பல்வேறு சாதியினரையும், பல்வேறு மதத்தினரையும் ஓரணிக்குள் கொண்டு வந்தது. இத்தகைய பரந்து பட்ட தன்மையே, மேல்மட்டச் சூத்திரரின் பிற்போக்கு அணியின் தலைமையில் இயங்கிய நீதிக்கட்சிக்கு முற்போக்குத் தோற்றத்தைத் தந்தது.

பெரியார் தலைமையிலான திராவிட இயக்கத்தின் பங்களிப்பு, திராவிடத் தேசிய வாதத்தின் கீழ், தமிழ் மாநிலத்தைப் பாரம்பரியத் தாயகமாகக் கொண்ட பிராமணர் அல்லாதோரணியைச் சேர்ந்த, தெலுங்குத் தமிழர்களையும், ஏனைய திராவிட இனத்தமிழர்களையும், முஸ்லீம்களையும், தமிழர்களாக, பிரதேசவாரித் தமிழ் தேசியத் இனமாக ஒருங்கிணைத்தமையும், மதச் சார்பு அற்ற வகையில் பிரதேச வாரியாக தமிழ்த் தேசிய வளர்ச்சியை முன்னெடுத்துச் சென்றமையும், பெரியாரது சாதி ஒடுக்குதலுக்கு எதிரான பஞ்சமர் (தலித்) சார்பு நிலைபாடும் தான்.

பெரியாரோ, அவரது சீடர்களோ, பெரியாரின் முற்போக்கான சாதி வாரி நிலைப்பாடான பஞ்சமர் சார்பு நிலைப்பாட்டை அரசியல் ரீதியாக வளர்த்தெடுத்துத் திராவிட இயக்கத்தின் மையக் கருத்தாக்கவில்லை. பெரியாரணியினர் தாம் நீதிக் கட்சியினரிடம் இருந்து வரித்த சாதிவாரியான பிராமணர் எதிர்ப்பை, வர்க்க அரசியல் ரீதியாக மேற்தட்டுப் பிராமணரின் பிற்போக்கு அணியான பிராமணியத்துக்கும், அதையொத்த ஏனைய சாதியினரின் பிற்போக்கு அணிகளுக்கு எதிரான இயக்கமாகவும் வளர்த்தெடுக்கவில்லை. இத்தகைய அணிதிரள்கை பிராமணர் மத்தியிலுள்ள முற்போக்கான சக்திகளை, தமிழ்த் தேசிய இன மேம்பாட்டுக்கு சார்பான சக்திகளாகவும் வளர்த்தெடுத்திருக்கும். துரதிர்ஷ்டவசமாக, இத்தகைய அரசியல் வளர்ச்சி நிலையைத் திராவிட இயக்கங்கள் எய்தவில்லை. பொதுவாக திராவிட இயக்கங்களின் இன்றைய போக்கு வரலாற்றை மேற்தட்டுப் பிராமணரின் பிற்போக்கு அணியிலிருந்து பறித்து, மேற்தட்டுச் சூத்திரரின் பிற்போக்கு அணியின் கையில் கொடுக்கிற போராட்டமாகவே தமிழர்களது போராட்டங்களைக் குறுக்கிவிடும். திராவிட இயக்கங்கள் மத்தியில் பெரியார் அவர்களது முற்போக்கான பங்களிப்பான பிரதேசவாரித் தமிழ்த் தேசிய இனவளர்ச்சி, பஞ்சமர் சார்பு நிலைபாடு என்பவற்றுக்கு எதிரான வக்கரிப்புப் போக்கு ஏற்கனவே துலாம்பரமாக வெளிப்பட ஆரம்பித்துள்ளது. #2

இன்றைய சமூக பொருளாதார அரசியல் நிலைமைகளில், கோவில்சார் கலாசார சக்திகளும், நிலம்சார் பொருளாதார சக்திகளும் மட்டுமன்றி, உயர்சாதியினரின் அரசியல் ரீதியான பெரும்பான்மைப் பலமும், அவர்களது உயர் வர்க்கப் பலமுமே சாதியமைப்பைக் கட்டிக் காக்கிற முக்கியமான காரணிகளாக உள்ளன. சாதியமைப்பின் ஒடுக்கும் தன்மையைத் தகர்ப்பதற்கு அவசியப்படுகிற கடுமையான நிலச் சீர்திருத்தம் போன்ற சமூக பொருளாதார கலாசார அரசியல் சீர்திருத்தங்களுக்கு தடையாக நிற்கிற சக்திகளும் இவை தான்.

கற்பனையாக, சாதியமைப்பின் தலைகீழ்ப் பிரமிட் மாதிரிகை ஒன்றில் இருந்து, மிகப் பெரும்பான்மையான சூத்திரரை நீக்கிப் பார்த்தால், எஞ்சியிருக்கிற மேல்சாதியினரான சிறுபான்மைப் பிராமணரால் சாதியமைப்பைக் கட்டிக் காத்திடுதல் இயலாதென்பது புலனாகும். இத்தகைய சூழலில் சாதியமைப்பு தகர்ந்திட ஆரம்பிக்கும். உண்மையில் இன்றைய சமூக அரசில் சூழலில், மேற்தட்டு பிராமணரும், மேற்தட்டு சூத்திரரும் தம்முள் மோதிக் கொண்டே சாதியமைப்பைக் கட்டிக் காத்து வருகின்றனர்.

தென்னாசியாவில் மிக மோசமான சாதியொடுக்குதல் நிகழும் பிரதேசங்களில் ஒன்றாக யாழ்ப்பாணக் குடாநாட்டைக் குறிப்பிடலாம். யாழ்ப்பாண சமூக அமைப்பில் பிராமணருக்கு எவ்வித முக்கியத்துவமும் இல்லை. மிகவும் கொடூரமானதும் இறுக்கமானதுமான யாழ்ப்பாணத்துச் சாதியமைப்பை இதுகாறும் கட்டிக் காத்து வருகிறது மேற்தட்டு வெள்ளாளனே. இதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது.

உண்மையில் இலங்கை இந்தியா போன்ற பல்லின சாதிவாரிச் சமூகத்தில் முற்போக்கான நிலைப்பாடு உழைக்கும் வர்க்க பஞ்சமர் சார்பு, தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை சார்பு, பெண்ணிலைவாத சார்பு நிலைப்பாடாகும். பெரும்பான்மைத் தன்மையற்று, பல்வேறு பிரிவினராகப் பிளவு பட்டுக் கிடக்கும் பஞ்சம சாதியினர்கள், தம்முள் ஒருமைப்படுவதும், அரசியல் ரீதியாக உழைக்கும் பஞ்சமர் நிலைப்பாட்டிலிருந்து, பிராமணிய பிற்போக்கு அணிகளுக்கெதிராக மட்டுமன்றி, சூத்திர சாதிகளினதும், ஏனைய மத்திய சாதியினரதும், பிற்போக்கு அணிகளுக்கெதிராகவும், சகல சாதியினரையும் பலமாக அணிதிரட்டுவதும் அவசியம்.

சாதிவாரியான தென்னாசிய சமூகங்களில் செல்வம் மட்டுமே தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவருக்கு சமூக கலாசார மேன்மையையோ, ஆதிக்கத்தையோ ஈட்டித்தந்துவிடாது. செல்வந்தராகிவிட்ட மேற்படி நபர் தமது வர்க்கரீதியான அந்தஸ்தைப் போராடி நிலைநிறுத்துவதாகத் தீர்மானித்தால் கூட தனது வர்க்க அணியையல்ல; தனது சாதி அணிகளையே சார்ந்திருக்க நேரிடும்.

வர்க்கரீதியாக பெரும்பான்மையாக இருக்கும் உழைக்கும் வர்க்கத்தினர் சாதிவாரியாகப் பல்வேறுபட்டு சிறுபான்மையினராகக் குறுகிப் போவதும், வர்க்க ரீதியாகச் சிறுபான்மையினராக இருக்கும் மேல்வர்க்கத்தினர் சாதிவாரியாக பெரும்பான்மையினராக விரிவடைவதும் தென்னாசிய சமூக அமைப்பின் சிக்கலான அம்சங்களாகும். இது இலங்கைக்கும் பொருந்தும்.

### யாழ்ப்பாணத்தில் சாதியமைப்பு

இலங்கைத்தீவில் நிலவுடமை அமைப்பையும் சாதி அமைப்பையும் சிங்கள அமைப்பும் தமிழமைப்புமென இரு பிரிவுகளாக வகுக்கலாம்.

சிங்கள அமைப்பில் கோட்பாட்டுரீதியாக நிலம் தனியார் உடமை அல்ல. கோட்பாட்டு ரீதியாக சிங்கள அமைப்பின் நிலம் அரசனுக்குச் சொந்தமானது. சாதிவாரிச் சேவைகளுக்காக (ராஜகாரியம்) #3. எல்லாச் சாதியினரும் நிலத்தை மானியமாகப் பெறுவார்கள். 'ரொடி' போன்ற ஓரிரு சிறுசாதிகள் புறநடையாக இருப்பினும் சாதிவாரிப்பணிகளுக்காக எல்லாச் சாதியினருக்கும் மானியமாக - அளவு, தரம் ரீதியான பேதங்கள் இருப்பினும் -நிலம் கிட்டும். கோட்பாட்டுரீதியாக ஆண்வாரிசு இன்றி இறத்தல், சாதிவாரிப் பணிகளை ஆற்றத் தவறுதல் என்பவற்றுக்காக அரசன் நிலத்தைப் மீளப் பெற முடியும். ஆனால் மேற்படி நிலம் எந்தச் சாதியைச் சேர்ந்தவருக்குச் சொந்தமாக இருந்ததோ அதே சாதியைச் சேர்ந்த ஒருவருக்கே திரும்பவும் வழங்கப்பட வேண்டும். அளவு, தரம் தொடர்பான மாறுபாடுகள் இருப்பினும் உற்பத்திக்காரணியான நிலம் எல்லாச் சாதியினருக்கும் பகிரப்பட்டு இருந்த நிலைமையினாலும், கிராமங்கள் தனிச்சாதி அடிப்படையில் அமைந்திருந்த நிலைமையாலும், சிங்களப் பகுதிகளில் பல்வேறு சாதியினரிடையே சுதந்திரத் தன்மை நிலவியது. அங்கு வர்க்க ஒடுக்குதல்கள் சாதிவாரித் தன்மை பெறுகிற வாய்ப்பும், சாதி ஒரு கொடுமையான ஒடுக்கும் அமைப்பாக தோற்றம் பெறும் வாய்ப்பும் - ஒரு சில பிரதேச புறநடைகளுடன் - குறைவாகவே இருந்தது. இத்தகைய சமூக, பொருளாதார பின்னணியினால் சிங்களப் பகுதிகளில் அரசியல் ரீதியாக சாதிவாரியாக அணிதிரளவும் வளங்களுக்கும் வாய்ப்புகளுக்குமாக சாதி வாரியாகப்போட்டியிடவும் தக்க சூழல் அங்கு உருவாகியது. இத்தன்மை கண்டியை விட கரையோர சிங்களப் பகுதிகளில் அதிகம் இருந்தது. இதற்கு அமரபுர நிக்காயாவின் தோற்றமும், பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் கரையோரச் சிங்களப் பகுதிகளில் மையப் பட்டமையும் தக்க சான்றாதாரமாகும்.

சாதி அமைப்பு இறுக்கமானதாகவும் கொடூரமானதாகவும் பலப்பட்டிருக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டில், பெரும்பான்மையினராகவும், பெரும்பாலான நிலத்திற்கும் ஏனைய வளங்களுக்கும் உடமையாளர்களாகவும், கல்வியில் மேம்பட்டும், சமூக பொருளாதார அரசியல் ஆதிக்கத்தைக் கொண்டிருக்கிறவர்களுமான வெள்ளாளரது இயக்கமான 'யாழ்ப்பாணியமே' உள்ளது. இது தமிழகத்து மேல்வர்க்கப் பிராமணர்களது இயக்கமான பிராமணீயத்துடன் ஒப்பிடக் கூடிய யாழ்ப்பாணத்து உயர்சாதி பிற்போக்கு சமூகசக்தியாகும்.

தமிழரது நிலவுடமை அமைப்பு தனியார் நிலவுடமை அமைப்பாகும். கண்டிய சிங்கள அரசின் கீழ், தமிழ், முஸ்லீம் வன்னிமைத் தலைவர்களால் பரிபாலிக்கப்பட்ட கிழக்கு மாகாண தமிழ்ப் பகுதிகளில் கூட சிங்கள நிலவுடமை அமைப்போ, சாதியமைப்போ நிலவவில்லை. தமிழரது நிலவுடமையமைப்பான தனியார் உடைமை அமைப்பும் தமிழ் சாதி அமைப்புமே அங்கும் நிலவியது. திருகோணமலையில் யாழ்ப்பாண அடிமை முறை நிலவியமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

சிங்கள சாதியமைப்பில் கண்டியச் சிங்களப் பகுதிகளிலும் சரி, கரையோரச் சிங்களப்பகுதிகளிலும் சரி, வெள்ளாளரின் சிங்களப் பிரதியான 'கொவிகம' சாதியினரின் தொகைரீதியான, கலாசார ரீதியான முதன்மை இருந்தது. தமிழ் சாதியமைப்பில் யாழ்ப்பாண குடாநாட்டின் வெளியே வன்னி மாவட்டத்தில் சரி, கிழக்கு மாகாணத்தில் சரி வெள்ளாளர் முதன்மை இருக்கவில்லை. யாழ்ப்பாணத் தமிழரது சாதியமைப்பின் முக்கிய அம்சம் சாதிவாரி விவசாய அடிமை முறையாகும். இத்தகைய முறைமை சிங்களவர்கள் மத்தியில் அறியப்படவில்லை.

தமிழரது சாதியமைப்பை யாழ்குடாநாட்டின் சாதியமைப்பு, ஏனைய தமிழ்ப் பிரதேசங்களின் சாதியமைப்பு என இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

யாழ்ப்பாணத்துச் சாதிவாரிச் சமூகத்தை, சுதந்திரர், அடிமைகள் (சாதிவாரி உழைப்புக்காக சுதந்திரனான தனியார் ஒருவனுடனும், அவனது நிலத்துடனும் பிணைக்கப்பட்டவர்கள்) , குடிமைகள் (தனியாருடனோ நிலத்துடனோ இணைக்கப்படாத போதும் சாதிவாரிச் சேவைகளுக்காக கோவிலுடனும், கிராமங்களுடனும் இணைக்கப்பட்டு, சொந்தக் குடியிருப்பில் வாழ்பவர்கள்) என்று மூன்று பெரும் பிரிவுகள் பிரிக்கலாம்.

யாழ்ப்பாணத்தின் குடிமைச் சாதிகள் பல்வேறுபட்டவர்கள். மிகச் சிறுபான்மையானவர்கள். இவர்களுட் பெரும்பான்மையினரான வண்ணார் கூட, மொத்தக் குடித்தொகையில் ஏறக்குறைய 1.7 சதவீதம்தான். இவர்கள் கிராமத்து வெள்ளாளர் முழுமைக்கும் சேவை வழங்க வேண்டியவர்கள். இவர்கள் குறித்த ஒரு வெள்ளாளரின் நிலத்துடனோ, பணிகளுடனோ பிணைக்கப்பட்டவர்கள் அல்ல. தத்தமது சொந்த நிலத்தில் வாழ்ந்த இவர்கள் கோட்பாட்டுரீதியாகப் பெரும்பாலும் சுதந்திரமானவர்கள்.

(வரும்)

#2 திராவிட இயக்கத் தலைவர்கள் தம்மைச் சூத்திரர் என அடையாளப்படுத்திப் பேசுவதும், தமக்கு மாறான கருத்துள்ள திராவிடத் தமிழர்களை மலையாளிகள், கன்னட, தெலுங்கர்கள் எனக் குறிப்பிட்டு இழிவு செய்வதும், திராவிட இயக்கங்களின் தலைமைகள் வக்கரித்து, நீதிக் கட்சித் தலைமையின் தன்மைப் பெறுகின்ற தன்மையையே காட்டுகிறது. தமிழக மாநில எல்லைகளுள் பாரம்பரியமாக வாழ்கிற 1940,50களில் பெரியாரின் இயக்கத்தால் தமிழ் தேசிய இனமாக ஒருங்கிணைக்கப்பட்டவர்களை அந்நியர்களாகப் பார்க்கிற போக்கு வக்கிரமான போக்காகும்.

#3 இராஜகாரிய ஊழியம் என்பது மரபுரீதியாக குடிமக்கள் அரசுக்கு வழங்க வேண்டிய இலவச உழைப்பு. (corve)
வெட்டி வேலை என்று குறிப்பிடப்படுவதும் உண்டு.

வன்னிமை, வன்னிமைத் தலைவர்கள்.

துரும்பர்: சாதிவாரி அடிமைகளின் சலவைத் தொழிலாளர்கள். இவர்களின் காட்சியே தீட்டு எனக் கருதப்பட்டதால் இரவு நேரங்களில் மட்டும் நடமாட அனுமதிக்கப்பட்டனர். அதுவும் கூட தமது வருகையைத் தெரிவிக்கவும் தமது காலடியை அழிப்பதற்குமாக காவோலையை இழுத்துக் கொண்டே அவர்கள் நடமாட வேண்டும்.

நன்றி - நூலகத்திட்டம்



இலங்கையில் அண்மைக்காலமாக எப்போதுமில்லாதவாறு சிறுவர்கள் பலாத்காரம் செய்யப்படுதல் உட்பட சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகச் செயல்களுக்கு உள்ளாதல் என்பன அதிகரித்துள்ளதாகப் பல நிகழ்வுகள், செய்திகள் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இத்தகைய சம்பவங்களுக்குத் துணை புரிந்த காரணிகளாக பல அம்சங்களைக் குறிப்பிடலாம், எனினும் அரசின் திறந்த பொருளாதாரக் கொள்கையின் மூலம் வழங்கப்பட்டுள்ள உல்லாசப்பிரயாணச் சலுகைகளும், அரசு வேறு துறைகளில் காட்டும் அக்கறையை சிறுவர்களின் விடயத்தில் காட்டாத போக்கும் இவற்றில் பிரதானமானது எனலாம்.

உலகில் யுத்த சூழ்நிலை காரணமாக கடந்த 10 ஆண்டுகளில் 15 லட்சம் சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர். அத்துடன் நாற்பது லட்சத்துக்கும் அதிகமானோர் சித்த சுவாதீனம், மற்றும் அங்கவீனத்துக்கும் ஆளாகியுள்ளனர். இலங்கையில் உள்நாட்டு யுத்தம் காரணமாக சுமார் ஐந்துலட்சம் சிறுவர்கள் 'அனாதை'யாகி உள்ளனர். அனாதையாகியுள்ள பலரில் ஒரு பகுதியினர் ஆதரவற்றநிலையில் இவ்வகையான பாலியல் துஷ்பிரயோகங்களில் பயன்படுத்தப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சிறுவர்கள் என்ற பதத்தை சர்வதேசரீதியில் அடையாளப்படுத்தும் வயதெல்லை 18 வயதுக்குட்பட்டோர் என்பதாகும். இலங்கை 16 வயதுக்குட்பட்டவர்களை சிறுவர்கள் என்கிறது. எனினும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் என அழைக்கப்படும் யுனிசெப்(UNICEF)18 வயதுக்குட்பட்டோரே சிறுவர்கள் என வரையறை செய்துள்ளது.

### விபச்சாரம், தன்னினச் சேர்க்கை:

இல்ங்கையில் விபச்சாரத்தில் ஈடுபடும் 6 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை 80,000 தொடக்கம் 1,00 000 வரை இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களில் 30,000 பேர் சிலாபத்திலிருந்து நீர்கொழும்பு (கொச்சிக்கடை) வரையான பிரதேசத்திலும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்கல்ல வரையான பிரதேசத்திலும் அதிகளவில் உள்ளனர். (1991 டிசம்பர் நியுயோர்க்கில் நடந்த 'சுற்றுலா வலய விபச்சாரம்' எனும் மாநாட்டில் வெளியிடப்பட்ட புள்ளிவிபரம் இது)

இதே வேளை சிறுவர்கள் அதிகமாக விபச்சாரத்தில் ஈடுபடும் நாடுகளில் இலங்கை மூன்றாவது இடத்தை ஆக்கிரமித்துள்ளது என சுவீடன் ஆய்வாளர் **'ஹெலனா கார்லன்'** குறிப்பிடுகிறார்.

இலங்கை வரும் உல்லாசப்பிரயாணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றதாயும் அதனால் அந்நியச் செலாவணியும், அதிகளவானோருக்கு தொழில் வாய்ப்பையும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்குமென்று அரசு கூறுகிற போதும் மறுபுறத்தில், பாலியல் சுரண்டலுக்கு உள்ளாகும் சிறுவர்களும் அதிகரித்து வருகின்றனர் என்பதைப்பற்றி அரசு அக்கறை காட்டுவதாயில்லை.

இதற்கென்று மேற்குலக நாடுகளில் முதவிட்டுள்ள முகவர்கள் பலர் உருவாகியுள்ளனர். அவற்றிற்கான விளம்பரங்களும் போட்டி போட்டு வளர்ந்து வருகின்றன. இலங்கைச் சிறுவர்களைக் கொண்டு எடுக்கப்பட்ட விதவிதமான ஆபாசப்படங்கள் மற்றும் புகைப்பட அல்பங்கள், அவ்வாறான படங்கள் நிறைந்த விளம்பர சஞ்சிகைகள் என்பன மேற்கு நாடுகளில் குறிப்பாக ஸ்கண்டினேவிய நாடுகளில் பிரல்யம் பெற்றுள்ளன. எனவே வெளிநாட்டினர் உல்லாசப்பிரயாணம் செல்ல வேண்டிய நாடுகளை தெரிவு செய்யும் போது **'இலங்கைச் சிறுவர்கள்** பற்றிய இவ்வாறான விளமபரங்கள் இலங்கையை அவர்கள் தெரிவு செய்வதற்கு ஆர்வத்தினை கொடுத்து விடுகிறது.

ஜேர்மனியில் 'SPARTACUS' எனும் பாலியல் வழிகாட்டி நூல் வெளியிடப்படுகிறது. ஐரோப்பிய நாடுகள் முழுவதும் இந்நூல் விற்பனை செய்யப்படுகிறது. இந்நூலில் 763,764 ஆம் பக்கங்கள் இலங்கையில் பாலியல் வர்த்தக விளம்பரங்களுடன் கூடிய விபரங்கள் வெளியிடப்பட்டு வருகிறது. அண்மையில் வெளிவந்த அச்சஞ்சிகையில் ஒரு. குறிபபு இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ''தன்னினச்சேர்க்கை இலங்கையில் 365 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் தடுக்கப்பட்டிருந்தாலும் அங்கு அவை நடக்கத்தான் செய்கின்றன. இங்கு பாலியல் வியாபாரம் சிறப்பாக வருவது முக்கியமான அம்சம். அது மட்டுமன்றி வர்த்தக நோக்கிலல்லாமல் (Non Commercial)இனாமாகக் கூட பாலியல் தேவையை அனுபவிக்கக்கூடிய வசதி உள்ளது''

இப்புத்தகத்தில் தன்னினச் சேர்க்கைக்கு உட்படுபவர்களின் விலாசங்கள், தொலைபேசி இலக்கங்கள், அறைக்கான வாடகை, ஹோட்டல் குறிப்புகள் (குறிப்பாக கொழும்பு, கல்கிஸ்ஸ, நீர்கொழும்பு, கண்டி ஹோட்டல்கள்) என்பனவும் அடங்குகின்றன.

இலங்கையில் உல்லாசப்பிரயாணிகளின் பாலியல் இச்சைகளுக்கு உள்ளாகும் சிறுவர்களின் எண்ணிக்கை 20,000க்கும் மேற்பட்டது எனத் தெரிய வருகிறது. இலங்கையில் விபச்சாரத்தினால் கிடைக்கும் அந்நிய வருமானம் 5 கோடி ரூபாய் ஆகும்.

இலங்கை வரும் உல்லாசப்பிரயாணிகளில் 10%மானோர் விபச்சாரர்களிடம் செல்கிறார்கள். இலங்கைக்கு வரும் உல்லாசப்பிரயாணிகள் தங்களது பாலியல் தேவைக்காக ஒன்றில் முகவர்களை நாடுவார்கள் அல்லது கடற்கரையோர உல்லாசப்பிரயாண பிரதேசங்களில் அல்லது வாய்ப்புகளுக்கேற்றவாறு சிறுவர்களை அணுகுவார்கள்.

இச்சிறுவர்கள் உணவுப்பண்டங்கள், பணம், மற்றும் நவீன வெளிநாட்டு பொருட்கள் கொடுத்து ஆசைகாட்டி அழைத்துச் செல்லப்படுகிறார்கள். அனேகமாக அவர்கள் தங்கியுள்ள ஹோட்டல் அறைகளுக்கே கொண்டு செல்லப்படுகிறார்கள்.

வெளிநாட்டவர்களின் இச்சைக்கு ஆளாவோர்கள் அனேகமானோர் ஆண் சிறுவர்களே. இவர்கள் பெரும்பாலும் தன்னினச் சேர்க்கைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். வெளிநாட்டவர்களினால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகும் சிறுமிகளோடு ஒப்பிடும் போது ஆண் சிறுவர்களே அதிகமானவர்களாக உள்ளனர்.

தொடர்ச்சியாக சிறுவர்கள் பாலியல் உணர்வுகளுக்கு பழக்கப்படுத்தப்படும் போது பாலியல் தேவை அவர்களுக்கு அத்தியாவசியமான ஒன்றாகி விடுகிறது. பின்னர் சுயகட்டுப்பாட்டுக்குள் உடல் இயல்பைக் கொண்டுவர அவர்களால் முடிவதில்லை. எனவே தொடர்ந்து உடலை விற்கவோ அல்லது இனாமாக வழங்கவோ தயாராகிறார்கள், காலப்போக்கில் இவர்களது வாழ்க்கையே இதுதான் என்றாகிவிடுகிறது.

இலங்கையில் சுற்றுலாப்பிரதேசங்களான கல்கிஸ்ஸ, நீர்கொழும்பு, காலி, ஹிக்கடுவ, காலிமுகத்திடல் போன்ற கரையோரப் பிரதேசங்கள் இவை அதிகமாக நடைபெறும் இடங்களாகும்.

அனேகமான சந்தர்ப்பங்களில் ஹோட்டல் அறைகளுக்கு கொண்டு செல்லப்படும் இச்சிறுவர்கள் தன்னினச்சேர்க்கைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். சில வேளை குழுவாக வந்திருந்த உல்லாசப்பிரயாணிகளாயின் குழு உடலுறவுக்கும் ஆளாகிறார்கள். அங்குள்ள சகலரதும் பாலியல் தேவையை ஒரே நேரத்தில் பூர்த்தி செய்ய வேண்டிய நிலையும் இவ்வாறான சிறுவர்களுக்கு ஏற்படுவதாக இது தொடர்பில் ஆய்வு நடத்தும் நிறுவனம் ஒன்று தெரிவிக்கின்றது.





# சந்தரேகா விவகாரம்
## அரசின் அசமந்தம் !?

11 வயதுச் சிறுமி ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரியினால் பாலியல் பலாத்காரம் பண்ணப்பட்ட சம்பவம் பற்றிய செய்திகள் அண்மையில் வெளியிடப்பட்டு வந்தன. இச்சம்பவம் பற்றிய செய்திகள் தமிழ்ப்பத்திரிகைகளில் வெளியிடப்படாதது வருந்தத்தக்க விடயம். சிங்களப் பத்திரிகைகள் குறிப்பாக 'ராவய' பத்திரிகை இது தொடர்பான செய்திகள் கட்டுரைகள் வெளியிட்டதோடு நீதித்துறைக்கும், அரசுக்கும் சவால் விட்டு பிரச்சினைக்கு அழுத்தம் கொடுத்தது குறிப்பிடத்தக்கது.

வத்தளையைச் சேர்ந்த **சந்தரேகா** எனும் பெயர் கொண்ட இச்சிறுமி சிறு வயதிலேயே தாயை இழந்தவர். தந்தை நிரந்தர வேலையற்றவர். தனக்குத் தெரிந்த தச்சு வேலையைத் தொழிலாகக் கொண்டவர். அடிக்கடி வெளியிடங்களுக்குச் சென்று அவ்வேலையை மேற் கொள்பவர்.

தொழுநோய் காரணமாக தொழுநோய் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் பாட்டியின் பொறுப்பில் வளர்பவர் இச்சிறுமி. பலாத்காரப்படுத்தியதாகக் கூறப்படும் ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி **எலிஸ்டர் பெரேரா** (65 வயது) தொழுநோய் குணப்படுத்தும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் தலைவர். இச்சிறுமியுடன் பாட்டியை கண்ட அவர் பிள்ளையை தான் வளர்ப்பதாக பாட்டியிடம் கேட்ட போது சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்த்தில் உள்ள மனிதர் எனக்கருத்தில் கொண்டு பிள்ளையை ஒப்படைத்துள்ளார்.

1992 டிசம்பர் 3ம் திகதி இரவு சிறுமி தூங்கிய வேளை எலிஸ்டர் பெரேரா பலாத்காரம் புரிந்துள்ளார்.

தொடர்ந்து இவ்வாறு நான்கு நாட்கள் பலாத்காரத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளார் எனத் தெரிய வருகிறது. ஒவ்வொரு முறையும் பலாத்காரத்தின் போது மயக்கமடைந்ததாகவும் நான்காவது நாள் வலி தாங்காது சத்தம் போட்டதில் மயக்கம் அடைந்து போனதன் பின் எலிஸ்டர் பெரேராவும் அவரது மனைவியும் தனியார் மருத்துவமனையொன்றில் தனக்கு சிகிச்சை செய்ததாகவும் தனது பெண் உறுப்பில் 4 தையல்கள் போடப்பட்டதாகவும் சிறுமி தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

பின்னர் 1992 டிசம்பர் 9 ம்திகதி எலிஸ்டர் பெரேரா சிறுமியை சிறுமியின் பாட்டியிடம் ஒப்படைத்துள்ளார்.

சிறுமி சிகிச்சை பெற்ற தனியார் மருத்துவமனை எதுவென்பது அறியப்படாமல் இன்னமும் இரகசியமாகவே உள்ளது. சிறுமி நிலையை பாட்டியிடம் கூறிய அன்றே மாலை 5.15க்கு பாட்டி பொலிஸிற்கு சிறுமியை அழைத்துச் சென்று முறையிட்டுள்ளார்.

இதன்படி நடந்த வழக்கினை தள்ளுபடி செய்வதாக கடந்த சில மாதங்களுக்கு முன் நீதிபதி அவர்கள் கூறிய தீர்ப்பு பலத்த விமர்சனங்களுக்கும் ஆளானது. பத்திரிகைகள் மற்றும் எதிர்க்கட்சிகள், அரசாங்க சார்பற்ற நிறுவனங்கள் என்பனவும் இச்சம்பவத்தை காரசாரமாக விமர்சித்தன.

நீதிபதியின் கூற்றில் பொலிஸ் அதிகாரி விடுவிக்கப்பட வேண்டும் என்பதில் அவர் குறியாக இருந்ததை காணக்கூடியதாக இருந்தது. ''சிறுமியிடம் பலாத்காரம் செய்யுமளவிற்கு முரண்டு பிடித்ததற்கான அல்லது எதிர்த்து போராடியதற்கான ஆதாரம் எதுவுமில்லை. மற்றும் சிறுமி ஏற்கனவே உடலுறவுக்கு உள்ளாகியுள்ளார். எலிஸ்டர் பெரேராவிடம் இருந்து பணம் கறப்பதற்காகவே சோடிக்கப்பட்ட புகார் இது. குற்றச்சாட்டை வலுப்படுத்தும் ஆதாரம் எதுவுமில்லை'' என்றெல்லாம் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் சிறுமியின் பெண்ணுறுப்புப் பகுதியில் ஏற்பட்டுள்ள க
தையல் அடையாளங்கள் யாவும் சிறுமி பலாத்காரத்துக்குட்
ளார் என்பதனை தெளிவாக காட்டுகிறது. மேலும் சிறுமியி
சிறுமி பலாத்காரத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளார் என்பதை உறுதி

வேறும் சாட்சிகளாக சிறுமியின் பாட்டியின் வாக்குமூலமும் தற
மூலமும் தலங்கம பொலிஸ் அதிகாரி **பாலித சிறிவர்த்தன**
யும் சிறுமியின் மீது பிரயோகிக்கப்பட்ட பாலியல் பலாத்கா
பகர்கிறது.

எனினும் நீதிபதியோ சிறுமி பாலியல் பலாத்காரத்து...ப்ப
டியிருக்கிறார் என்பதற்கான காயங்களோ வேறு சிராய்ப்பு
களோ எதுவுமில்லை எனத் தெரிவித்தார். இந்த கருத்தில்
பலாத்காரத்தின் போது கட்டாயம் இவ்வாறு காயங்கள் நிக
வேண்டும் எனக் கூறுவதாகவும் கொள்ளலாம்.

ஆனால் சித்த சுவாதீனமற்ற நிலையிலும், மயக்க நிலையி
பொருள் ஏற்றப்பட்ட நிலையிலும் உள்ள பெண்கள் பலாத்க
டாலோ அல்லது ஆயுத முனையில் அப்பெண்ணின் எதிர்ப்
பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டாலோ (வடக்கின் 19
இடைப்பட்ட காலப்பகுதியில் IPKFயினரால் பெண்கள் பல
யில் பலாத்காரம் செய்யப்பட்டனர். இன்று பொஸ்னியாவி
வங்களும் சிறந்த ஆதாரங்கள்) எவ்வாறு நிரூபிப்பது? ஆ
வாறுதான் ஆதாரம் கேட்கிறது என்பது தான் உண்மை
வழக்கிலும் அவ்வாறு தான் கேட்கப்படுகிறது.

''இந்த வழக்கில் வலுவான சாட்சிகள் இருந்தும் கூட ஆரம்ப
னைத் தள்ளுபடி செய்தது மிகவும் கவலைக்குரியது'' என்
நடத்தும் வழக்கறிஞர் வீரசேன ரண ஹேவா குறிப்பிட்டுள்


இவ்வழக்கை சிறுமிகள் சார்பில் நடத்தும் இன்னொரு
திருமதி.கொடிகார ''நீதிபதியின் அவசர ஆணையின் பே
விடுதலை செய்யப்பட்டார். (தள்ளுபடி செய்யப்பட்டது.)
அசமந்தமான போக்கு காரணமாக இந்த தொழிலில் எனக்கு
றது'' எனத் தெரிவித்திருக்கிறார்.

இச்சம்பவத்தை மூடிமறைப்பதற்கான வேலைகளை அர
செய்து வந்தது. பொலிஸார் பற்றிய தவறான அபிப்பிராயம்
மேலும் வளரச் செய்யும் என்பதே அதற்கான பிரதான கா
இச்சம்பவம் பற்றி மக்கள் மத்தியில் இருந்த எதிர்ப்பு காரண
யைத் தொடர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்படி சம்பவத்தில் அரசு எதிர்நோக்கும் சமூக அழுத்தம்
டும் இவ்வழக்கு விசாரணை தொடரப்பட்டு வருகிறது. ஆ
போல் எத்தனையோ சம்பவங்கள் தினசரி நடந்தவண்ண
குறிப்பாக வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பெண்கள் மீதான
ரம் என்பது அன்றாட நிகழ்வாகப் போய்விட்டது. அதுவும்
கில் இருந்து கிடைக்கும் தகவல்கள் இதனை ருசுப்படுத்து
வெளித்தெரியாது மூடிமறைக்கப்பட்டுள்ள இந்தச் சம்பவ
குரல் எப்போது எழும்பப் போகிறது? எங்கிருந்து கேட்கப்

நன்றி - நூலகத்திட்டம்






பாடசாலை செல்ல வேண்டிய பாலக வயதில் மலையகத்திலிருந்தும், கிராமப்புறங்களிலிருந்தும் வடகியக்கின் யுத்தச் சூழ்நலை கார ாமாகவும் நகர்ப்புறங்களுக்கு கொண்டு வரப்படும் சிறுவர்கள் கூட இதற்குவிதிவிலக்கல்ல. தங்குமிடங்களில் இயல்பாக பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள்.

### பலாத்காரம்

பாலியல் துஷ்பிரயோகச் செயல்களுக்கு உள்ளாகும் சிறுவர்களின் அனேகமானோர் பலாத்காரம் செய்யப்படுகிறார்கள். இன்னொரு வகயில் இவர்கள் ஏமாற்றப்படுகிறார்கள் என்பதே மறுக்கமுடியாத உண்மை. அறியாத பருவத்யில் 18 வயதுக்கு குறைவானோரும் வேலைக்கமர்த்தப்படுவது தெரிந்ததே) கணிசமான அளவினர் இவ்வாறான பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாகி வருகின்றார்கள்.

ஒன்றில் தான் வேலை பார்க்கும் வீட்டில் வீட்டுரிமையாளர் அல்லது அவர் பிள்ளைகள் அல்லது அங்கு நெருங்கிய தொடர்புடையோர், தொழில் புரியும் இடத்தில் மேலதிகாரி அல்லது முதலாளி அல்லது, சக ஊழியர்கள் அல்லது காதல் வசப்படும் இளைஞர்கள் எனப் பல தரப்பட்டவர்களால் சிறுவர்கள் பலாத்காரத்துக்குள்ளாகின்றனர்.

இவை அன்றாட நிகழ்வுகளாக இருப்



# ...ன நோக்கிப் போய்க் ...ண்டிருக்கிறோம்?

## ...றுவர் மீதான பாலியல் வன்முறை பற்றிய அலசல்




அத்தோடு பாலியல் உறவை ஆரம்பிக்க முன் பல சந்தர்ப்பங்களில் சிறுவர்களுக்கு போதை மருந்துகள் சவசாதாரணமாக ஊட்டப்படுகின்றன. போதை ஊட்டுவதனால் தங்களுக்கு சாதகமாக சிறுவர்களை இணங்க வைக்கலாம் என எதிர்பார்க்கப்படுவதே அதற்கான காரணமாகும்.

சில ஹோட்டல்களில் தங்களது வியாபார நலனைக்கருத்திற் கொண்டு சிறுவர்கள் ஏற்பாடு செய்யும் முகவர்களும் அமர்த்தப்படுவதாக அறியப்படுகிறது. ஆயினும் உள்ளூர் சிறுவர்களுடன் வெளிநாட்டவர் ஒரே அறையில் தங்குவதற்கு அனுமதிக்கக்கூடாது என அரசாங்கத்தால் ஹோட்டல் உரிமையாளர்களுக்கு வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஆரம்பத்தில் ஹோட்டல் முகாமைத்துவம் இதற்கு உடன்ட்டாலும் அதன்படி தொடர்ந்து ஒழுகவில்லை; அலட்சியப் படுத்தியே வருகிறது.

சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகச் செயலுக்கு உள்ளாக்குபவர்கள் உல்லாசப் பயணிகள் மட்டும்தான் என்றில்லை. எனினும் இன்று அளவுக்கதிகமாக அதிகரித்து வரும் பக்கம் என்பதினாலேயே இது அழுத்தப்படுகிறது. மறுபக்கத்தில் உள்நாட்டவர்களினாலும் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகுகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

உள்நாட்டவர்கள் வீதியேரச் சிறுவர்களையும், தங்களது சூழலில்கிடைக்கும் சிறுவர்களையும் தமது இச்சையைத் தீர்கப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

இந்த நிலைக்கு உள்ளாகும் சிறுவர்களின் பின்னணியைப் பார்க்கும் போது இவர்கள் ஏதோ ஒரு வகையில் பராமரிப்பற்றவர்களாக இருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது.

இலங்கையில் வறுமை காரணமாக பத்து வயதுக்கும் பதினான்கு வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்களில் 48,400 சிறுவர், சிறுமியர் முழு நாளுமே ஓய்வின்றி உழைத்து வருகின்றனர். கிராமப்புறங்களின் வயல் வெளிகளிலும், வீடுகளிலும் மற்றும் விற்பனை நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகளிலும், தொழிற்சாலைகளிலும் பல்வேறு கொடுமைகளுக்கு மத்தியில் பல்வேறுபட்ட வேலைகளுக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

தில் சொல்வதை ஏற்றுக் கொள்ளும் பழக்கத்தைக் கொண்ட வயதில், சிறுவர்கள் மிகவும் இலகுவாக மசியவைக்கப்படுகிறார்கள். வயது வந்தோரிடம் காணப்படும் மறுக்கும் சுபாவம் கூட அற்ற நிலையில், உணர்ச்சி மேலிடச் செய்யப்பட்ட நிலையில் சிறுவர்கள் இலகுவாக பாலியல் தொடர்பான விருப்புக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.

பினும் இவை வெளிவருவதே இல்லை. வெளியிடவும் விரும்புவதில்லை. மிகவும் இரகசியமாக நடக்கும் இச்செயல்கள் சிலவேளை அம்பலத்துக்கு வந்தாலே ஒழிய இவை வெளித்தெரிய வருவதில்லை. எனினும் அண்மையில் நடத்தப்பட்ட பெண்ணுரிமை இயக்கங்களின் பொதுக்கூட்ட மொன்றில் 'ஐக்கிய பெண்கள் சம்மேளனம்' 1994 ஜனவரி

என்.எஸ்.குமரன்

**எனினும் சிறுவர்களின் இயல்பான உள, உடல் நிலைகளுக்குள் எதிராக இவ்வாறு மசிய வைக்கப்படுவதால் இந்நிலையினை பலாத்காரம் என்றே அழைக்கலாம்.** இதனை எடுகோளாகக் கொண்டு பார்ப்போமா

யிலிருந்து ஒக்டோபர் வரையான காலப்பகுதிக்குள் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள பாலியல் பலாத்கார சம்பவங்களின் எண்ணிக்கை 150 என அறிவித்தது. இவர்களில் 80 பேருக்கும் அதிகமானோர் 18 வயதுக்குட்பட்ட

| நாடு | மொத்தம் | சிறுவர் | வயதுகுறைப்பட்டோர் |
|---|---|---|---|
| இந்தியா | 2மில்லியன் | 4,00,000 | 16 |
| நேபாளம் | 1,50,000 | 30,000 | 16 |
| பாகிஸ்தான் | 2,00,000 | 40,000 | 18 |
| பிலிப்பைன்ஸ் | | 60,000 | 18 |
| இலங்கை | 1,00,000 | 30,000 | 18 |
| தாய்வான் | | 100,000 | 18 |
| தாய்லான் | | 800,000 | 18 |
| வியட்நாம் | 2,00,000 | 40,000 | 18 |
| சீனாவின் சிசன் மாகாணத்தில் | | 5000 | 16 |

விபச்சாரத்திற்கு பேர் போன ஆசிய நாடுகளில் சில ▲

யின் இலங்கையில் அன்றாடம் இத்தகையச் செயல்கள் பெருமளவில் இடம் பெற்று வருகின்றன. பல்வேறு மட்டங்களில் பல்வேறு வகையில் இடம் பெறுகின்றன.

மலையகத்திலிருந்து நகர்ப்புறங்களில் வீட்டு வேலைகளுக்கு, ஹோட்டல் வேலைகளுக்கு, ஆடைத் தொழிற்சாலைகளுக்கு வேலை பார்க்க வருபவர்களில் (இன்று ஆடைத் தொழிற்சாலை

சிறுமிகள் என அவ்வமைப்பு தெரித்திருந்தது.

இதே வேளை, பாலியல் பலாத்காரம் என்பதன் அர்த்தம், கடந்த பலகாலமாக பெண்களுக்கு எதிரான பாலியல் பலாத்காரத்தையே குறித்து வந்துள்ளது. ஆனால் இன்றோ ஆண் சிறுவர்கள் பலாத்காரத்துக்குள்ளாக்கப்படுவதும் பாலியல் பலாத்காரம் தான் எனும் கருத்து நிலையூன்றி வளர்ந்து வருகிறது.

### அரசின் அக்கறையீனம்:

இலங்கையில் பாலியல் உணர்வுகளைத் தூண்டும் பல சம்பவங்கள் நடைமுறையில் இருந்து வருகிறது. அரசுக்கு ஒருபக்கம் இது தொடர்பான தேவையும் உண்டு. கடந்த காலங்கள் இதற்கு சான்று பகர்கின்றன. இலங்கையில் இளைஞர்களின் புரட்சி மனோபாவம் அல்லது அரச எதிர்ப்பு அரசியல் மனோபாவம் வளர விடாமல் தடுப்பதற்காக பல உத்திகள் அரசால் கையாளப்பட்டன. அவற்றில் பாலியல் தூண்டலும் முக்கியமானது. தியேட்டர்களில் தணிக்கை செய்யப்படாத ஆபாசத் திரைப்படங்களுக்கு அரசு மறைமுகமாக ஊக்கமளித்தது. இளைஞர்களின் கவனத்தை திதிருப்புவதற்கான நடவடிக்கைகளுக்கு முக்கியமாக திறந்த பொருளாதாரக் கொள்கை பாரிய அளவு ஊக்கியாக செயல்பட்டது.

இன்றும் கூடத் தொலைக்காட்சி சேவையில் பல சேவைகள் அறிமுகப்படுத்தபட்டுள்ள நிலையில் அரசியல் ரீதியாக பல கட்டுப்பாடுகளை நேரடியாக விதித்துள்ள போதும் ஆபாசக்காட்சிகளுக்கு அவ்வளவு கட்டுப்பாடுகள் இல்லை. தணிக்கை செய்வது சில சந்தர்ப்பங்களும் குறைந்து வருகிறது. உதாரணத்திற்கு அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட விண்வெளி செய்மதிகளினூடாக பெறபபடும் நிகழ்ச்சிகளைக் கொண்டு நடத்தும் TNL, MTV, ETV, ETV2 போன்ற சேவைகளில் மேற்குலநாடுகளின் நிகழ்ச்சிகள் நேரடியாகவே காட்டப்படுகின்றன. இதனை தணிக்கை செய்யும் சந்தர்ப்பங்கள் வெகுகுறைவே.

பௌத்த சிங்கள அடிப்படைவாதம் என்பது ஏனைய இனங்களுக்கு உரிமை வழங்குவதை தடுக்கும் அளவிற்கு கொடூரமானது எனும் நிலமை உள்ளபோதும், பௌத்த கலாசாரம், பௌத்த மதத்தின் பாதுகாப்பு என்றும் பௌத்த மதத்தை பாதுகாப்பது

இலங்கை அரசின் தலைப்பாயக்கடமை என்றும் அரசியலமைப்பு ரீதியாக அந்தஸ்துகளை வழங்கிய போதும் மேற்குறிப்பிட்ட ஆபாச வெளிப்பாடுகளுக்கு எவ்வித தடங்கல் ஏற்படக்கூடாது எனும் நிலையானது முதலாளித்துவ மற்றும் ஆளும் வர்க்க பிழைப்புவாதமும் இதனோடு பின்னிப் பிணைந்து உள்ளமையை நிரூபணமாக்குகிறது.

பாலியல் என்பது தகுந்த வயதில் தேவை தான். எனினும் அது பாலியல் அறிவு வளர்ந்த நிலையில் அடிப்படை பாலியல் கல்வி புகட்டப்படாத இலங்கை போன்ற 3ம் உலக நாடுகளுக்கு இவை சீரழிவுகளுக்கு இட்டுச் செல்லும் என்பது மட்டும் உண்மை.

அந்த ரீதியில் சிறுவாகளைக்கூட சிறுபாராயத்திலேயே பாலியல் உணர்வுகளைத் தூண்டச் செய்யும் நடைமுறையே இலங்கையில் உள்ளது.

இலங்கையின் தற்போதைய நிலை இவைதான். எனில், எதிர்காலத்தில் எமது குழந்தைகளின், அவர்களின் குழந்தைகளின் .. நிலைமைகள் எவ்வாறு அமையும் என நினைக்க அஞ்சுகிறோம். ஒருபுறம் குண்டுகள் மனித உயிர்களைப் பலி வாங்குகின்றன.

மறுபுறம் இத்தகைய செயற்பாடுகள் இலங்கையை சவக்காடாக மாற்றுகின்றது. இருண்ட காலத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோமா? வெள்ளம் வந்து விட்டது என்றாலும் அணை கட்டலாம். நமது சந்ததிகள் நலமாக வாழ அதனைச் செய்யத்தான் வேண்டும்.

நன்றி - நூலகத்திட்டம்



# பாஸ்க் மக்களின் பிரிவினைப் போராட்டமும் ஸ்பெயினின் அணுகுமுறை தரும் பாடமும் !!

எந்த அரசாங்கமும் தனது ஆள்புல எல்லைகளுக்குள் விரக்தியுற்ற சிறுபான்மைனரைக் கொண்டிருக்கும் போது நிலைமையைச் சீர் செய்ய ஒன்றுக்கு மேற்பட்ட விருப்புரிமைகளைப் பிரயோகிக்கும் அதிகாரத்தையும் கொண்டிப்பதை மறுப்பதற்கில்லை. இது வளர்முக நாடுகள், அபிவிருத்தியடைந்த நாடுகள் என்ற பேதமின்றிப் பொருந்தும் நிதர்சனம். பின்தங்கிய பிரதேசத்திலுள்ள முன்னேறிய இனக்குழுக்களின் மனப்பாங்கு எப்படியானது என்பதைக் கடந்த தடவை பயாஃவ்ரா விடயத்தில் பார்த்தோம். இம்முறை, சற்று மாறுபட்ட விதத்தில், முன்னேறிய பிரதேசத்தில் வாழும் முன்னேறிய குழுக்களின் மனோநிலையைப் பார்ப்போம். இத்தகைய குழுக்கள் பிரிவினை நோக்கித் தள்ளப்படுவதற்கான உந்துசக்தி யாது என்பதும் இதனை உற்பத்தியாக்குபவர் யாவர் என்பதுமே இங்கு முக்கியமாகின்றது.

முன்னேறிய குழுக்கள் தேசிய வருமானத்தில் கூடிய பங்களிப்பை நல்கி வரும அதேவேளை தேசிய செலவினத்தில் தமக்குரிய விகிதத்திலும் குறைவாகவே பெறுகிறார்கள். இது இத்தகைய குழுக்களின் அடிமனதை நெருடும் விடயமானாலும் தேசிய உணர்வு மீதூரப் பெறும்போது இந்த உளைச்சல் மறக்கவும்படுகின்றது. தேசிய உணர்வினைப் பங்கப்படுத்தும் சிறு விடயங்கள் கூட இந்த மனஉளைச்சலைத் தூக்கி முன்னிறுத்தி விடுகின்றன. அரசாங்கம் பிரதேசவாதத்தினால் திண்டாட வேண்டியேற்படும். ஸ்பெயினில் வாழும் பாஸ்க் இன மக்களது உரிமைப் போராட்டத்தையும் இந்தப் பின்னணியிலேயே பார்க்க வேண்டும்.

ஸ்பெயின் ஐரோப்பிய நாடுகளுள் கைத்தொழில் துறையிலும் இயந்திரமயமாக்கலிலும் முன்னேற்றம் கண்ட நாடு என்று கூற முடியும். ஆனால் இந்த முன்னேற்றம் ஸ்பெயினின் பாஸ்க் பிரதேசத்திலேயே முழுதாகப் பிரதிபலித்து நின்றது. பாஸ்க் பிரதேசத்தின் நான்கு மாகாணங்களும் பிரிவினை முளை கொண்டிருந்த கற்றலோனியாப் பிரதேசத்தின் மாகாணங்களுமே கைத்தொழிலிலும், விவசாயத்திலும் முன்னேற்றம் அடைந்த பகுதிகளாகும். கற்றலோனியா கலாசாரத்தினடிப்படையில் பிரிவினையை நாடியது. பாஸ்க் சமூகமோ இனத்துவ அடிப்படையில் பிரிவினையை வேண்டி நிற்கின்றது. இதனை, வளர்ச்சியடைந்த ஐரோப்பிய பிராந்திய சமூகத்தில்ஒரு நாடான ஸ்பெயின் எப்படிக் கையாண்டது? அதிலிருந்து எமக்கு ஏதேனும் படிப்பினை கிடைக்கிறதா என்பதைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

ஐரோப்பாவிலேயே மிகக் கூடிய எண்ணிக்கையிலானவர்களைக் கொண்ட சமூகங்களில் ஒன்றே இந்த பாஸ்க் இனமாகும். ஸ்பெயினில் மட்டும் வாழும் பாஸக இனத்தவரின் எண்ணிக்கை 23இலட்சம் எனலாம். பிரான்ஸின் தென்மேற்கு மாகாணங்களிலும் இவர்கள் நிறையவே உள்ளனர். இந்தியாவில் தமிழ்நாட்டில் வாழும் தமிழர்களை ஸ்பெயினிலுள்ள பாஸ்க் இனத்தவருக்கும், இலங்கையிலுள்ள வட/கிழக்கு வாழ் தமிழர்களைப் பிரான்ஸிலுள்ள பாஸ்க் இனத்தவருக்கும் ஒப்பிடலாம். ஸ்பெயினில் நடைபெறும் போராட்டம் தமிழ்நாடு பிரிவினை கேட்பதைப் போலவேதான். இங்கே இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லையில் கடல் கிடையாது என்பதையும் கவனிக்க வேண்டும். பாஸ்க் பிரதேசம் என்பது இரு நாடுகளையும் ஊடறுத்துச் செல்லும் இருபதாயிரம் சதுர கி.மீ. பரப்பளவு கொண்டது. இதன் 85% பகுதி ஸ்பெயினிலும் மிகுதியே பிரான்ஸிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மலையும் மலைசார்ந்த இடமும் என்பதால் கலாசாரப் பரம்பலுக்குத் தடுப்பாக அமைய வாய்த்த பகுதி. ஐரோப்பாவின் வேறெந்தப் பகுதியிலும் பேசப்படாத ஈஸ்கெரா (Euskera)என்ற மொழியே பாஸ்க் மக்களது தாய்மொழி. கற்றலோனியா மக்களுடன் ஒப்பிடுகையில் பாஸ்க் மக்கள் இனத்துவ, மொழிவாரித் தேசியத்தை முன்னெடுப்பவர்கள் எனலாம். முன்னேற்றமடையும் பிரதேசம் என்பதால் பெருமளவில் வெளிமாநிலங்களிலிருந்து மக்கள் இங்கே வந்து குடியேறுகின்றனர். பாஸ்க் பிரதேசத்தில் வாழுகின்ற மக்களில் 50%மானவர்கள் மட்டுமே ஈஸ்கெரா மொழியைப் புரியக் கூடியவர்களாக உள்ளனர். 25%மானோர் பேச முடிகிறது. 11%மானோர் மட்டுமே இதனை எழுத முடிகிறது. ''எங்கள் மொழி எங்களுக்கே தெரியாத நிலை விரைவில் ஏற்படும்'' என்று தீவிரவாதிகள் குமுறுகிறார்கள். இத்தனைக்கும் இந்த மொழி ஐரோப்பிய அளவில் பார்த்தால் விஞ்ஞான முன்னேற்றத்துக்கு ஏற்ற வகையில் வளர்ச்சியடைந்ததாகவும் தெரியவில்லை.

### பாஸ்க் மக்களின் அரசியல்வரலாறு

7ஆம் நூற்றாண்டிலிருந்து தனித்துவ அரசியலை இவர்கள் பேணி வந்ததாகத் தெரிகிறது. ஆனாலும் இது தொடர்ச்சியான, ஸ்திரமான தனித்துவம் அல்ல. அடிக்கடி குலைக்கப்பட்ட, சிதறடிக்கப்பட்ட ஆட்சியமைப்பு இவர்களுடையது. ஒவ்வொரு மாநிலமும் ஆக்கும் 'fuero's'என்ற உள்நாட்டுச் சட்டங்கள் பிரசித்தமானவை. மாட்ரிட்டுடன் கொண்டிருந்த தொடர்பு சுமுகமானதாகவோ -தனித்துவ இழப்புக்கான முத்திரையாகவோ கொள்ளப்பட முடியாத இரட்டை நிலை. இந்த உறவு முறை முதன்முதல் 19ம் நூற்றாண்டிலேயே பூரணமாக அழிக்கப்பட்டுப் பிராந்தியவாதத்துக்கு வித்திடப்பட்டது. பெரும்பான்மை இனமான காஸ்ரலியனின் நேரடியாட்சியின் கீழ் இப்பிராந்தியங்கள் முடக்கப்பட்டன. ஆனாலும் (1936-39) உள்நாட்டு யுத்தம் மூழும் வரை வரிவிதிப்புகள், மத்திய அரசின் அதிகார வரம்புகள் பற்றிப் பேசுவதற்கான சாத்தியங்கள் முற்றாகவே அற்றுப் போய்விடவில்லை. கைத்தொழில்மயமாக்கலும் அரசியல் மையப்படுத்தலும் பாஸ்க் தேசியவாதத்தை மீளவும் உயிர்ப்பித்தன.

பிராந்தியத்துக்கு வெளியே இருந்து வந்தவர்கள் பாஸ்க் பிரதேச வளத்தைச் சுரண்டிச் சென்றனர். முழு நாட்டினதும் வரிவிதிப்பில் 13% பங்களிப்பைச் செய்த பாஸ்க் 5% செலவீனத்தையே அரசிடமிருந்து பெற முடிந்தது. கடின உழைப்பாளர்களான பாஸ்க் மக்கள் மற்றப் பிராந்தியங்களில் உள்ள சோம்பேறிகளுக்காக 'மாரடிக்க' வேண்டுமா என்பதே அவர்களது முதலாவது வினா. ''இங்கே விளைச்சல். அங்கே அறுவடை'' என்றும் ''ஸ்பெயின் எனும் பசுவின் வாயிருப்பது இங்கே, பால்மடியிருப்பது மாட்ரிட்டிலா'' என்றும் எழுச்சிப் பாடல்களை பாஸ்க் மக்கள் உணர்ச்சிகரமாகப் பாடி வந்தனர். பொருளாதாரத்தைத் தாமே கையாளுதல், வெளியிலிருந்து வருபவர்களைக் கட்டுப்படுத்தல்- இந்த இரண்டிலுமே அவர்களது போராட்டம் நியாயம் காண முனைந்தது. ஆனால் அடங்கிப் போயிருக்க வேண்டிய இந்த எழுச்சிக்கு எண்ணெய் வார்ப்பது போல வந்து வாய்த்தது சர்வாதிகாரியும் தீவிர வலதுசாரியுமான ஜெனரல் ஃபிராங்கோவின் அடக்குமுறை ஆட்சி. உள்நாட்டு யுத்த முடிவில் (1939) இவர் வெற்றிவாகை சூடியிருந்தார்.

பாஸ்க் மக்களின் தேசியக் கட்சியானது 1895இல் உதயமானது. இதன் ஸ்தாபகர் டி. அறனா. புதிய தேசம், கொடி, மொழிப் பிரச்சாரம் என இவர் தேசியவாதத்தை முன்னெடுத்தார். இவரது கட்சி (PNV) இன்றும் செல்வாக்குடன் திகழ்ந்தாலும் முன்னைய தீவிரமும் வலுவும் இழந்ததாகக் காணப்படுகிறது. தமிழ் மக்கள் அரசியலுடன் ஒப்பிடுவதானால் இதுதான் தமிழர் விடுதலைக் கூட்டணி. அகிம்சைமுறைப் போராட்டம், பாஸ்க் இன மக்கள் முழுதாக ஒன்றுசேரல் (பிரான்ஸின் தென்மேற்குடன்), பாஸ்க் இனத்தின் தனித்துவம் என்பது மொழியடிப்படையில் பேணப்படுதல் என்பனவே PNVயின் நம்பிக்கைகள். ஏற்படுத்தப்படக்கூடிய அரசியல் நிறுவன முறைமை தொடர்பில் இது நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிக்கிறது.

ஜெனரல் ஃபிராங்கோ, ஈஸ்கெரா மொழியின் பாவனையைத் தடை செய்தார். பயிலவோ, பேசவோ, கற்பிக்கவோ தடைசெய்யப்பட்டது. இந்த மொழி நூல்கள் தீயிடப்பட்டன. பிராந்தியவாதத்தை அழிப்பதற்கெனத் திட்டமிடப்பட்டுச் செய்யப்பட்டவை இவை. தீவிரவாதம் பிறப்பதற்கு இச்செயல்கள் வழிசமைத்தன. யாழ்ப்பாண நூலகத்தைத் தீயிட்டவர்களுக்கு அது மிகச் சுலபமான செயலாக இருந்திருக்கும். ஆனால் அதன் பின்விளைவுகள் யாவை என்பதை இப்போதுதான் அவர்களால் அறிய முடியும் என்று நம்புவோமாக. இங்ஙனம் தீவிரவாதத்துக்கு வித்திட்ட அதிகார வர்க்கம் பின்னர் தானே இறங்கி வந்து சமரச முயற்சியாக, ஆரம்பப் பாடசாலைகளிலும் பல்கலைக்கழக ஆய்வுத் துறையிலும் இம்மொழியை அனுமதித்தது. 1975இல்தான் இதற்கு இணை-உத்தியோக அந்தஸ்து வழங்கப்பட்டது. இன்று பாஸ்க் பிரதேசத்தில் முதியோர் மட்டுமே இம்மொழி பேசுபவர்களாக உள்ளது துயரம் நிறை உண்மை.

> இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையின் கொலையுடன் புலிகள் முக்கியத்துவம் பெற்றதுபோல அங்கும் பாஸ்க் இனத்தவரான பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் 1968இல் கொல்லப்பட்ட போதே ETA பற்றி சர்வாதிகாரி ஃபிராங்கோ கண்களைத் திறக்க வேண்டியேற்பட்டது.

**சிசைரோ**

1950களின் முற்பகுதியில் PNVயிலிருந்து பிரிந்து சென்றவர்களால் நிறுவப்பட்டதே ETA எனும் போராட்டக்குழுவாகும். ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை வைத்துப் பிரிந்து சென்றவர்கள் இவர்கள். பாஸ்கின் விடுதலை இவர்களது இலட்சியம். ஃபிராங்கோவின் அடக்குமுறையினால் உந்தப்பட்டு ஆயுதவழி கண்ட இவர்கள் தமது இயக்கத்தை ஆரம்பித்த போது காந்திய வழியில் போராடுவது பற்றியும் விவாதித்ததாகத் தெரிகிறது. 1966-67ம் ஆண்டுகளில் இயக்கத்தின் ஐந்தாவது பேரவை கூடியபோது மூன்றாம் உலகநாடுகளிலுள்ள வெற்றிகரமான விடுதலை இயக்கங்களிடமிருந்து பாடம்படிப்போம் என்று தீர்மானம் நிறைவேற்றினார்கள். 1968இல் கொலைகள் ஆரம்பமாகின. நூற்றுக்கணக்கான பாஸ்க் இளைஞர்கள் சிறைகளை நிரப்பினர். விசாரணை கிடையாது. 1970இல் 'கண்காட்சி' விசாரணை ஒன்று நடாத்தப்பட்டு ஆறு இளைஞர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இங்கேயும் நமக்கும் இவர்களுக்கும் இடையில் நல்ல ஒற்றுமை காணப்படுகின்றது.

இங்கு புலிகளின் தோற்றம் இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையின் கொலையுடன் முக்கியத்துவம் பெற்றதல்லவா. அங்கும் பாஸ்க் இனத்தவரான பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் 1968இல் கொல்லப்பட்ட போதே ETA பற்றி சர்வாதிகாரி ஃபிராங்கோ கண்களைத் திறந்து பார்க்க வேண்டியேற்பட்டது. இதில் சம்பநதபபட்ட 16 பேரில்தான் அறுவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. மரணதண்டனை பின்னர் 30 வருடச் சிறைத் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. ஆயினும் இந்த விசாரணையினால் ஏற்பட்ட எதிர்விளைவுகள் ETAக்கு நிறைந்த பயனளித்தன. இளைஞர்கள் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டனர். தலைவர்கள் சிறைசெல்ல அவர்களின் இடத்தில் புதியவர்கள் இடம்பெற்றுத் ''தீவிர சேவை''யிலீடுபட்டனர். தீவிரம் அதிகரித்தது. ETA அரசியல் தீர்வு பற்றிச் சிந்திக்காமல் போராட வேண்டுமென இளைஞர்களில் ஒரு பிரிவினர் கருதினர். விளைவாக மீண்டும் ஒரு பிரிவு.

பிரிந்து சென்றவர்கள் ETA-M (Militar) என்ற அமைப்பை நிறுவினர். PNV என்ற கட்சியை தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் ஒப்பிட்டேன். ஆயின் ETA, மற்றும் ETA-M என்பவற்றை எந்தெந்த அமைப்புக்களோடு ஒப்பிடலாம் என்பதை வாசகர்கள் தீர்வுக்கு விட்டு விடுகின்றேன். இதன் பின்னர் போராட்ட வரலாறு என்பதை ETA-M தான் ஆரம்பித்துத் தொடரவேண்டியிருந்தது. 1970களில் இது ஏராளமானோரைக் கொன்று குவித்தது. குறிப்பாக 1973இல் நடந்த படுகொலை ஸ்பெயினை மட்டுமன்றி ஐரோப்பாவையே அதிரவைத்தது. ஸ்பெயினின் பிரதமரும் சர்வாதிகாரியின் அரசியல் வாரிசுமான அட்மிரல் கரேரோ பிளான்கோ தலைநகரில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டார். இதனையும் அடுத்த ஆண்டில் தலைநகரில் வைத்து 13பேரைக் கொன்றதையும் ETA-M அணியினரே நிகழ்த்தினார்கள் என்பது வெளிப்படை. 1980களில் மத்திய அரசின் குடியியல் காவலர்களே (Guardia Civil) இந்த இயக்கத்தின் பிரதான இலக்காக இருந்தனர்.

அரசியல் கட்சிகள் என்ற வகையில் PNVயை விட HB என்ற மக்கள் ஐக்கியக் கட்சியும் EE என்ற தீவிரவாதக் கட்சியும் பாஸ்க் மக்களிடையே ஆதரவு பெற்றுள்ளன. இவற்றுள் மிகத் தீவிரமானது HB ஆகும். இது வெளிப்படையாகவே ETA-Mஐ ஆதரிப்பது. இதனால் இளைஞர்களிடையே இதற்குச் செல்வாக்கு அதிகரிக்கின்றது. PNV பெற்றிருந்த ஆசனங்களைத் தேர்தலில் HB அபகரித்து வருகின்றமை இந்தச் செல்வாக்கு அதிகரிப்பை உறுதிப்படுத்துகிறது. EE (Euskadiki Eskerra) கட்சி ''உள்ளிருந்து மாற்றுவோம்'' என்ற சுலோகத்தை முன்வைத்துள்ளது. ஆரம்பத்தில் தயக்கங் காட்டிய இடதுசாரித் தொழிலாளர்கள் 1970களில் தேசியவாதக் கட்சிகளுடன் இணைய வேண்டிய நிர்ப்பந்தத்தைச் சர்வாதிகாரி ஃபிராங்கோ ஏற்படுத்தினார் ETA-Mஇல் 1000 வீரர்கள் கூட இல்லை எனப் புலனாய்வு அறிக்கைகள் கூறுகின்றன. இவர்கள் நான்கு பிரிவுகளாக இயங்குகிறார்கள். நிதிசேகரிப்பது, கலாசாரப் பெருமைகளைப் பேசுவது, போராட்டம் பற்றிய பிரச்சாரம், இராணுவக் குழு என்பனவே இந்த நான்கு பிரிவுகளுமாகும். ஆனாலும் 1975இல் சர்வாதிகாரி இறந்து நாடு ஜனநாயக மலர்ச்சி கண்டதன் பின்னர் ETA-Mஇன் கவர்ச்சி குன்றிவிட்டதாகத் தெரிகிறது. இதற்கான காரணங்களைப் பின்னர் பார்ப்போம்.

### அரசின் பதிலென்ன?

1939-1975 வரையான காலப்பகுதியில் ஜெனரல் ஃபிராங்கோவின் அணுகுமுறையும் அதன் பின்னரான ஸ்பெயினின் அணுகுமுறையும் தீவிரவாதிகள் விடயத்தில் முற்றிலும் மாறுபட்டவையாகவே இருந்தன. தனது நடவடிக்கைகள் தீவிரவாதத்துக்குத் தீனிபோடுவதை ஜனாதிபதி அறிந்திருந்தார் எனினும் தேசியவாத, அடையாளத்தை அழித்து விடலாம் என்ற நம்பிக்கையை அவர் இறுதிவரை இழக்கவில்லை. அப்படியிருந்தும் இடையிடையே அவர் சமரச முயற்சிகளுக்கு முனைந்ததும் உண்டு. இவரது ஆட்சியில் ஸ்பெயின் மனித உரிமைகள் மீறலுக்காக ப் பலத்த கண்டனத்துக்கு உள்ளாகி ஐரோப்பியப் பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்டது. அத்துடன் அண்டை நாடான பிரான்ஸுடன் சுமுகமான ஒத்துழைப்பையும் இவரால் பெற்றிட முடியவில்லை. ஆரம்பத்தில் பார்த்ததைப் போல, பாஸ்க் தீவிரவாதிகள் பிரான்ஸின் தென்கோடிக்குள் தப்பியோடிப் புகலிடம் பெறமுடிந்தது. இவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்குப் பதில் பிரான்ஸ் ஒருவித அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்தது.

ஜனாதிபதி ஃபிராங்கோ போன்றவர் ஆட்சியிலிருந்திராவிட்டால் ETA-M, EE, HB போன்ற புதிய இயக்கங்கள் தோன்றியிருக்கா என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பாராளுமன்றப் பாதைக்குள் நின்று சுயாட்சி கோரிய PNVயும் பாராளுமன்றம் போகாமல் போராடுவோம் என்ற ETAயும் இன்று புதியவர்களின் வரவால் முக்கியத்துவம் இழந்துவிட்டன. புதியவற்றைப் பயங்கரவாதிகள் எனச் சொல்ல முடியாமல் அவர்களுடன் ஒத்துப்போக முயற்சிக்கின்றது PNV. இதற்குப் பாஸ்க் மக்களில் 45%க்கு மேற்பட்டவர் ஒருபோதுமே வாக்களித்ததில்லை. ஃபிராங்கோ இறந்திராவிட்டால் HB முதலாமிடத்துக்கு வந்து PNVயைப் பின்தள்ளியிருக்கும் என நம்பப்பட்டது. சர்வாதிகாரம் போய் ஜனநாயகம் வந்ததும் புதிய அரசு இந்தப் பிரச்சினையை இரண்டு விதங்களில் அணுகியது. நாடுமுழுவதிலும் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி -பாசிஸ சர்வாதிகாரம் என்ற கறையை அகற்றியமை.- இதன் மூலம் பாஸ்க் மக்கள் விரும்பிய இடத்துக்கு போய் 'நிம்மதியாக' வாழலாம் என்ற நிலை. இரண்டாவதாக -பாஸ்க் பிராந்தியத்துக்குள் இயன்றவரை சுயாட்சியை உறுதிப்படுத்துதல். இதற்காக இதயசுத்தியுடனான பல பிரயத்தனங்கள் செய்யப்பட்டன. தீவிர வலதுசாரிக் குழு ஒன்று மத்தியில் உருவாகலாம், இராணுவச் சதி தோன்றலாம் என்ற இடர்களுக்கு மத்தியிலும் அதிகாரப் பகிர்ந்தளிப்புக்கு அரசாங்கம் உண்மையாக முயன்றது. இங்குதான் ETA-M ஈடுகொடுக்க முடியாத நிலை தோன்றியது. தீவிரவாதம் தேவைதானா என பாஸ்க் மக்கள் கேட்கும் நிலை எழுந்தது.

இந்தப் பின்னணியில் அரசு பிரான்ஸின் சோசலிஸவாதிகள் ஆதரவுடனான அரசாங்கத்தின் ஒத்துழைப்பையும் கோரிப் பெற்றது. இது இராஜதந்திரரீதியிலான பாரிய வெற்றி. இதையடுத்து ஐரோப்பிய அமைப்புக்களில் ஸ்பெயினுக்கு மீண்டும் அங்கத்துவம் வழங்கப்பட்டது. 1978இன் புதிய அரசியலமைப்பில் ஸ்பெயின் தனது பிராந்திய மக்களது உணர்வுகளைத் தெளிவாக அங்கீகரித்தது. வெளிநாடுகளில் மறைந்திருந்த பாஸ்க் இனத் தலைவர்கள் நாடு திரும்ப முடிந்தது..1977 தேர்தலில் எல்லாக் கட்சிகளுமே அதிகாரப் பரவலாக்கல் விடயத்தில் 'விழுந்தடித்துக் கொண்டு' யோசனைகளை முன்

→15

நன்றி - நூலகத்திட்டம்



## கிழக்குப் பல்கலைக்கழகம்:

# ஏன் முஸ்லீம்கள் கல்வி கற்க முடியாது?

சரிநிகர் இதழ் 35இல் ''கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முஸ்லீம் மாணவர்கள்'' சாத்தியமான ஒரு தீர்வு? எனும் தலைப்பிலான அ.சிவரெத்தினம் என்பவரது கட்டுரையைப் படித்ததும் வேதனைகள் தான் ஏற்பட்டது. இக்கட்டுரையை கிழக்கு மாகாணத்தைச் சேராத ஒருவர் எழுதி இருந்தால் பேசாமல் விட்டு விடலாம். ஆனால் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இருந்து கொண்டே, அடிக்கடி முஸ்லீம்கள் தமிழ் போராளிகளால் கடத்தப்பட்டும் கொள்ளையிடப்பட்டும் இம்சிக்கப்படுவதைப் பார்த்துக் கொண்டே இவ்வாறு எழுதுவதற்கு வெள்ளாடுகளை வேண்டி நிற்கிறாரா என்று எண்ண வைக்கிறது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முஸ்லீம் மாணவர்கள் கல்வி கற்கக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கிறதா என்பதை ஆராயுமுன் கிழக்கு மாகாணத்தின் தமிழ்ப்பகுதிகளுக்கு முஸ்லீம்கள் நிராயுத பாணியாக எந்நேரமும் சென்று திரும்பக் கூடிய நிலை உள்ளதா என்பதுவே முதலில் ஆராயப்பட வேண்டிய விடயம்.

யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லீகளை உடுத்த உடையோடு விரட்டியவர்கள் புலிகள். அதே புலிகள் இன்னமும் மட்டக்களப்பிலும் கிழக்கின் இதர பகுதிகளிலும் மறைமுகமாக செயல்படத்தான் செய்கின்றனர். ஒரு முஸ்லீமுக்கு எவ்வாறு யாழ்ப்பாணம் சென்று வர முடியாதோ அதே போல் அவனால் யாழ் பல்கலைக்கழகத்தில் படிக்கவும் முடியாது. அதே போல் கிழக்கில் ஒரு முஸ்லீம் சுதந்திரமாக எங்கும் போய் வரக்கூடிய நிலைமை இன்னமும் இல்லை. இதற்கான அத்தாட்சிகளை பின்னர் விளக்குகிறேன். அதற்கு முன்-

சிவரெத்தினம் அவர்கள் மட்டக்களப்பு நகரில் முஸ்லீம்கள் தமிழ் மக்களோடு வாழ்வதையும் கிழக்கு பல்கலைக்கழகத்தில் சில முஸ்லீம்கள் ஊழியம் செய்வதையும் வைத்து முழு முஸ்லீம் சமூகத்துக்கும் தீர்ப்பளித்துள்ளார். இது சிங்களப் பகுதிகளில் தமிழர்கள் சுதந்திரமாக வாழும் போது தமிழர்களுக்கு வேறு என்ன உரிமை வேண்டும்? என்று சிங்கள அரசியல் வாதிகள் சொல்வதைப் போன்றுள்ளது.

முஸ்லீம்கள் வாழும் போதுதான் காத்தான்குடி பள்ளி வாசலிலும் ஏறாவூரிலும், பொலனறுவையிலும் சம்மாந்துறையிலும் முஸ்லீம்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். மட்டக்களப்பில் முஸ்லீம்கள் தமிழர்களோடு வாழும் போது தான் கல்முனையிலிருந்து மட்டக்களப்புக்குச் சென்ற சுமார் 200 முஸ்லீம்கள் ஒந்தாச்சி மடம் எனுமிடத்தில் சுட்டுக் கொல்லப்பட்டனர். பெண்கள் கற்பழிக்கப்பட்ட பின் கொல்லப்பட்டனர் என்று அப்பகுதியைச் சேர்ந்த ஒரு தமிழர் என்னிடம் கூறினார். அவர்கள் அனைவரினதும் மையத்துக்கள் கூடக் கிடைக்கவில்லை. (அவர்களில் எனது தந்தையும் ஒருவர்)

ஆக, இவை அத்தனையும் மட்டக்களப்பில் முஸ்லீம்கள் வாழும் போதுதான் நடைபெற்றது என்பது சிவரெத்தினத்துத் தெரியாதா? மட்டக்களப்பு நகரில் உள்ள முஸ்லீம்களின் எத்தனை கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன? தொலைக்காட்சிப் பெட்டியுள் குண்டு வைத்து தகர்க்கப்பட்டன என்பதெல்லாம் தெரியாத ஒருவர் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இருப்பது வேதனையானது. மட்டக்களப்பில் கடை வைத்துள்ள முஸ்லீம்கள் கப்பம் கட்டி அடிமைப்படுத்தப்பட்டது மறந்து விட்டதா?

கிழக்கு மாகாணம் எனும் போது மட்டக்களப்பு நகரும் அதனை அண்டியுள்ள ஏறாவூர், வாழைச்சேனை, காத்தான்குடி ஆகிய நகரங்களும்தான் அடங்கும் என்று கட்டுரையாளர் நினைக்கிறார் போலும். கல்முனை,

> **ஒரு லட்சமல்ல இரண்டு லட்சமும் போகட்டும் நீ போகாதே மகனே!**

அக்கரைப்பற்று, பொத்துவில் வரை கிழக்கு மாகாணம் நீளுவதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். பொத்துவில் முஸ்லீம் திருக்கோவில் வழியாக அக்கறைப்பற்றுக்கு வருவது என்றால் சுமார் நாற்பது கிலோமீட்டர் தூரம் தான். ஆனால் பொத்துவில் முஸ்லீம்கள் 'ஸ்கொட்' இல்லாத நாட்களில் சுமார் 250 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள சியாம்பாண்டுவ வழியாகத் தான் இந்த 93, டிசம்பர் வரை வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். கல்முனையிலிருந்து கொழும்பு நோக்கி செல்லும் முஸ்லீம்களின் வாகனங்கள் எதுவுமே மட்டக்களப்பு வழியாக இன்று வரை செல்வதில்லை.

இதற்கெல்லாம் காரணம் என்ன? மட்டக்களப்பில் இன மோதல் நடந்து கொண்டிருக்கிறது என்பது இதன் பொருளா? இல்லை மாறாக எந்த நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற அச்சம் தான். முஸ்லீம்களை சமதையாக ஏற்றுக்கொள்ள தமிழ் போராளிகள் மறுப்பதும் இன்னொரு காரணம். தமிழ்ப் போராளிகள் காடுகளுக்குள் துப்பாக்கிகளுடன் இன்னும் ஒளிந்திருக்கிறார்கள். அவர்கள் திடீரென வெளியே வந்து வாகனத்தை மறித்தால் சிவரெத்தினம் மீட்டுத்தருவாரா?

ஐயா, ஓர் உண்மையைக் கூறுகிறேன்: கொஞ்சம் நிதானமாய்க் கேளுங்கள்.

எனது ஊரான கல்முனையிலிருந்து களுவாஞ்சிகுடி எனும் தமிழ் ஊர் சுமார் 8 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. இங்கே ஒருவர் (தமிழர்) சுமார் ஒரு லட்சம் ரூபாய் எமக்குத் தரவேண்டும். அவர் நல்லவர். போனால் வாங்கி வந்து விடலாம். களுவாஞ்சிக்குடிக்கு

**கல்முனை முபாறக்**

போய் வரவா என்று என்தம்பி என்தாயிடம் கேட்ட போது எனது தாய் என்ன கூறினார் தெரியுமா?

''ஒரு லட்சமல்ல இரண்டு லட்சமும் போகட்டும் நீ போகாதே மகனே'' என்றார் காரணம் எனது தாய் தமிழர்களினால் தனது கணவரையும், மகனையும் இழந்து அவர்களின் மையத்துக்களைக் கூட காணாதவர்.

இதே நிலையில் கிழக்கு மாகாணத்தில் ஆயிரமாயிரம் தாய்மார் உள்ளனர். படிப்புக்காக எந்த வொரு தாயும் தனது மகனை பலிபீடத்துக்கு அனுப்ப மாட்டாள். நான் கடந்த ஐந்து வருடங்களாக இன்னமும் மட்டக்களப்பு நகருக்கு கால் வைத்ததில்லை. அங்கு அமைதி நிலவினாலும் போகின்ற வழி பாதுகாப்பிற்கு உத்தரவாதமில்லாதது. தமிழர்கள் நம்பத்தகுந்தவர்கள் என்ற நம்பிக்கை இன்னமும் ஏற்படவில்லை.

எங்காவது ஓர் ஊரில் ஒரு முஸ்லீம் தமிழர் போராளிகளால் கொல்லப்பட்டால் அங்குள்ள முஸ்லீம்கள் பழிக்குப் பழி வாங்குவார்கள். இந்த நேரத்தில் நாம் இடையில் மாட்டிக் கொண்டால் அவ்வளவுதான். இது தான் கிழக்கின் யதார்த்தம்.

இந்த யதார்த்தத்தை உணராவிட்டால் கிழக்கு பல்கலைக்கழகத்தில் முஸ்லீம் மாணவர்கள் ஏன் கல்வி கற்க முடியாது என்பதையும் உணர முடியாது. இந்த யதார்த்தத்தை நடைமுறை நிகழ்வுகளோடு சுட்டிக்காட்டி ஒரு புத்தகமே எழுதலாம். விரிவஞ்சி சுருக்கமாகத் தந்துள்ளேன்.

சுருக்கமாக ஒன்றைச் சரிநிகர் பத்திரிகைக்கு சொல்ல விரும்புகிறேன். அதாவது, கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டு அங்கு செல்ல விரும்பாத மாணவர்களைத் தெரிவு செய்து அதற்கான காரணத்தை அவர்களிடமும், அவர்களின் பெற்றோர்களிடமும் பேட்டி காண்பதே முறை. அப்போது பல கசப்பான உண்மைகள் தெரிய வரும். இதனை விடுத்து தற்கால -நிரந்தரமற்ற -அமைதியை வைத்து முஸ்லீம் சமூகத்தின் எதிர்கால தலைமுறையினரை அநியாயமாக பலியிட வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

# பின்னடைவின் பின்னணி

நாடு அமைதியாய் இருந்த காலத்தில் கே.டபிள்யு. தேவநாயகம் அவர்கள் அமைச்சராய் இருந்த போது மூவின மக்களும் ஓர் இடத்தில் ஆங்கில மொழிமூலம் கல்வி பயிலும் பொருட்டு மட்டுநகரிலுள்ள பிரபல கல்லூரிகளையெல்லாம் கேட்டார். யாரும் அப்போது செவிசாய்க்கவில்லை. ஈற்றில் கிழக்கு மாகாணத்திற்கான பல்கலைக்கழக மொன்று இல்லாமல் போய் விடும் என்ற அச்சம் காரணமாக தனது தொகுதி மக்களின் பலத்த எதிர்ப்பையும் கருத்திற் கொள்ளாது வந்தாறுமூலை மகாவித்தியாலயக் கட்டிடங்களைக் கொடுத்தார்.

பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட போது மூவின மக்களும் ஒற்றுமையாய்க் கல்வி பயின்றனர், பணியாற்றினர். 1983 ம் ஆண்டு கலவரம் ஆரம்பமான போது சிங்களவர் வெளியேறினர். இற்றைவரை அவர்களால் இவ்வளாகத்தைத் திரும்பிக் கூடப் பார்க்க முடியவில்லை. 1990ம் ஆண்டு கலவரம் உச்சக்கட்டத்தை அடைந்த போது முஸ்லீம்கள் வெளியேறினர். இவர்கள் ஏனைய பல்கலைக்கழகங்களில் ஒட்டிக் கொண்டு கஷ்டப்படுகின்றனர். சூழல் பயங்கரமானதால் பல தமிழர்கள் கூடவெளியேறி விட்டனர். இவ்வளாகத்துள் வைத்து 150 தமிழர்கள் ஊழியர்களுட்படக் கைது செய்யப்பட்டு இற்றைவரை இவர்களின் கதி யாருக்கும் தெரியாது. இவர்களின் கைதுக்குக் காரணம் முஸ்லீம்களே என இவ்வூர் மக்கள் சாடுவதோடு முஸ்லீம்களைப் பரமவைரியாகவும் கருதுகின்றனர். மேலும் இவ்வளாகத்திற்குச் சொந்தமான 50 கோடி ரூபா பெறுமானமுள்ள சொத்துக்கள் சூறையாடப்பட்டதோடு கட்டமும் தீ மூட்டப்பட்டது.1986ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பல லட்ச ரூபாய்கள் பெறுமதியான சொத்துக்கள் சேதமாயின. இவை எல்லாவற்றுக்கும் காரணம் இவ்வளாகம் ஒரு பொருத்தமில்லாத, பாதுகாப்பற்ற இடத்தில் அமைந்திருப்பதேயாகும்.

இவ்வளாகத்திற்கான விஞ்ஞானபீடக் கட்டிடத்திற்காக 'பிரிட்டிஷ் கவுன்ஸிலால்' ஆறு வருடங்கட்கு முன் 50 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. இங்கு பாதுகாப்பின்மையாலும், கட்டிடம் கட்ட யாரும் முன்வராததாலும் இன்னும் வேலையே ஆரம்பிக்கப்படாமல் உள்ளது.

வெளியூரவர் தங்குவதற்கும் பாதுகாப்பும் வசதிகளும் இல்லாத காரணத்தால் இவ்வளாகத்தில் ஏற்படும் விரிவுரையாளர் பணியாளர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்கப் பலர் பின் நிற்கின்றனர்.


புலமைப்பரிசில்கள் பெற்று வெளிநாடு செல்வோர், இவ்வூருக்கு வந்து பணிபுரிய மனமில்லாமல் வெளிநாடுகளிலேயே தங்கி விடுகின்றனர். வெளிவாரிப் பட்டப்படிப்பு, கம்பியூட்டர் பயிற்சி முதலானவற்றிற்குப் பதிவு செய்தோர் இடை நடுவில் விட்டு விடுகின்றனர். பலர் மட்டுநகரில் பயிற்சியை நடாத்தும்படி கோருகின்றனர்.

இந்த லட்சணத்தில் மட்டுநகரில் சீராக இயங்கி வரும் கலை, வர்த்தக பீடங்களையும் வந்தாறுமூலைக்குக் கொண்டு செல்லும் உத்தேசத்தில் நிர்வாகத்தினர் இயங்குகின்றனர். இதன் விளைவாக இம்முறை விஞ்ஞான, விவசாய பீடங்கட்கு ஒரு முஸ்லீம் மாணவர் கூட வரவில்லை. நகரிலுள்ள கலை.வர்த்தக பீடங்களுக்கு ஐந்து முஸ்லீம் மாணவர்கள் மாத்திரமே பதிவு செய்துள்ளனர். ஏனைய பல்கலைக்கழகங்களில் இடம் பெயர்ந்து கற்றுவந்த மாணவர்களில் இறுதியாண்டினர் மாத்திரம் தங்கள் இறுதிப் பரீட்சையை வந்தாறு மூலையில் வந்து எழுதிவிட்டுத் தப்பினோம் பிழைத்தோமென்று சென்று விட்டனர். இவர்கள் மட்டக்களப்பு நகரில் இருந்தே ஒவ்வொருநாளும் வந்து சென்றனர். இவ்வாறே விரிவுரையாளராய், பணியாளராய் உள்ள தமிழர்களும்,பெரும்பாலான தமிழ் மாணவர்களும் மட்டுநகரிலிருந்தே வந்தாறுமூலைக்கு வந்து பணிபுரிகின்றனர், பயில்கின்றனர்.

எனவே மானிய ஆணைக்குழுவும் அரசாங்கமும் நிர்வாகத்தினரின் ஒரு தலைப்பட்சமான நிலைப்பாட்டை மாற்றியமைத்து விஞ்ஞானபீடத்தை உடனடியாக மட்டுநகர்ப்பகுதியில் அமைத்து மூவின மக்களும் ஒருங்கே பயமின்றிப் பயில்வதற்கு ஆவன செய்ய வேண்டும். இதை மூவின மக்களையும் சரிநிகராக மதிக்கும் அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள். கிழக்குப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டதன் நோக்கமும் நிறைவு பெறும். மாறாக நிருவாகத்தின் போக்கில் விடும் பட்சத்தில் கிழக்கில் முஸ்லீம்களுக்கென ஒரு பல்கலைக்கழகமும், சிங்களவருக்கென ஒரு பல்கலைக்கழகமும் அமையும் நிலை ஏற்படுவதோடு இம்மாகாணத்தில் இனங்களுக்கிடையேயான இடைவெளி பெரிதாகிவிடும் என்பதிலும் ஐயமில்லை.

**ந.விஷ்ணுகுமார்**

# சிறகு முளைத்த கவிதை



கவிதைக் கூட்டமெல்லாம்
பாட்டம்பாட்டமாக வந்து
என் மா மரத்தில் குந்தியது.

என்ன அதிசயம்!
கவிதைக்கெல்லாம் சிறகு முளைத்து விட்டது
எல்லோரும் கதைத்துக் கொண்டு
எட்டி எட்டி பார்த்தார்கள்.

ஒரு கவிதை
இன்னொன்றுக்கு ஏறி மிதித்தது.
இன்னும் சில
சொண்டுக்குள் சொண்டை
ஒட்டிக் கொண்டு நின்றன.

காகமும் குயிலும்
மரத்தை சுற்றி
கத்திக் கத்தி பறந்தது.
அங்கு நின்ற ஆண்கவிதையொன்று
ஒரு காகத்தின் தலையில்
சிறுநீர் அடித்தது
காகம் மண்ணில் விழுந்தது
எல்லாக் கவிதைகளும்
கைதட்டிச் சிரித்தது.

மாம் பிஞ்சுகளை பறித்து
கடித்துத் துப்பியது ஒரு வெறிபிடித்த கவிதை.

மா மரம் அசையாமல் நின்றது
காற்றைக் கைது செய்து கொண்டது கவிதைகள்.

உலகம் அழியப் போகிறது
கவிதைக்கெல்லாம் சிறகு முளைத்து விட்டது.
சுதந்திர காற்றுக்கூட இனி நமக்கு இல்லை
என்று தங்களுக்குள் பேசிய வாறு
அங்குமிங்கும் ஓடியது பூனையும் -நாயும்



— முகமட் அபார் —

நன்றி - நூலகத்திட்டம்





# வெயிலில் நனைந்திட; அரங்கின் இன்னொரு வடிவம்

அ.ரவி

புதிய தரிசனம் ஒன்று **'வெயிலில் நனைத்திட'** எனும் அரங்க நிகழ்வினூடாக அனுபவிக்கக் கிடைத்தது.

கொழும்புப் பல்கலைக்கழக - இந்து மன்றம் விவேகானந்தர் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிற சமயம் மேற்படி புதிய அரங்கு ஒன்று தரிசிக்கக் கிடைத்தது. அதனைச் சம்பாதித்த அனைத்துக் கலைஞர்களும் வந்தனம்.

நாம் நாடக, அரங்கு குறித்து விவாதித்துக் கொள்கிற போது எது அரங்கு, அதன் நிகழ்வு யாது? எதனை அரங்க நிகழ்வு என வாய்கூசாமல் கூற முடியும்? எனும் வினாக்கள் எழுவதுண்டு.

கொழும்பில் நடைபெறுகின்ற பெரும்பலான நிகழ்வுகளை (கவனியுங்கள்! நாடகம், அரங்கு என்று கூற வாய் கூசுகிறது) நாம் புறங்கையால் தட்டி விடுகிறோம். அவை விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவை (அதனையும் புரிந்து கொள்ளுங்கள்)

எமது கவனத்தின் பாற்படுவன நாடக, அரங்க உணர்வுடன் தயாரிக்கப்படுகின்ற நாடக நிகழ்வுகளே. இவ்வகையிலேதான் **அரங்காடி**களின் நாடக, அரங்க நிகழ்வுகள் குறித்த சில குறிப்புகள் இதில் வருவதுண்டு. இப்போதும் தெளிவாக ஒன்றினைக் குறித்துக் (அடித்துக்) கூறமுடியும். அரங்காடிகளால் தயாரிக்கப்பட்ட அனைத்து நாடகங்களும் அரங்க உணர்வுடன் நிகழ்த்தப்பட்டவை. அதில் சந்தேகமில்லை. ஆனால் கேள்வி என்னவெனில், அவ்வகையில் அந்நிகழ்வுகள் வெற்றிகரமான படைப்பா? இவ்வினாவுக்கு பார்வையாளர்களிடமும், விமர்சகர்களிடமும் வெவ்வேறு வகையான விடைகள் கிடைக்கக்கூடும்.

**சரிநிகர்** ஜனவரியில் வநத சிறப்பிதழில், **அரிதேவா** என்பவர் **அரங்காடி**களின் நாடக, அரங்க நிகழ்வுகள் குறித்து சில கருத்துக்கள் கூறியிருந்தார். அவை முற்றிலும் உடன்பாடு கொள்ளக்கூடிய கருத்துக்கள் அல்ல. இன்னும் சுருக்கமாகச் சொல்லப்போனால் அரங்காடிகளின் அரங்க நிகழ்வுகள் பற்றிய விமர்சனமாக அமையாமல் தான் கற்றறிந்த சில விடயங்களைக் கூறி, அரங்க நிகழ்வுகள் குறித்த சில முடிவுகளையும் கூறி விடுகிறார். அதுபற்றி விரிவாகப் பின் வேறொரு சந்தர்ப்பத்தில் க்வனிக்கலாம்.

**'வெயிலில் நனைந்திட'** எனும் இந்நாடக அரங்க நிகழ்வு, அரங்கை அது பயன்படுத்திக் கொண்ட முறையில் வெற்றியைப் பெற்று விடுகிறது. **'போரம்' அரங்கு** (Forum theatre)எனும் பரிசோதனை முயற்சியிலேயே இவ்வரங்கு வெளிப்பட்டது. குறிப்பிட்ட ஒரு கரு, நெறியாளரினூடாக ஏனைய கலைஞர்களிடம் விதைக்கப்படுகிறது. ஏனைய கலைஞர்கள் அக்கரு தொடர்பாக பல்வேறு கருத்துக்களை முன் வைப்பார்கள், அதனை வெட்டியும், கொத்தியும், அடித்தும், திருத்தியும் மாற்றிக் கொள்வார்கள். மாறாமலும் விடுவதுண்டு. அக்கருவுக்கான சட்டம் (Frame)போடப்படும். இப்போது எல்லாக் கலைஞர்களும் சேர்ந்து காட்சி வாரியாகப் பிரித்துக் கொள்வார்கள். பிறகு கலைஞர்கள் தம் பங்கையும் பகிர்ந்து கொள்வார்கள். தமக்குரிய நடிப்பாகத் (acting part)தின்ன தெரிந்தவுடன், நெறியாளரும் அவர்களுள் ஒருவராகக் கொண்டு, நாடகம் ஒத்திகைகளைச் செயற்படுத்துவார். **இதற்**கான பிரதி எழுதப்படாமலும் **விடுவது** உண்டு. குறிப்பிட்ட **பாத்திரத்திற்**கேற்ப, நடிகர்கள் , **பொதுவான கருத்**துக்கியைய, வசனங்களை **ஆக்கிக்** கொள்வார்கள். இவ்வாறான **அரங்கு**, நாடக அரங்க பயிற்சிப் பட்ட**றையினூ**டாகவே (drama and theatre workshop) சாத்தியமாகும்.

**வெயிலில் நனைத்திட எனும் நாட**கம் இவ்வகையிலானது; **வெற்றிகர**மான படைப்பாகவும் **அமைந்தது.** குழந்தை அழுது கொண்டி**ருக்கிறது.** வெளியில் மழை. மழையை **நிறுத்தி**னால் குழந்தை அழுவதை நிற்பாடடும். ஆனால் உண்மைக் காரணத்தைத் தெரிந்து கொள்ளாமல் (அல்லது தெரிந்து கொள்ள விரும்பாமல்) பல்வேறு பரிகாரம் செய்து பார்க்கப்படுகிறது. குழந்தை சற்று நேரம் அழுகையை நிறுத்தினாலும், பின் கீச்சிட்டு அழுகிறது. லாம்பு பிடித்தபடி ஒருவர் (உரைஞர் எனலாமா?) இடையிடை தோன்றி குழந்தை அழுவதற்கான காரணங்களைப் பார்வையாளரிடம் கேள்விகள் மூலம் எழுப்புகிறார். சில தரவுகளைக் கொடுத்துப் பார்க்கிறார்.

இது சூசகமான முறையில் கொண்டு எழுத்தப்பட்ட நாடகம். குழந்தையின் அழுகை என்பது எதன் குறியீடு? மழை எதன் குறியீடு? இது ஒன்றிற்கு இன்னொன்றை உருவகப்படுத்த வேண்டியது. பார்வையாளர்களுக்கு இது சில வேளைகளில் சிக்கல் மயம் தான். ஆனால் ஒரு முடிச்சு அவிழ்ந்து விட்டால், நாடகம் படபடவென பார்வையாளர்களுக்குப் புரிந்து விடும்.

இந்நாடகத்தில், ஒரு முடிச்சு சட்டென, சுலபமாக அவிழ்ந்து விடுகிறது. வெளிநாட்டுக்கு அனுப்புகிற ஏஜென்சி கூறுகிறார். ''இந்த மழை இப்போதைக்கு நிக்காது. ஆகவே வெளிநாட்டிலிருந்து ஒருத்தரையும் இப்போதைக்கு இங்கை அனுப்ப மாட்டாங்கள். பயப்பிடத் தேவையில்லை''

இப்போது மழை எதுவெனப் புரிந்து விடுகிறது. மழையைப் புரிந்தால் குழந்தையின் அழுகையையும் புரிந்து கொள்ளலாம். இப்போது நாடகம் முதலிருந்து முடிவு வரை அப்பட்டமாகவே புரிந்து விடுகிறது.

புரிந்து விடுவது ஒன்றும் பிழையல்ல, அது தான் நாடகத்தின் வெற்றியும் கூட. மற்றது, பார்வையாளர்கள் முட்டாள்களும் அல்ல. **வேர்டொல்ட் பிரெக்ற்** (Bertolt Brecht)கூறியது போல **''பார்வையாளர் தமது தொப்பியுடன் மூளையையும் கழற்றி விட்டு அரங்கிற்குள் நுழைய மாட்டார்கள்.''**

இவ்வரங்கு சாதித்துக் கொண்ட வெற்றி இதுதான்! தாம் எடுத்துக் கொண்ட பொருள் சட்டென பார்வையாளர்களிடம் புகுந்து கொள்கிறது. அதற்காக **நெறியாளர்** பயன்படுத்திக் கொண்ட **அரங்க** வடிவமும், புதுமையானது மட்டுமன்றி, எளிமையானதும் கூட. நாடகத்தின் முழு வடிவமுமே இத்தகைய அனுபவத்தையே தந்து கொண்டது. இவ்வடிவத்தைத் தெரிவு செய்து கொண்ட **நெறியாளர்களுக்கு** இது வெற்றி. (இவ்வடிவம் எழுத்தில் கூறக் கூடியது அல்ல, பார்வையால் அனுபவிக்க வேண்டியது. நாடக அரங்கு பார்ப்பதற்குரிய கலை)

இவ்வரங்கில் பங்காற்றிய சகல கலைஞர்களினதும் கூட்டுழைப்பு இந்நாடகம். இந்நாடகத்தின் வெற்றிக்குச் சகலர்க்கும் சம பங்கு உண்டு. எனினும், இந்நாடகத்தின் நெறியாளரான **விஜித் சிங்**(அவ்வாறு தன் பெயரிடப்படுவதினை அவர் விரும்வில்லை) அவர்களின் அபாரமான கற்பனையாற்றல், படைப்புத்திறன், அசாத்தியமான உழைப்பு ஆகியவை இந்நாடக அரங்க வெற்றிக்கு பெரும் பங்காற்றியிருக்கின்றன.

நிறை எழுதினால் குறையும் எழுத வேண்டும் தானா, கட்டாயம்? ஆனால் **விஜித்சிங்**கிற்குச் சில சமர்ப்பணம்-


யாழ்ப்பாணத்துத் தந்தை அவர் பாவம். தன் மகளை வெளிநாட்டிலுள்ள மாப்பிள்ளைக்கு அனுப்ப அவர் படும் சிரமம் -கிண்டலுக்குரியவை அல்ல. அனுபவத்திற்குரியவை. அவ்வாறே தான் வெளிநாட்டில் மைந்தனை கொண்டிருக்கிற தந்தையும் அனுதாபத்திற்குரியவர்தான். அவர்களுக்குத் தொலைபேசி கையாளத் தெரியாதென்றாலோ, தொலைபேசியில் எவ்வாறு பேசுவது என்பது தெரியாதென்றாலோ - நாம் அதற்காகக் கவலைப்படுவோம். மண்வெட்டி பிடித்த கை, தொலைபேசியைப் பிடிக்கத் தெரியாது தான். பொதுவாக யாழ்ப்பாணத்தின் சூழல்தான் அவர்களை இத்தகைய நிலைக்குத் தள்ளியது என்பதையும் நாம் புரிதல் நல்லது. பொதுவில் எம்மனிதரும் கிண்டலுக்குரியவரல்லர்; அனுதாபத்திற்குரியவர், அல்லது கண்டனத்திற்குரியவர். மற்றது நாடகத்தின் அடிப்படை நல்ல மனிதர்களை உருவாக்குவது

இன்னுமொன்று. நாடக அரங்க செயற்பாட்டில், நடி பாத்திரங்களின் ஒவ்வொரு அசைவுக்கும் சிறப்பான அர்த்தம் உண்டு. ஒரு நடிகர் வெறுமனே மேடையில் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு போய் வர முடியாது. நெறியாளரினால் அதற்கான அர்த்தம் வியாக்கியானிக்கப் பட வேண்டும். ஆனால் அதற்காக சகல அசைவுகளும், அதற்கான அர்த்தங்களும் பார்வையாளருக்குப் புரிந்து விடுமென்றல்ல. புரிவது பாதிப்புரியாதது மீதி. ஆனால் நெறியாளர் அதற்கான அர்த்தத்தை தன்னகத்தே கொண்டிருப்பார்.

இந்நிகழ்வுகளிலும் சில செயற்பாடுகளின் அர்த்தம் புரிபடவில்லை. நாடகத்தின் தொடக்கத்தில் கலைஞர்கள் பாரதியாரின் 'மழை' பாடலைப் பாடிக் கொண்டு மேடையின் சகல திசைகளிலும் நடமாடுகிறார்கள். இதன் அர்த்தம் புரியவில்லை. உரைஞர் (எனக் கருதப்படுபவர்) ஒரு லாம்பு தூக்கிக் கொண்டு பார்வையாளரிடம் சில வினாக்களைத் தொடுக்கிறார். தரவுகளைக் கொடுக்கிறார். இந்த லாம்பு எதன் குறியீடு? அல்லது இதற்கு வேறெதாவது அர்த்தம் உண்டா? எனும் கேள்விகள் உண்டு.

ஒருவர் பல்வேறு பாத்திரங்களை ஏற்று நடிப்பது, குழந்தை ஓரிடத்தில் இருக்க, வைத்தியர் இன்னோரிடத்தில் அக்குழந்தைக்கு மருத்துவம் பார்ப்பது எனப் பல்வேறு அம்சங்கள் இந்நாடகத்தில் சிறப்பைச் சேர்க்கின்றன. நடிபாகங்களைக் கலைஞர்கள் சிறப்பாகச் செய்தனர். குறிப்பாக குழந்தையாக நடித்த பெண் (சிங்கள மொழிக் கலைஞர்) களத்திற்கும், கருத்திற்கும் பொருந்தும் வகையில் தன் நடிப்பாற்றலை அற்புதமாக வெளிப்படுத்தினார்.

நாடகம் அதன் வடிவத்திலும், உள்ளடக்கத்திலும் சரியாக அமைந்தது. எனினும், உருவம் செம்மையுற அமையவில்லை. சில ஷிசிறல்கள் காணப்படுகின்றன. நெறியாளர் உருவத்தை இன்னும் செம்மைப்படுத்துவதில் கவனம் செலுத்தியிருக்க வேண்டும்.



இந்நாடக, அரங்க, நிகழ்வையிட்டு **விஜித்சிங்** அவர்களும், ஏனைய கலைஞர்களும் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.



நன்றி - நூலகத்திட்டம்



# 'தாகமாயிருக்கிறேன்'

மட்டுநகர் முத்தழகு

அதிகாலை ஐந்து மணியாகி விட்டது. இன்றும் இருதயபுரக் கோயிலிலே முதலாம் மணி ஒலிக்கவில்லை.

'காரணம் என்னவாக இருக்கும்?' -என் மனசுக்குள் எழுந்தது கேள்வி.

'ஓ' நேற்று உபதேசியார் தடுமலும் காய்ச்சலும் என்று சொன்னாரே! மழைபோல இப்ப பெய்யிற பனியில அவருக்கு மட்டுமா காய்ச்சலும் தடுமலும்! ஊரெல்லாம் இப்ப மூக்கால கதைக்கிறதும், கையால கழுத்தைத் தொட்டுக் காட்டுறதுமாகத்தானே இருக்கு. அதனால்தான் அவர் வரவில்லை போலும்!

அப்படியென்றால் நான்தானே சுவாமிக்கு உதவிப் பணிகளைச் செய்ய வேண்டும்.

காலையில் குளித்துப் புனிதமாகக் கோயிலுக்குப் போகும் நான் முகத்தை மட்டும் பூனை துடைப்பதைப் போல் துடைத்துக் கொண்டு பிளாஸ்கில் இருக்கும் கோப்பியையும் குடிக்காமலே அவசரம் அவசரமாகவே எங்களின் வெளிக் 'கேட்டைத்' திறந்த போதுதான் தெரிந்தது- இருதயபுரம் இன்று 'ரவுண்டப்' என்று.

எங்கள் 'கேட்'டுக்கு வெளியே நிற்கும் அரசபடையினர் என்னை முறைத்துப் பார்த்ததும் நான் தாமதியாமல் வீட்டுக்குள் வந்துவிட்டேன். கோயிலிலே சொல்ல வேண்டிய ஜெபங்களை வீட்டில் இருந்து சொல்லும் போதுதான் 'வெடிச்சத்தங்கள்' காதில் விழத் தொடங்கின. துணைவியும் பிள்ளைகளும் மூலைக்கொன்றாக குந்திவிட்டனர். இளைய மகன் என்னோடு வந்து ஒட்டிக் கொண்டான்.

''ஆண்கள் அனைவரும் இருதயபுரம் ஆலயத்தின் முன்னே முழுந்தாளிட்டு இருங்கள்'' - ஒலி பெருக்கியின் ஆணை. படையினர் வயது வித்தியாசம் எதுவும் பார்க்கவில்லை.

பகல் -பன்னிரண்டுமணி

படையினரின் தேடுதல் வேட்டையில் பிடிபட்ட அனைவரையும் எங்களோடு இணைத்தார்கள். அவ்வளவுதான். பூனைகளிடம் அகப்பட்ட எலிகளின் நிலையானோம்.

யூதர்களினால் இயேசு ஆண்டவர்பட்ட சித்திரவதை கொடுமைகளை 'தபசுகால பாஸ்கா' நிகழ்ச்சிகளிலே நடித்துக் காட்டுவார்கள். நாங்கள் எல்லாம் அந்த நடிப்பைப் பார்த்துக் கண்ணீர் வடித்தோம்.

இன்று....எங்களது இருதய ஆண்டவருக்கு முன்னே அவர்களது சித்திரவதையின் ஆரம்பத் திருவிழா. துவக்கின் பின் புறத்தினால் குத்துவதும் அடிப்பதுமாக எங்கள் எல்லோரையும் சோர்வடைய வைத்து விட்டார்கள். எங்களுக்குள்ளே ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்ளச் சொன்னார்கள். எனக்கும் அந்த அதிகார ஆணை! வரிசைப்படியே பணிக்கப்பட்டது.

''என்னடா பாத்துக் கொண்டு நிற்கிற? அவனுக்கு அடி!'' - அவர்கள் அடிக்கச் சொல்லி சுட்டிக் காட்டியவர் எனது பக்கத்து வீட்டுக்காரர். நாங்கள் இருவரும் ஒரே கந்தோரில் வேலை செய்பவர்கள். பதவியிலும் என்னை விட உயர்வு. -'தலைமை கிளார்க்' அவரிடம் நான் மிகவும் மரியாதையாகத்தான் நடந்து கொள்வேன். இந்த நிலையில் நான் அவரை எப்படி கைநீட்டி அடிப்பேன்? - இந்தச் சிந்தனையும் தயக்கமும் ஒரு கணநேரம் தான்! மிருகமாக நின்றவனின் துப்பாக்கியின் அடிப்பாகம் என்னைத் தாக்கியதால் அடுத்த வீட்டுக்காரரின் காலடியிலே விழ நேர்ந்தது.

அவரிடம் அவர்கள் சொல்லவுமில்லை; அவர் என்னைப் போல் தயங்கவுமில்லை. நான் உரலாக இருக்க வேண்டியவன் தவிலாக ஆகிவிட்டேன்.

மாலை ஐந்து மணிக்கு எல்லோருமே கல்லடி முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். எங்களுக்குப் பின்னாலே பல ட்ரக்குகள்.

கண்ணி வெடித்தாக்குதலுக்குப் பயந்துதான் படையினர் எங்களுக்குப்பின்னால் வருகின்றார்கள் போலும்!

அந்த ட்ரக்குகளிலே சூட்டுக்கு ஆளான பலரது உடல்கள்.

''வரிசையாக நில்லுங்கள்'' -மீண்டும் ஆணை.

முன்னைய ஆட்சியிலே 'பாணுக்கும் சீனிக்கும்' கியூ வரிசையில் நின்றது போல நாங்கள் வரிசைப்படுத்தி நிற்கின்றோம்.

''பாரு, பாரு தலையாட்டிப் பொம்மை பாரு''

நாங்கள் தலையாட்டிப் பொம்மைக்கு முன்னால் நிற்கப் போகின்றோம். என் மனதுக்குள்ளே ஆயிரமாயிரம் எண்ணங்கள் அலை மோதின.

தலையாட்டி எனது, எங்களது எதிரியென்றால் நானோ, எனது குடும்பத்தினரோ போராளியாய் இருக்க வேண்டிய அவசியமில்லை.

இயேசுநாதருக்கு முள்முடி தரித்தது போல் எங்களுக்கும் முடிசூட்டுவிழா விமரிசையாக நடத்தப்படும். போராளியின் வடிவம் இயேசு. அவரது பாதை கல்வாரி. அவர் ஏந்திய ஆயுதம் சிலுவையும் அகிம்சையும் அவர் குற்றவாளியாகத் தீர்க்கப்பட்ட போதும் இயேசு ஊமையாகவே காணப்பட்டார். அவர் யாரையும் காட்டிக் கொடுத்தவரில்லை. இயேசுவோடு இருந்து கொண்டே முப்பது வெள்ளிக்காசுக்கு ஆசைப்பட்டுக் காட்டிக் கொடுத்தானே யூதாஸ். இவனை இயேசு என்னும் போராளியோடு ஒப்பிடலாமா?

காட்டிலும் மேட்டிலும், இரவும் பகலும் வீட்டைப் பற்றிய நினைவுகள் இன்றி நாட்டை மீட்கும் நினைவுள்ளவனுக்குத் தன் உடன் பிறப்புக்களைக் காட்டிக் கொடுத்து கஞ்சி குடிக்கும் எண்ணம் வரவே வராது.

இவ்விதமான எண்ணங்கள் என் மனதிலே அசைபோட பிலாத் திட்ட தீர்வைகள் எனக்கும் இருக்குமோ என நினைத்துக் கொண்டு கை கட்டி வாய் பொத்தி எறும்பு ஊர்வது போலவே சென்றேன்.

''மேலே பார்'' -அடக்குமுறையின் அதட்டல். அதிபர் முன்னால் நின்று நடுநடுங்கும் மாணவனாகவே நான் நின்றேன்.

அதிபரோ மாணவர்களின் வழிகாட்டும் ஒளிவிளக்கு இவர்களோ, தலையாட்டி முண்டம்!

என்னைப் பார்க்கும் அந்த ஒரு கணம்.... எனது இதயம் ஸ்தம்பித்து மீண்டும் இயங்கியது. முதலை வாயில் மீண்டவன் கதையானேன்.

அன்று சிலருக்கு மட்டுமே 'போராளி'என்ற முத்திரை குத்தப்பட்டது.

''உங்களுக்கு விடுதலை'' - அந்த வார்த்தை மகிழ்ச்சியைத் தந்தாலும் அடுத்து வந்த வார்த்தையோ அதிர்ச்சியைத் தந்தது.

''எங்களுக்கு உதவியாக நீங்களும் இன்று எங்களுடன் வேலைகள் செய்ய வேண்டும்.'' காலையிலே வீட்டுக்குப் போகலாம்.

வெளியே எட்டிப் பார்க்கிறேன். அங்கே இருதயபுரமே திரண்டு நிற்கின்றது. கல்வாரிச் சிலுவையின் கீழே தேவதாய் தவமிருந்தது போலவே 'நாங்கள் எப்பொழுது விடுதலை பெற்று வருவோம் என்று அவர்கள் வெளியிலே தவமிருக்கின்றனர்.

தபசு கால பெரிய வெள்ளியன்று 'பாஸ்கா' காட்சிகளை தேவமாதா ஆலயத்திலே காட்டுவது கிறிஸ்தவ மக்களின் ஒரு புனித பக்தி நிகழ்ச்சியாகவே அமைந்திருக்கும். அக்காட்சியில் வரும் யூதனைப் போலவே ஒருவன் அங்கு நின்று 'ட்ரக்கை' காட்டி அதிலே இருக்கும் பிணங்களை எடுத்து அந்தக் கிடங்குக்குள் போடுங்கள் என ஆணையிட்டான்.

நாங்கள் கேள்விப்பட்ட அந்தக் 'கிடங்கை' இல்லை 'கிணற்றை' இன்றுதான் பார்க்கப் போகின்றோம். எத்தனை எத்தனையோ இளைஞர்களின் உடல்களைத் தின்று சுவைத்த அந்தக் கிணறு வாய்பிளந்து நின்றது.

நான் 'ட்ரக்கின்' கதவைத் திறக்கின்றேன். எனக்கும் என்னோடு வந்தவர்களுக்கும் பெரும் அதிர்ச்சி. அறுபட்ட தேக்கு மரங்களை எப்படி லொறிகளிலே அடுக்கி வைப்பார்களோ அப்படியேதான் பல இளைஞர்களின் உடல்கள் அந்த 'ட்ரக்'குக்குள்ளே அடுக்கப்பட்டு கிடந்தன. அத்தனை உடல்களும் பதினெட்டு இருபது வயதுள்ள இளைஞர்களுடையவை. அவர்களது எதிர்கால எண்ணங்கள்?.....எத்தனை எத்தனையோ? அவ்வெண்ணங்களில் தலையாய எண்ணமோ தாய் நாட்டை மீட்பது?

உடன் பிறப்புகளான சகோதர, சகோதரிகளின் மங்கலச் சிறப்புக்கள் இவர்களாலேயே விளக்கேற்றி வைக்கப்பட வேண்டிய குடும்பங்களின் நிலை?.....

அவ்வுடல்களைப் பார்த்து சிந்தனையுடன் அசைவற்று நின்ற என்னையும் மற்றவர்களையும் 'யூதனின்' அதிகாரத் தொனி அசையவைத்தது.



அவ்வுடல்களுக்கு நாங்கள் அரச மரியாதைகள் செய்ய வேண்டாமா? -செப ஆராதனை செய்கின்றோம்.

உடல்களை ஒவ்வொன்றாகவே வெளியில் எடுக்கவே நாங்கள் முயற்சி செய்கின்றோம்.

சில உடல்கள் அடையாளம் காணமுடியாத படி 'அசிட்'டால் குளிப்பாட்டப்பட்டிருந்தன. ஒரு உடலை நானே கைகொடுத்து தூக்குகின்றேன். நான் பிடித்த இடத்திலேயே உள்ள சதைகள் என்னிரு கைகளிலே பழுத்த வெள்ளரிப்பழமாகவே துண்டு துண்டாக வருகின்றன. அந்த உடலின் இடக்கையில் கட்டியிருந்த 'சீக்கோ' கடிகாரம் இன்றும் ஓடிக் கொண்டுதான் இருக்கிறது. இரவு ஒன்பது மணியைக் காட்டுகின்றது.

அந்தக் கடிகாரம்?...-நான் தினமும் பார்க்கும் யோகராசாவின் கடிகாரம் தான். எனது மகனுக்கு அந்தப் பிள்ளைதான் பாடம் சொல்லிக் கொடுப்பவன். 'மாமா....மாமா....'என எனது மகன் யோகராசாவின் மேல் உயிரையே வைத்திருந்தான். அந்தக் குடும்பத்தின் தலைமகன். அவன்தான். வயது வந்த மூன்று சகோதரிகள். வயதான தாய். அவர்களுக்கு பாலூற்றும் இந்த உயிரும் போய்விட்டதே'... இனி அந்தக் குடும்பத்தைக் காப்பது யார்? இப்படி ஒன்றா, இரண்டா? எத்தனையோ தலைமகன்களை இழந்து தவிக்கும் குடும்பங்கள் தான் எத்தனை?

இன்னும் அந்தக் கிணற்றுக்குள் இருக்கும் 'தீ' தணியவில்லை. எப்படித் தணியும்? இந்த இளைஞர்களின் 'தாகம்' தணிந்தால்தானே அந்தக் கிணற்றுத் தீயும் தணியும்.

'கிணற்று அருகிலே நெருங்க முடியாத அனல்...நான் யோகராசாவின் உடலை தூக்கி வீசாமல் மெதுவாகவே போடுகின்றேன். எனது மகனுக்கு 'அம்மா' வென்று தமிழிலே எழுதப் பழக்கிய அந்த நன்றிக் கடனுக்காக ஒரு பரமண்டல பிரியதத்தம் செபம் செய்கின்றேன்.

ஒவ்வொரு உடலாக கிணற்றுக்குள் போடுகின்றோம். இன்னும் மூன்று உடல்கள்தான் உள்ளன. 'ட்ரக்'கை நெருங்குகின்றோம்.

அங்கே...செத்த உடல்களிலே ஒன்று எழுந்து உட்காருகின்றது.

நாங்கள் ஆடாது அசையாது அப்படியே நிற்கிறோம். பயத்தோடு ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கின்றோம்.

நேரம் இரவு பதினொரு மணி.

நான் மிக்கேல் மாலை செபத்தை மனதுக்குள்ளே ஜெபித்துக்கொண்டு 'ட்ரக்'கை நெருங்கி ''யாரது?'' என்று கேட்கிறேன்.

''தம்பி தாகமாக இருக்கின்றேன். தண்ணி தாங்க''

இயேசுநாதர் மூன்று நாளிலே உயிர்த்தெழுந்தார். இங்கே 'ரவுண்டப்' என்ற மனித வேட்டையின் போது பலியான உடல் குந்தியிருந்து தண்ணீர் கேட்டால்....எங்களுக்கு எப்படி இருக்கும்?

விறைத்துப் போய் நின்ற எங்களைப் பார்த்து அந்த உருவம் மீண்டும்'', தாகமாயிருக்கிறேன். தண்ணி தாங்க''

காலை ஏழுமணியிலிருந்து இரவு பதினொரு மணி மட்டும் ஒரு சொட்டுத் தண்ணீருக்காக தவிக்கும் எங்களிடம் தண்ணீர் கேட்டால்....!

கல்வாரி மலையிலே சிலுவையிலே தொங்கும் இயேசு 'தாகமாயிருக்கிறேன்' என்ற போது, தேவ தாய்பட்ட வேதனைகளை வியாகுலப் பிரசங்கத்திலே சின்னராசா அண்ணன் வாசிக்கும் போது கேட்டுக் கொண்டிருக்கும் தாய்மார்களும், வயதான கிழவிகளும் கண்ணீர் வடிப்பதைப் போலவே எங்களால் கண்ணீர் தான் வடிக்க முடியும்.

எங்கள் கண்களே எங்களுக்குச் சாட்சி சொல்லும். ''அந்தோனி என்னைத் தெரியவில்லையாடா. நான் சின்னராசா அண்ணன்டா''

''அண்ணன் நீங்களா?''

தூரத்தில் இருந்தே எங்களது நடமாட்டத்தைக் கவனித்துக் கொண்டிருந்தான் யூதன். எங்களையும் சின்னராசா அண்ணன்யையும் மாறி மாறிப் பார்த்த அவனிடம் அவருக்குத் தண்ணீர் வேண்டும் என்று சொன்னோம். அவன் எங்களிடம் ஒன்றுமே கேட்கவில்லை. தண்ணீர்தான் கொண்டு வருவான் என்று நினைத்தோம். அந்த மிருகம் அவரை மீண்டும் சுட்டுவிட்டுப் போய்விட்டான்

நேற்று நானும் சின்னராசா அண்ணனும் தான் வண. பிதா சந்திரா அடிகளின் கைகளினால் தேவநற்கருணை வேண்டிக் கொண்டோம். ஒருவருக்கொருவர் சமாதானத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள் என்ற போது நாங்கள் இருவரும் தான் அந்தச் 'சமாதானத்தைப்' பகிர்ந்து கொண்டோம்.

வியாகுலப் பிரசங்கத்தை சோகமாகவும் ஆறுதலாகவும் இழுத்து உயர்த்தி தனித்து வாசிப்பதில் அவர் காட்டும் திறமையை கிறிஸ்தவ மக்கள் அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்வார்கள். சில கிறிஸ்தவர்களின் மனதிலே 'எட்டாம் பிரசங்கம்' ஒரு 'டேப் ரெக்கோடாகவே' பதியப்பட்டு இருக்கின்றது.

கச்சேரிப் 'பென்சனர்'அவர். அவருக்குப் 'போராளி' என்ற முத்திரையை ஏன் குத்தினார்கள்?

அவரது உடல் கரையில் போட்ட மீனாகத் துடிதுடித்துத் துடித்து அடங்கிக் கொண்டே இருந்தது.


நான் கரங்களைக் குவித்து அவரது உயிர் பிரியும் மட்டும் அவர் வாசிக்கும் வியாகுலப் பிரசங்கத்தின் உச்சக்கட்டமான 'தேவமாதா அழுது புலம்பும்' அந்தச் சோக வசனங்களை என்னோடு நிற்பவர்களுக்கு மட்டும் கேட்கக் கூடியதாய் எனக்குத் தெரிந்த இராகத்திலே பாடுகிறேன்.

''ஐயோ என் குமாரனுடைய தாகத்தை எப்படி ஆற்றுவேனோ? இந்த மலையிலே யாதொரு தண்ணீர் கரைகள் உண்டாகியிருக்குமோ? எட்டப்போய் தண்ணீர் கொண்டு வருமுன் என் மகனை ஏதும் வினையம் செய்வார்களா? ஐயோ என்...மகனே' நீ ஆகாசத்திலே வைத்த தண்ணீர்களிலேயும் பூமியில் உண்டாக்கின சாகரங்களிலும் ஒரு துளியாகிலும் உமது தாகத்துக்கு உதவமாட்டாதோ? இந்த உம்முடைய மரண அவஸ்தையிலே எழுப்பின தாகத்தை மாற்றத்தக்க தாகவோர் அடையாளமும் இல்லையே என்று இப்படியே பரிசுத்த தேவமாதா அழுது பரிதவித்து இருந்தார்கள்.''

எங்களது கண்களில் பெருக்கெடுத்தோடிய கண்ணீரையே அவரது 'ஆத்துமா சாந்திக்காக' அஞ்சலியாக்கினோம். அவரது உடலை எல்லோரும் ஒன்றாகவே தூக்கி அக்கினிக்குப் பாரம் கொடுக்கின்றோம்.

நன்றி - நூலகத்திட்டம்






இராஜினி நிச்சர்ட் நினைவு விழா
Rajini-Richard Commemoration Festival

இராஜினி திராணகம தொழிலால் யாழ் பல்கலைகழகத்தில் மருத்துவ பீட விரிவுரையாளர் ஆவார். அவர் வட- கிழக்கில் நடைபெறும் கொடிய யுத்தத்திற்குள் மனிதாம்சத்தைத் தேடிய குற்றத்திற்காக 1989 செப்ரெம்பர் மாதம் 21ம் திகதி தனது உயிரையே அர்ப்பணித்தார். இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின் உருவாகிய குழப்பகரமான சூழ்நிலைக்குள் மீண்டும் உயிர் பெற்ற கொடிய வன்முறை யுத்தத்திற் குள் மனிதாம்சத்தின் மாண்பினைக் காத்துக் கொள்ள விடுதலைப்புலி களையும் அதேவேளை இந்தியப் படைகளையும் அவர் விமர்சித்தார். ஒரு மருத்துவ விரிவுரையாளராக சேவையாற்றிக் கொண்டே வட-கிழக்கு மக்களின் மனித உரிமைகளை காப்பதற்காக மனித உரிமை ளுக்கான யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் அமைப்பை உருவாக்கும் பணியில் அவர் முன்னோடியாகச் செயற்பட்டார்.

யுத்தத்தின் உண்மைகளை அப்படியே கூறும் நிகழ்வுகளைத் தொகுக் கும் நடவடிக்கையில் முன்நின்ற அவர் வட-கிழக்கு யுத்தத்தினை ஒரு சரித்திரக் கதை போன்று சொல்லும் 'முறிந்த பனை' எனும் நூலை எழுதும் பணியில் பிரதான பங்காற்றினார்.

இறுதியில் அவரது நேர்மையானதும் நேரடியானதுமான விமர்சனத் தையும், மனித நேயத்திற்கான உறுதியையும் தாங்கிக் கொள்ள முடி யாத ஆயுதம் ஏந்திய புலிகள் இயக்கத்தினால் தமது கடமைகளை முடித்துக் கொண்டு யாழ்.பல்கலைக்கழகத்தில் இருந்து தனது சைக்கி ளில் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்த போது நடு வீதியில் வைத் துச் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

இன்றும் வட-கிழக்கே அமைதியையும் சமாதானத்தையும் விரும்பும் மக்களின் 'நம்பிக்கை ஒளிக்கீற்றில்' இராஜினி விளங்குகின்றார்.

## ரிச்சர்ட் பற்றிய சில குறிப்புகள்:

றிச்சட் டி சொய்சா, இந்நாட்டில் பிரபல்யமான, அறிவு நிறைந்த ஒரு பத்திரிகையாளர் ஆவார். சமூக அநீதிகளை அவர் பொறுத்துக் கொள்ளவில்லை. சமூகத்திற்கு வழிகாட்டும் தெளிவான வழிவகை ளைத் தெரிந்து கொள்வதற்காக பல விவாதங்களில் கலந்து கொண் டார். ஜே.வி.பி இயக்கத்தின் எழுச்சிக் காலகட்டத்தில் மனித நேயம் பற்றிய அவரது உணர்வுகள் உலுக்கப்பட்டன. சில வேளை அது பத்திரிகையாளர் என்ற வகையில் அவர் பெற்றுக் கொண்ட தகவலின் அடிப்படையிலானதாக இருக்கலாம்.

கொடிய வன்முறைக் கால கட்டம் முடிவடைந்து கொண்டிருந்த கால கட்டத்திலேயே நிச்சட்டின் பங்களிப்பு முக்கியம் பெற்றது. அக்கால கட்டத்தில் நாட்டில் பரவலாக நடைபெற்ற மனிதப் படுகொலை பற்றி அவர் வெளிப்படுத்தினார். இத்தாலியில் இயங்கும் 'இன்டர் பிரஸ் சர்விஸ்' என்னும் பத்திரிகை நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதியான நிச்சட் டி சொய்சா அரசாங்கத்தால் செய்யப்பட்ட மனித உரிமை மீறல்கள் பற்றி உலகிற்கு எடுத்துச் சொல்லும் பணியில் பாரிய பங்காற் றினார்.

1990 பெப்ரவரி மாதம் 19ம் திகதி தனது தாயாருடன் அவர் வாழ்ந்து வந்த இல்லத்திற்கு பொலிஸ் சீருடையில் வந்த ஒரு குழுவினர் அவ ரைக் கடத்திச் சென்று தலையில் சுட்டுக் கொன்றனர். அவரது உயிரற்ற உடல் மறுநாள் 20ம் திகதி மொறட்டுவை கொரல்வல்லை என்னும் இடத்தில் கரையொதுங்கிக் கிடந்து கண்டெடுக்கப்பட்டது.

அரசாங்கத்தின் பாதுகாப்பு படையினரே அவரைக் கொலை செய்தார் கள் எனப் பல குற்றச்சாட்டுக்கள் எழுந்ததனால் பக்க சார்பற்ற விசார ணைக் கமிஷன் ஒன்றை நியமிக்கும் படி பல கோரிக்கைகள் விடுக்கப் பட்டன. ஆனால் அரசாங்கம் இது வரை அதனை நடை முறைப்படுத் தவில்லை.

## இராஜினி பற்றிய சில குறிப்புகள்:

பெண்ணிலைவாதியும் மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவருமான இராஜினி திராணகம, 1989 ம் ஆண்டு செப்டம்பர் 21 ம் திகதி யாழ்ப்பாணத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார். பத்திரிகையாள ரும் பிரபல நடிகரும் அதேவேளை மனித உரிமைப் பிரச்சினைகள் பற்றி எழுதியவருமான நிச்சட் டி சொய்சா 1990 பெப்ரவரி மாதம் அவரது இல்லத்தில் இருந்து கடத்திச் செல்லப்பட்டார். அவர் கடத்தப் பட்ட சில நாட்களின் பின் அவரது உடல் கடற்கரையில் ஒதுங்கிக் கிடந்து கண்டெடுக்கப்பட்டது. இராஜினி, நிச்சர் இருவரும் இலங்கை வாழ் மக்களுக்கான ஜனநாயகத்திற்காக எம் விடுதலைக்காகவும் தம்மை அர்ப்பணித்ததோடு சமூக நீதிக்காகவும் உறுதியாக நின்று செயற்பட்டவர்களாவர். இருவருடைய மரணங்களும் இந்த நாட்டின் ஜனநாயக, மனித உரிமை மீறல்களைத் தெளிவாக எடுத்தியம்பவ தாய் உள்ளன.

கொழும்பில் இருந்து வெளிவரும் சிங்களப் மாற்றுப் பத்திரிகையான யுக்திய இவர்கள் இருவரையும் நினைவு கூரும் முகமாக இவ்விழா வினை எதிர்வரும் பெப்ரவரி 21 ம் திகதி நடத்த உள்ளது. இவர்கள் இருவரையும் நினைவு கூருவதென்பது இவர்கள் இந்நாட்டில் இன ஐக்கியத்திற்காகவும், சமூக நீதிக்காகவும் தம்மை அர்ப்பணித்து உயிர் துறந்தார்கள் என்பதற்காக மட்டுமன்றி, இவர்களைப் போன்று உயிர் துறந்த இன்னும் பலரையும் நினைவு கூரும் சின்னங்களாகவும் இவர் கள் திகழ்வதனாலுமேயாகும். இவ்விழாவில் பிரச்சாரப்படுத்தும் கருப்பொருளாக 'பயத்தில் இருந்து விடுபடுவோம்' என்பது அமை யும்.

இவ்விழாவுக்கான பிரச்சார வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப் பட்டு விட்டன. இவ்விழாவின் ஒரு பகுதியாக பல போட்டிகள் நடத் தப்படவுள்ளன. இலங்கையில் யுத்தம், ஜனநாயகம், ஐக்கியம், மனித உரிமைகள் ஆகியவற்றை மையப்படுத்தி கட்டுரை, சிறுகதை, கவி தைப் போட்டிகள் மாணவர்களுக்கும், வயது வந்தோர்க்கும் இரண்டு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன. வெற்றி பெற்றோர்களுக்கான பரிசு களும், சான்றிதழ்களும், சின்னங்களும் விழா தினத்தன்று வழங்கப்ப டும்.

விழாவானது 1994 பெப்ரவரி மாதம் 21ம் திகதி திங்கட்கிழமை கொழும்பு விகாரமகாதேவி திறந்தவெளி அரங்கில் நடைபெற உள் ளது. அன்றைய தின நிகழ்ச்சிகள் கீழ் கண்டவாறு அமையும்.

- நிச்சட் டி சொய்சாவின் உடல் கரை ஒதுங்கிய மொறட்டுவை கடற்கரையில் நினைவு விழா நிகழ்ச்சி ஆரம்பமாகும்.

- அக்கடற்கரையில் இருந்து ஏற்றப் பெற்ற தீப்பந்தம் ஏந்திய ஊர்வ லம் பத்திரிகையாளர் மற்றும் பொதுமக்களின் பங்குபற்றுதல்களுடன் ஆரம்பமாகும்.

- அவ் ஊர்வலமானது ராஜினியின் மரணத்தை நினைவு கூருமுகமாக மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் இருந்து பல்கலைக்கழக மாணவர் களால ஆரம்பித்து வரும் தீப்பந்தம் ஏந்திய ஊர்வலத்துடன் கட்டுப் பெத்தை சந்தியில் இணைந்து கொள்ளும்.

- இவ் இணைந்த ஊர்வலமானது விகாரமாகாதேவி பூங்கா வரை நோக் கிச் சென்று அங்கு வைக்கப்பட்டுள்ள பாரிய தீப்பந்தம் ஒன்று இவ்விரு பந்தங்களாலும் ஒளியேற்றப்படும்.

- இரண்டாவது கட்ட நிகழ்ச்சியாக 'சுதந்திரமான ஊடகப் பாரம்பரி யத்தை கட்டியெழுப்புதல்' என்னும் தலைப்பில் திரைப்பட இயக்குன ரும், விமர்சகரும், எழுத்தாளருமான திஸ்ஸ அபயசேகர உரை வழங் குவார்.

- கவிதை, கட்டுரை, சிறுகதைப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக் கான பரிசு வழங்கும் வைபவம் நடைபெறும்.

- 'தெற்காசியாவில் தொடர்பு ஊடகங்களும் ஜனநாயகமும்' என்னும் தலைப்பில் புரண்ட் லைன் சஞ்சிகை ஆசிரியர் என்.ராம் உரை நிகழ்த் துவார்.

- இறுதி நிகழ்ச்சியாக வீதி நாடகம், பலே நடனம் உட்பட பல கலாசார நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

யுக்திய ஆதரவில்..

## பாஸ்க் மக்களின் பிரிவினைப்......

வைத்தமை குறிப்பிடத்தக்கவை. 1980இல் கற்றலோனியாவுக்கும் பாஸ்க் பகுதிக்கும் சுயாட்சி வழங்கப் பட்டது. தனது சொந்தப் பொலிஸ்ப டையையும் 1876இல் தான் கொண்டி ருந்த பொருளாதார உடன்படிக்கை ளைப் புதிப்பிக்கும் தத்துவத்தையும் பெற்றுவிட்டதாக PNV கூறியது. ஆனால் இந்தச் சாதனைகளுக்குப் பின் னால் ETAயின் வன்முறை பங்களிப் பைச் செய்திருந்தமையை மறந்து விடு வதற்கில்லை. ஆனாலும் தீவிரவாதி கள் திருப்தியடையவில்லை.

ETA இந்த சுயாட்சியை ஏற்றுக் கொள் ளவில்லை. சுயாட்சிச் சமூகத்தில் முக் கிய மாகாணமான நவாரோ உள்ளடக் கப்பட்டிருக்கவில்லை; சுயநிர்ணய உரி மைப் பியோகத்துக்கான விருப்பு ரிமை வெளிக்கப்பட்டுள்ளது; ஒன்றி ணைந்த பாஸ்க் மக்களின் சுதந்திர அரசே விடிவாகும் என்கிறது ETA. ஆனாலும் தந்திரோபாயமாகவே ETA ஐந்து கோரிக்கைளை முன்வைத்துள் ளது. ஏற்கனவே தண்டிக்கப்பட்டிருக் கும் 300 குற்றவாளிகளுக்கு மன்னிப்பு, வெளிநாட்டில் மறைந்திருக்கும் 800 போராளிகள் நாடுதிரும்ப அனுமதிக் கப்படுதல், பாஸ்க் பிரதேசத்தில் இருந்து தேசிய பாதுகாப்புப் படை களை வாபஸ் பெறல், நவாரோ மாகா ணத்தை உள்ளடக்கியும் பாஸ்க் மக்க ளின் சுயநிர்ணய உரிமையை அங்கீக ரித்தும் புதிய சுயாட்சிச் சட்டம் ஆக்கப் படல், தொழிலாளர்களை உள்ளடக் கிய பகுதிக்கு கூடுதல் அபிவிருத்தி உதவி, போராளிக் குழுக்களை அங்கீக ரித்தல், இவையே ETAயின் குறைந்த பட்சக் கோரிக்கைகள். ஸ்பெயின் உயர் நீதிமன்றம் 1986இல் வழங்கிய தீர்ப் பின் மூலம் இவற்றுள் கடைசிக் கோரிக்கை நிறைவேறிவிட்டது. அதா வது போராளிகளின் கட்சியான HB சட்ட அங்கீகாரம் பெற்று விட்டது.


ஆரம்பத்தில் அடைக்கலம் கொடுத்த பிரான்ஸ் தற்போது ஸ்பெயினுடன் ஒத் துழைப்பதே ETA-Mக்கு பலத்த வீழ்ச்சி. முன்பு தான் கைது செய்யும் போராளிகளை பிரான்ஸ் லத்தீன் அமெரிக்க நாடுகளான வெனிசூலா, டோகோ, காபோன் போன்றவற்றுக்கு நாடு கடத்தியது. பின்பு தானே விசாரித் தது. தற்போது ஸ்பெயினிடமே ஒப்ப டைத்து வருகிறது. இதனால் போராளி கள் பிரான்ஸிலுள்ள தமது தளங்களை யும், அலுவலகங்களையும் மூட வேண் டிய நிர்ப்பந்தத்திலுள்ளனர். பிரான்ஸ் அனுப்பும் போராளிகளை ஏற்க மறுத்த லத்தீன் அமெரிக்க நாடுகளுக்குப் பிரான்ஸ் தேவையான அளவுக்குப் பொருளுதவி அளித்துப் பின்னர் போராளிகளை அனுப்பி வைத்தது. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் போது இந்திய அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு 'நிவாரணப் பணம்' வழங்கி வந்தமையை இங்கே ஞாபகப் படுத்தலாம். பாஸ்க் பிரதேசத்துக்கான தனியான பொலிஸ் படை உருவாக்கப் பட்டு அது மத்திய அரசுடன் ஒத்து ழைக்க ஆரம்பித்திருப்பதும் ETA-M தனிமைப்படுத்தப்பட ஒரு காரணமா கும்.

### படிப்பினை என்ன?

ஸ்பெயினுடன் அண்டை நாடுகளுக்கு எவ்வித மோதலுமில்லை. எனவே உள்நாட்டு ஸ்திரமின்மையை வெளி யார் பயன்படுத்தவில்லை. அப்படியா ரும் தலையிட முயன்றாலும் NATO, EEC என்பவற்றின் அனுசரணை தேவைப்பட்டிருக்கும். இந்த இரு அமைப்புக்களும் ஸ்பெயினுக்கு போதிய கால அவகாசங் கொடுத்து நிலைமையைச் சமாளித்தன. ஸ்பெயி னைத் தரங்குறைப்பதன் மூலம் அதனை அச்சுறுத்த இந்த அமைப்புக்க ளால் முடிந்தது. 1981இல் இராணுவம் மேற்கொண்ட சதிப் புரட்சியும் அங்கு வெற்றியளிக்காமை இனி ஜனநாயகத் துக்கு அச்சுறுத்தலில்லை என்பதைத் தெளிவாக்கிவிட்டது. ஆட்சியுடன் 150 வருடகாலம் சம்பந்தம் வைத்தி ருந்த இராணுவம் தற்போது தூர வைக் கப்பட்டுள்ளது. எனவே அடக்குமுறை ஆட்சியென வெளியில் பிரச்சாரஞ் செய்ய ETA-M க்கு முடிவதில்லை.

தென்கிழக்காசியாவில் மேற்சொன்ன நிலைமைகள் காணப்படுவதாக இல்லை. பலமான பிராந்திய அமைப் புக் கிடையாது. நாடுகள் ஒன்றை யொன்று எந்நேரமுஞ் சந்தேகத்துடன் பார்க்கின்றன. உள்நாட்டு விவகாரங் கள் அண்டை நாட்டை வலிந்திழுக்கும் அபாயங்கொண்டுள்ளன. இலங்கை யைப் பொறுத்தவரை 25 வருடகால 'அவசரகால நிலை' ஆட்சி 'கின்னஸ்' புத்தகத்தில் இடம்பெறப் போகிறது. அடக்குமுறை பற்றிப் பெரும்பான்மை யின மக்களே முணுமுணுக்கிறார்கள். அரசியல் தீர்வு பற்றிய எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக இல்லை. 1975இலிருந்து ஸ்பெயின் எடுத்த நடவடிக்கைகளில் 5%கூட இலங்கையினால் எடுக்கப்பட்டுள்ளதா கக் கூற முடியாது. குறிப்பாக, போரா ளிகளை உள்ளிழுக்கும் 'சமூக ஒன்றுக லப்புத்'த் திட்டமொன்றை ஸ்பெயின் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துகி றது. ஆனால் எமது அரசாங்கம் அடிக் கடி மன்னிப்பு என்று அறிவிப்பதும் திரும்பவும் அவர்களையே வேட்டை யாடுவதுமாக உள்ளது. குமரப்பா-புலேந்திரன் விவகாரத்தை ஒப்பிட்டுப் பார்த்தல் வேண்டும். இன்றுங்கூட அல் ஜீரியா, பெல்ஜியம் போன்ற நாடுக ளில் ETA-M பிரதிநிதிகளை ஸ்பெயி னின் உள்நாட்டு-அமைச்சர் இரகசிய மாகச் சந்தித்துப் பேசுவதாகச் செய்தி கள் வருகின்றன. இந்த இதயசுத்தி எம் மிடம் இல்லாதவரை தீவிரவாதத்தை அரசாங்கமே தீனிபோட்டு வளர்த்துக் கொண்டிருக்கும் என்பது மட்டும் திண் ணம்.

## சிவரமணியின் கவிதையொன்று.....



ஓ என் தேசமே
உன் மணல் வெளிகளில்
நான் நடக்கின்றேன்
உனது நிர்மலமான வானத்தின்
நட்சத்திரங்களை
நீ என் பார்வைக்கு பரிசளித்துள்ளாய்
உனது சிரிப்பினால் என்
சகோதரர்கள்
வாழ்கின்றனர்.
நீ போர்த்துள்ள நீலச் சேலையினுள்
ஒளித்து வைத்துள்ள
வெண்முத்துக்களை என் தங்கைகள்
அணிந்துள்ளனர்.
வாழ்வுகளின் வாழ்வாய் நீ என்னை
அணைத்துள்ளாய்.
உனக்கு நான் கொடுப்பது
என் உயிர் மட்டுமே.
1985

நன்றி: 'சிவரமணி கவிதைகள்'
வெளியீடு: பெண்கள் ஆய்வு வட்டம்

நன்றி - நூலகத்திட்டம்



## பெரும்பான்மை....

அவர் தொடர்ந்து எம்முடனான உரையாடலில் மேலும் தெரிவித்ததாவது;ஜனாதிபதி விஜேதுங்க அவர்கள் சமீபத்தில் பொது மேடைகளில் வெளியிட்டு வரும் அறிக்கைகளானது இலங்கையில் பல்லின பன்முக சமுதாயத்தை உருவாக்குவதற்குத் தேவையான அரசியல் யாப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றமான நடவடிக்கைகளை பின்தள்ளுவதாக அமைந்துள்ளது.

தமிழ் மக்களின் மொழியியல் ரீதியானதும் கலாசாரரீதியானதுமான தனித்துவங்களைப் பாதுகாக்கத் தவறியமையும், பெரும்பான்மையினரின் ஆட்சிக்குக் கட்டுப்பாடுகளை விதிக்கத் தவறியமையுமே இந்த இனவாத வன்முறைகளுக்கும், நாசகார சிவில் யுத்தத்திற்கும் காரணம் என்பதை 1978ஆம் ஆண்டுக்குப் பிந்திய அரசாங்கங்களும் , விடயமறிந்த புத்திஜீவிகளும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இரண்டாவது குடியரசு யாப்பானது விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் மூலம் பாராளுமண்றத்தில் பெரும்பான்மையினரின் பிரதிநிதித்துவத்தை கட்டுப்படுத்த உதவியுள்ளது. இந்த யாப்பானது முழு நாட்டிலுமுள்ள வாக்காளர்களினால் தெரிவு செய்யப்படுகின்ற நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜவாதிபதி முறையை அறிமுகப்படுத்தியது. இந்நடைமுறையானது ஜனாதிபதி அபேட்சகர் சிறுபான்மையினரின் எதிர்பார்ப்புகள் தொடர்பாக ஓரளவுக்காவது பொறுப்புணர்வுடன் தனது அரசியல் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியநிலைமையை ஏற்படுத்தியது. இருமொழிக் கொள்கையை வலியுறுத்தியும் தமிழ் பிரதேசங்களுக்கு அரசியலதிகாரங்களைப் பகிர்வதற்கு வழிவகுத்ததுமான இல-இந்திய உடன்படிக்கையை மேற்கொண்ட சம்பவம் இக்கொள்கை மாற்றத்தின் மிகச்சிறந்த வெளிப்பாடாகும். பல்வேறு குறைபாடுகள் இருந்தாலும் கூட, அரசியல் யாப்புக்காக மேற்கொள்ளப்பட்ட 13,16ஆவது திருத்தங்களை இலங்கையின் பல்லினப்பாங்கை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எனக்கூறலாம்.

ஜனாதிபதி அபேட்சகர் சிறுபான்மையினருடைய ஆதரவையும் எதிர்பார்த்திருக்க வேண்டியிருப்பதன் காரணமாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை பாராளுமன்றத்தின் மூலமாகத் தெரிவு செய்வதற்கு இயலுமான வகையில் தேர்தல் சட்டத்தை மாற்றி அமைப்பதற்காக வேண்டுகோள் விடுத்துள்ளார். பெரும்பான்மைச் சமூகத்தை சார்ந்த அபேட்சகர் மட்டும் தான், இந்நாட்டின் ஜனாதிபதியாக முடியும் என்று கூறுகின்றார் ஜனாதிபதி விஜேதுங்க. பெரும்பான்மை மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இரு அரசியல் கட்சிகளுக்கும் இடையில் இந்தப் பிரச்சினை தீர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்றும் கூறுகின்றார். குறிப்பாக அடுத்த ஜனாதிபதியை பாராளுமன்றமே தெரிவு செய்ய வேண்டும் என்றும் அதன் மூலம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையாக இருககின்ற அரசியல் கட்சி அடுத்த ஜனாதிபதியையும் தெரிவு செய்யக்கூடியதாக இருக்க வேண்டும் என்றும் சிபாரிசு செய்துள்ளார்.

சிறிமாவோ பண்டாரநாயக்கா போன்ற எதிர்க்கட்சி அரசியல் தலைவர்கள் ஜனாதிபதி விஜேதுங்க அடுத்த ஜனாதிபதித் தேர்தலை எதிர் நோக்குவதை தவிர்க்க முயல்கின்றார் என இந்தச் சிபார்சை நிராகரித்துள்ளார்கள். எனவே ஸ்ரீ.ல.சு.கட்சியிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களை தம்வசப்படுத்திக் கொள்ளாமல் 125 ஆசனங்களை மட்டும் கொண்ட ஐ.தே.கட்சிக்கு இச்சிபாரிசை பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றிக் கொள்ள முடியாது. சில யாப்பியல் சட்டத்தரணிகள் ஜனாதிபதி தேர்தல் நடைமுறைக்கு மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டுமானால் அபிப்பிராய வாக்கெடுப்பின் மூலமாக மக்களின் அங்கீகாரத்தைப் பெற வேண்டுமெனக் கூறுகின்றனர். எனவே அடுத்த பத்து மாதங்களுக்கிடையில் இவற்றை நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பங்கள் ஜனாதிபதி விஜேதுங்கவுக்கு மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. இதில் மிகவும் கவலைக்கிடமான விடயம் என்னவென்றால் பெரும்பான்மை மேலாதிக்கத்தை வலியுத்துகின்ற கொள்கைகளை மீண்டும் நிலைநாட்ட முயற்சிக்கின்ற செயற்பாடாகும்.

சிறுபான்மையினரின் பிரச்சினைகளில் கூடிய கவனம் செலுத்தி.அவற்றிற்கு தீர்வு காண வேண்டும் என்ற யதார்த்த நிலைப்பாட்டில் உள்ள பிரதமர் றணில் விக்கிரமசிங்கவும் சிரேஷ்ட அமைச்சர்களும் ஜனாதிபதி நடைமுறையில் மிதவாத நிலைப்பாட்டை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி செயல்டாமல் இருப்பதும் எம்மை ஏமாற்றமடையச் செய்கின்றது

1978 முதல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல்களிலும் நகரசபைத் தேர்தல்களிலும் ஐ.தே.கட்சியின வெற்றியை உறுதிசெய்த தேர்தல் உபாயங்களை மாற்றுவதற்கான முயற்சிகளை ஜனாதிபதி விஜேதுங்க மேற்கொள்கின்றமையைக் காணக் கூடியதாக இருக்கின்றது. இலங்கையின் தேர்தல் தொகுதிகளில் 1/3 பகுதி கரையோரக் கிறிஸ்தவர்களையும், முஸ்லீம்களையும்,மலையகத் தமிழர்களையும்,வடக்குக் கிழக்குத் தமிழர்களையும் கொண்டதாக அமைந்துள்ளது என்ற நிலைப்பாட்டை அவர் உணர்ந்து கொண்டமையே இந்த உபாயங்களை மாற்றுவதற்கான் காரணிகளாக அமைந்துள்ளன. ஐ.தே.கவுக்கும், இ.தொ.காங்கிரசுக்கும் இடையிலுள்ள அரசியல் தொடர்பானது தேர்தல்களில் சிறுபான்மையினருடைய ஆதரவை ஐ.தே.கட்சி பெற்றுக் கொள்வதற்கு முக்கிய காரணியாக அமைந்திருந்தது.

ஒரு தேர்தல் வருடத்தில், அதுவும் ஜனாதிபதி பிரேமதாச கொல்லப்பட்ட பிறகு தென்னிலங்கை அரசியல் தலைமைகள் அரசியல் சக்திகளுடன் அணி சேருவது ஆச்சரியப்படக் கூடிய ஒரு விடயமல்ல.

இலங்கை வரவு செலவுத் திட்டத்தில் பாரிய பற்றாக்குறையை ஏற்படுத்துவதற்கும் பண வீக்கத்திற்கான தாக்கத்தினை ஏற்படுத்துவதற்கும் பாரிய பங்களிப்பை செய்கின்ற ஒரு கொடூர யுத்தத்தையும் அதன் விளைவாக 600,000க்கு அதிகமானவர்கள் உள்நாட்டிலேயே அகதிகளாக்கப்பட்டிருக்கின்ற இந்தக் குரூரமான யதார்த்தத்தையும் மறந்து குறுகிய கால தேர்தல் தந்திரோபாயங்களை அடிப்படையாகக் கொண்டு அரசியல் தலைமைகள் செயற்படக்கூடாது.

இலங்கைப் பல்லின சமூகத்தின் பன்முகப்பாங்கை உறுதி செய்வதற்கும் அதை அங்கீகரிக்கக் கூடிய சமஸ்டி முறையிலான அதிகாரப் பங்கீட்டை நடைமுறைப்படுத்துவதற்குமான கடமைப்பாட்டை மீண்டும் வலியுறுத்துவது இந்த நேரத்தில் மிக முககிய தேவையாகும். பெரும்பான்மை இனங்களின் உரிமைகளைப் பற்றிப் பேசுவதானது வரலாற்று நடைமுறையில் நிராகரிக்கப்பட்டதொன்று என்பதோடு இது அரசியல் இராணுவரீதியில் இக்கட்டான நிலைமை தொடர்வதற்கு மட்டுமே வழிவகுக்கக் கூடியதொன்றாகும். ●

## மட்டக்களப்பு மாநகரசபை ஊழியர் விவகாரம்

## தவறு தமதல்ல என்கிறார் ஆணையாளர்

எந்தக் காலத்திலும் மாநகரசபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆணையாளர்களினால் ''பதில் ஊழியர்கள்'' நியமிக்கப்படவில்லை. நிரந்தர ஊழியர்கள் விடுமுறையில் செல்லும் நாட்களில் வேலை செய்வதற்காக மட்டுமே பதில் ஊழியர்கள் நியமிக்கப்பட்டு வந்துள்ளனர். இவர்களுக்குப் பகிரங்க விடுமுறை.தினங்கள், வார ஓய்வு நாட்கள், நிரந்தர ஊழியர்கள் லீவில் செல்லும் நாட்களில் நிரந்தர ஊழியர்களின் வேலைகளைச் செய்வதற்காக அவசியத்தை முன்னிட்டு வேலை வழங்கப்படுவது வழக்கம். இவர்கள் எக் காலத்திலும் நிரந்தர நியமனத்திற்கு உரித்துடையவரல்லர். எனினும் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் வெற்றிடமேற்படும் போது இவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பது வழக்கம்.

இவ்வாறு பதில் ஊழியர்கள் ஆறு (6) நிரந்தர ஊழியர்களுக்கு ஒருவர் என்ற அடிப்படையிலேயே வழங்கப்படுவது வழக்கம். எனினும் வேலை வாய்ப்பற்றவர்களின் நெருக்குதலினாலும், சட்டம், ஒழுங்கு அற்றிருந்த ஒரு காலத்தில் பயமுறுத்தல்களினாலும் இந்த வரம்பை மீறி அளவு கடந்த பதில் ஊழியர் நியமனங்களை முன்னைய ஆணையாளர்கள் வழங்கியுள்ளார்கள். இதனால் இவர்களுக்கு நிரந்தர நியமனம் கிடைக்கும் சந்தர்ப்பம் மிகவும் அரிது, மாதத்தில் வேலை நாட்களும் மிகவும் குறைவாகவே கிடைக்கும்.

மேலும் பொது நிர்வாக சுற்றறிக்கைகளின் மீது பதில் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டுமாயின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி வெற்றிடம் இருத்தல் அவசியம். வெற்றிடமின்றி எந்த சுற்றறிக்கையின் கீழும் நிரந்தர நியமனம் வழங்க முடியாது. இருந்தும் 1988ம் ஆண்டு பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் வெற்றிடமில்லாத நிரந்தரமாக்கப்பட்ட (32) ஊழியர்கள் வேலைப்பகுதியில் இன்னும் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மேலதிகமாகவே உள்ளனர்.

அங்கீகரிக்கப்பட்ட ஆளணி வெற்றிட மேற்பட்ட பொழுதெல்லாம் நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. 01.09.88 முதல் 31.12.91 வரை 104 நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனினும் அளவிற்கதிகமாகப் 'பதில்' ஊழியர்கள் உள்ளதனால் மேலும் அதிகமானோர் பதிலடிப்படையிலேயே உள்ளனர்.

44/90ம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் கீழ் இளைப்பாறியதனால் ஏற்பட்ட வெற்றிடங்களை அரசாங்க பணிப்புரையின்படி விசேட அங்கீகாரமின்றி நிரப்பமுடியாது. நிரப்பப்பட வேண்டிய 10 வெற்றிடங்களுக்கான நியமனங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

சிற்றூழியர் தரத்தில் உள்ள பல பதவிகளுக்குத் தனிப்பட்ட லாபங்களைக் கருத்திற்கொண்டு தேவைக்கு அதிகமான ஆளணி உருவாக்கம் இடம் பெற்றுள்ளது. அண்மையில் இடம்பெற்ற ஆளணி நிர்ணய குழுக் கூட்டத்தில் திறைசேரியிலிருந்து கலந்துகொண்ட அங்கத்தவரினால் இது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. புதிய ஆளணி அங்கீகாரத்தின் போது இவ்வாறான மேலதிகமாக உருவாக்கப்பட்டுள்ள ஆளணியைக் குறைக்கும் அவசியமும் ஏற்படலாம்.

எனவே பதில் அடிப்படையில் நியமனம் பெற்றுள்ளவர்கள் எத்தனை வருடம் சேவையாற்றியிருப்பினும் ஆளணி வெற்றிடம் ஏற்பட்டாலன்றி நிரந்தர நியமனத்திற்கு உரித்துடையவரல்லர். இவர்கள் இத்தொழிலையே நம்பியிருக்காது பொருத்தமான வேறு தொழில்களைப் பெற்றுச் செல்வது விரும்பத்தக்கது.

மேலும் தற்போது உள்ள ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தில் 40% மான தொகையையே மாநகரசபை சம்பள மீளளிப்பாக பெறுகின்றது. ஏனைய 60%மும் வரியிறுப்பாளர்களின் வரிப்பணத்திலிருந்தே செலவிடப்படுகின்றது. இதனால் எவ்வித அபிவிருத்தி வேலைகளையும் செய்ய முடியாது மாநகரசபை திண்டாடுகின்றது. நீங்கள் குறை கூறிய இறுகிய மனப்பான்மை கொண்ட உயர் அதிகாரிகளின் முயற்சியினால் இவ்வருடம் முதல் அதிகரித்த சம்பள மீளளிப்பு அரசாங்கத்திடமிருந்து எதிர் பார்க்கப்படுகின்றது.

**செ.புண்ணியமூர்த்தி**
**மாநகர ஆணையாளர்**
**மட்டக்களப்பு** ●

## கிட்டு...

கொன்றமை.

கிட்டுவை இந்திய இராணுவததிற்குக் காட்டிக் கொடுத்தமை.

இப்படிப் பலப்பல....எண்ணிலடங்காதவை

இயக்கம் என்பது இவரது சொந்த வீடு போலத்தான் பாவிக்கப்பட்டது. இவ்வளவு தொகையான மக்களின் பணமும், போராளிகள் உயிர்களும் இவரது பதவி வெறிக்காகப் பாவிக்கப்பட்டது. இயக்கத்தில் உள்ளவர்கள் திருமணம் செய்யக்கூடாது என்று கட்டுப்பாடு விதித்து, காதலித்தவர்களை மண்ணுக்குள் புதைத்த இதே ''தலைவர்'' தான் ஒருத்தியை விரும்பியதும் (மதிவதனி) இந்தக் கட்டுப்பாடுகளை நீக்கினார். முருகானந்தம் என்ற ரெலோ உறுப்பினர் ஒருவரின் காதலியை இந்தியாவில் வைத்து வற்புறுத்தி திருமணம் செய்து கொண்டார். இந்தியாவை எதிர்த்த இவர் இந்தியாவிடம் 50 கோடி ரூபா பணம் பெற்றுக் கொண்டார். பிரேமாதாசாவிடம் இருந்து ஆயுதங்கள் பெற்றுக் கொண்டார். இஸ்ரேலிடம் இருந்து பயிற்சி பெற்றுக் கொண்டார்.

காலத்துக்குக் காலம் இந்தத் துரோகத்தனங்களைப் பொறுத்துக் கொண்டும், தமிழ் மக்களின் விடுதலைக்காக உழைக்க வேண்டும் என்றே மாத்தையா, யோகி போன்ற எமது உண்மைத் தலைவர்கள் இயக்கத்திற்குள் இருந்தார்கள். பாலசிங்கம் -பிரபா கூட்டை அடிக்கடி விமர்சித்தார்கள். இயக்கத்தை சரியான பாதையை நோக்கி வழிநடத்த முற்பட்டார்கள். தமிழீழத்தை விட தனது தலைமையே முக்கியம் எனக்கருதும் பிரபா இயக்கத்திற்காக ஆக்கபூர்வமாக எந்த வேலையையும் செய்யவில்லை. உண்மையாக உழைத்த 300இற்கும் மேற்பட்ட போராளிகள் மாத்தையா, (சிறீ) யோகி ஆகியோர்கள் எங்கே என்று தெரியாத நிலையில் உள்ளனர். அன்னிய சக்திகளின் கைக்கூலியாகிவிட்ட பிரபாவிற்கு எதிராக இயக்கத்திற்கு உள்ளேயும் வெளியேயும் தலைவர் மாத்தையாவின் ஆதரவாளர்கள் உள்ளனர். பிரபாகரன் இல்லாத ஒரு. உண்மையான போராட்டம் நிகழ்த்தப்படும். அதுவரைக்கும் பிரபாகரனின் துரோகத் தலைமைக்கு ஆதரவான சகல பத்திரிகைகள், ஸ்தாபனங்கள், தனிநபர்களுக்கு எதிராக எம்மால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். நூற்றுக்கணக்கான உண்மையான போராளிகளின் வாழ்க்கைக்காகவும் மக்களுக்காகவும் கடைசிவரைக்கும் போராடுவோம். ●

## மாத்தையா....

ளுக்கு மௌனத்தையே பதிலாகத் தர முடியாத நிலையில் படிப்படியாக புலிகளின் பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம் மாத்தையா பற்றிய விடயத்தை வெளிப்படுத்தியதோடு யோகியின் நிலைமை அஞ்சத்தக்கதல்ல எனவும் தெரிவித்துள்ளார்.

## வட்டியில்லா வங்கி என்பது என்ன?

இலங்கையில் சில அமைப்புகளால் வட்டியில்லா வங்கி என்ற பெயரில் பல ஊர்களில் வங்கிகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன. அதில் பலர் அங்கத்துவம் பெற்று பணம் வைப்பும் செய்தும் உள்ளனர். அவ்வட்டியில்லா வங்கிகளில் ஆண்களுக்கென்றும் பெண்களுக்கென்றும் வெவ்வேறாக நடைபெற்று வருவதும் கண்கூடு.

புத்தளத்தில் ஒரு முஸ்லீம் அமைப்பால் வட்டியில்லாத வங்கிகள் நடாத்தப்படுகின்றன. பெண்களுக்கு ஓர் இடத்திலும் ஆண்களுக்கு வேறோர் இடத்திலும் இவை நடாத்தப்படுகின்றன. ஆண்களுக்குரியதில் எனது மகனும் பெண்களுக்குரியதில் எனது மனைவியும் அங்கத்துவம் பெற்று பணம் வைப்புச் செய்தனர்.

எமக்கு பணம் தேவையேற்பட்ட போது மகனும்- மனைவியும் வட்டியில்லா வங்கியில் பணம் பெற்று வந்தார்கள். வைப்புப் பணத்தில் குறைவு ஏற்படவும் எனது மனைவியிடமும் மகனிடமும் விசாரித்தேன். தாள்,பில், பேனா போன்ற செலவுகளுக்கு மாதா மாதம் நாலு ரூபா கழிக்கிறார்கள் என்று இருவரும் கூறினார்கள்.

இதில் முக்கிய விஷயம் என்னவென்றால் அரசாங்கத்தால் நடாத்தப்படுகின்ற வங்கிகளிலோ, தனியார் வங்கிகளிலோ பொதுமக்கள் கடன் பெற்றால் வட்டி என்ற பெயரில் சிறுதொகை பணத்தைப் பெறுகின்றார்கள். பொதுமக்கள் வங்கிகளில் பணம் வைப்பு செய்தால் வட்டி என்ற பெயரில் நூற்றுக்கு ஐந்து சதவீதமோ -பத்துவீதமோ -இருபது வீதமோ வழங்குகின்றார்கள். வங்கிகளில் வட்டி என்ற பெயரில் சிறுதொகை பணம் பெறுவது நீதியானதே. ஏனெனில் வங்கி கட்டிடவாடகை, மின்சாரகட்டணம், தண்ணீர்வரி, வங்கி ஊழியர்களின் சம்பளம், தாள், பில், பேனா, தட்டச்சு இயந்திரம், வாகன செலவுகள் எல்லாம் இந்த வட்டிப் பணத்தினாலேயே செய்ய வேண்டும். பொதுமக்கள் வங்கிகளில் பணவைப்பு செய்தால் வட்டி கொடுக்க வேண்டிய பணத்தையும் வங்கிகளில் கடன் பெறுபவர்களிடமிருந்தே வட்டி அறவிட்டு கொடுக்க வேண்டியுள்ளது.

ஆனால் வட்டியில்லா வங்கி என்று பெயர் வைத்துக் கொண்டு தாள், பில், பேனா போன்றவற்றுக்கு மாதம் நாலு ரூபா கழிப்பது கமிசனா? அல்லது வேறெதுமா? 'பொதுமக்களிடம் இருந்து அறவிடும் வட்டிப் பணத்திலேயே வங்கிச் செலவுகளையும் செய்தல் வேண்டும். அது கூடாது (ஹறாம்) என்றால் வட்டியில்லா வங்கிகளினால் அறவிடப்படும் மாத செலவுப் பணம் சரியானதா? (ஹலாலா) என்று கேட்கத் தோன்றுகிறது.

ஜல்டீன் - புத்தளம்

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சரிநிகர்

# கிழக்கிலிருந்து தேர்தல் செய்திகள்

## தேர்தல் மோசடியில் ஈடுபட அரசு தயார்!

மார்ச் முதலாம் திகதி நடாத்தப்படவிருக்கும் \ உள்ளூராட்சித் தேர்தலில மோசடிகளைச் செய்வதற்கான தயாரிப்பு வேலைகள் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிய வருகிறது.

கிழக்கின் யுத்தநிலைமைகள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் வாக்குகளையே அரசு பயன்படுத்தவுள்ளது. கிழக்கு மாகாணத்தில் தற்போது அகதி முகாம்களில் இருக்கும் மொத்த அகதிகளின் எண்ணிக்கை 106,052 ஆகும். மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் அகதிமுகாம்களில் இருக்கும் அகதிகளின் தொகை 54,745 ஆகும். அவர்களில் வாக்குரிமை உள்ளோர் 65 வீத்தினர்.

திருமலை மாவட்டத்தில் உள்ள 30,000 அகதிகளில் 70 வீதத்தினர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள 16,307 அகதிகளில் 60 வீதத்தினர் வாக்குரிமை உடையவர்கள்.

இவ்வகதி முகாமில் இருக்கும் அகதிகளின் வாக்குகளை ஐ.தே.கவுக்கு வழங்கக்கோரி சமூக சேவை அதிகாரிகள் மூலமாக அகதிகளுக்கு ஆணையிடப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தேர்தலில் ஐ.தே.க. தோற்கடிக்கப்பட்டால் அகதி முகாம்களுக்கு வழங்கும் உதவிகள் நிறுத்தப்படுமென பயமுறுத்தலும் தொடங்கியுள்ளனர்.

## கைது செய்யப்படுபவரை விடுவிக்க மூன்று வேட்பாளர்கள்

மட்டக்களப்பு பகுதியில் சுற்றிவளைத்துக் கைது செய்வது கூட தேர்தல் பிரச்சாரமாக மாறிவிட்டது. அதாவது குறிப்பிட்ட பிரதேசத்தைச் சுற்றி வளைத்து இளைஞர், யுவதிகளைக் கைது செய்தவர். பின்னர் இராணுவத்தினரே மக்களிடம் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களைக் கூட்டி வரும்படியும், அவர்கள் ஏற்றுக் கொண்டால் கைது செய்யப்படுபவர்கள் விடுவிக்கப்படுவார்கள் எனவும் கூறுவார்கள். மக்களும் வேட்பாளர்களை நோக்கிப் படையெடுப்பதும், அவர்களும் தங்களுக்கு வாக்களிக்கும்படி மக்களிடம் பிரசாரம் செய்வதும், பின்னர் கைது செய்யப்படுபவர்கள் விடுவிக்கப்படுவதும் இன்று நடைபெறும் சாதாரண நிகழ்ச்சியாகி விட்டது!

இதில் என்ன வேடிக்கையென்னவென்றால் சிலவேளை ஒருவரை விடுவிக்க இரண்டு, மூன்று வேட்பாளர்கள் கூட வருவார்கள். பொதுமக்களும் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை பெற வேண்டும் என்பதற்காக எல்லா வேட்பாளர்களிடமும் சென்று முறையிடுவார்கள்.

பூனைக்கு விளையாட்டு. ஆனால் எலிக்கோ உயிர் போகின்ற நிலையை ஒத்ததாகவே மக்களின் நிலையும் இங்கு உள்ளது.

## கருணாகரனின் தந்தையும் தேர்தலில்!

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபைக்கான தேர்தலில் சுயேட்சைக் குழுவாகப் போட்டியிடும் குழுவின் தலைமை வேட்பாளர் ஒருவர் மட்டக்களப்பு பா.உ. கருணாகரனின் தந்தையான கோவிந்தன் ஆவார். ஆனால் இவருக்கு இப்பிரதேசத்தில் செல்வாக்கு இல்லை என்ற காரணத்தினால் தாங்கள் தோல்வியடையலாம் என்று கருதிய ரெலோ இயக்கத்தினர், சின்னத்திற்கு வாக்களிக்கும்படியும், தனிப்பட்டவர்களுக்கு வாக்களிக்கத் தேவையில்லை எனவும் பிரச்சாரம் செய்கின்றனர் இதனால் கட்சி வெற்றி பெறும் பட்சத்தில் தாங்கள் நினைத்தவர்களையே தலைவராக்க முடியும் என இவர்கள் நினைக்கின்றார்கள். இதே நடைமுறையை இவர்கள் மண்முனைப் பற்று பிரதேச சபைப்பகுதியிலும் கடைப்பிடிக்கின்றனர்.

## ஈ.பி.டி.பியின் தேர்தல் வியாபாரம்

போரதீவுப் பற்று என்னும் இடத்தில் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் போட்டியிடும் ஈ.பி.டி.பி வேட்பாளர்கள் வித்தியாசமான முறையில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளார்கள். ஒவ்வொரு வீடுவீடாகச் சென்று காணாமல் போனவர்கள் பற்றிய விபரங்களைத் திரட்டுவதும், இவ்வாறு காணாமல் போனவர்களைக் கண்டுபிடித்துத் தருவதற்கு முழு முயற்சியும் எடுப்பதாகவும் கூறி, வருகின்ற தேர்தலில் தங்களுக்கு வாக்களிக்கும் படி கேட்கின்றனர்.

இதே போல் மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரால் கைது செய்யப்பட்டு மகஸின், களுத்துறை சிறைச்சாலைகளில் வைக்கப்பட்டுள்ளவர்களது பெயர்ப்பட்டியலை பொதுமக்கள் பார்வைக்காக வைத்திருக்கிறார் மட்டுநகரில் இன்னொரு சுயேட்சைக்குழு வேட்பாளரான செழியன் பேரின்பநாயகம். இவரும் பட்டியலைப் பார்க்க வரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவரின் உறவினரிடம் தமக்கு வாக்களிக்கும்படியும், தமக்கு வாக்களித்தால், தடுத்து வைக்கப்பட்டவரை விடுவிக்கத் தான் நடவடிக்கை எடுப்பதாகவும் கூறியுள்ளாராம்.

## கிரான்குள சாராயக் கடைக்கு விசேட அதிரடிப்படை பாதுகாப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தமிழ்க் கிராமமான கிரான்குளத்தில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட சாராயக் கடையொன்று அவ் ஊர் மக்களின் முழு எதிர்ப்புக்கு உள்ளாகியுள்ளது. இச் சாராயக் கடையை இங்கு திறப்பதில் கிராமத்திற்கு அண்மையில் அமைந்துள்ள புதுக்குடியிருப்பு கிராமத்தில் உள்ள விசேட அதிரடிப்படை முகாமின் பொறுப்பாளர் ரொனி என்பவரே முன்னின்றுள்ளார். இவர் ஒவ்வொருநாளும் மாலை வேளைகளில் கிரான் குளத்தில் உள்ள சாராயக் கடைக்கு வந்து, மது அருந்துவதும் பின் இக்கிராமத்தின் பெண்களோடு தவறான முறையில் பழகுவதையுமே வழக்கமாகக் கொண்டுள்ளார். இவர் ஐ.தே.க வுக்கு நெருங்கியவர் என்பதால் யாரும் இவர் மீது நடவடிக்கை எடுக்க முடிவதில்லை. ஆனாலும் சாராயக் கடை பொதுமக்களின் தாக்குதலுக்கு உட்படலாம் என்ற காரணத்தினால் 24 மணி நேரமும் சாராயக் கடையை விசேட அதிரடிப்படை காவல் செய்யப்படுகின்றது.

அத்தோடு இக்கிராமத்தில் தேர்தலை எதிர்த்து புலிகளால் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டதை அடுத்து மாலை 6 மணியுடன் ஊரடங்குச் சட்டமும் அமுல் செய்யப்படுகின்றது.

## புலி அனுப்பாத புலிக்கடிதங்கள்

கிழக்கின் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடும் ஐ.தே.கட்சியினர் சிலருக்கு புலிப்பாணியிலான மிரட்டல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாம். இது தொடர்பாக திகிலடைந்த ஆளும் கட்சி வேட்பாளர்கள் புலனாய்வுத் துறையினரிடம் விடயத்தைக் கையளித்துவிட்டனர். இம்மிரட்டல் கடிதங்கள் தொடர்பாக புலன்விசாரணைகளை மேற்கொண்ட பொழுது அக்கடிதங்கள் புலிகளால் அனுப்பப்படவில்லை என்பது தெளிவாகியுள்ளதாகவும், தேர்தலில் போட்டியிடுகின்ற முன்னணி சுயேட்சைக் குழுசார்பானவர்களே அவற்றை அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரியவந்துள்ளதாம். இதனால் தேர்தலுக்கு சமீபமாக இக்குழு சார்பான பலர் கைது செய்யப்படலாம் என ஊகங்கள் நிலவுகின்றன.

# மணிவாசகம்

### ராணுவத் தீர்வே ஒரே வழி

''தமிழ்ப் பிரச்சினை தோன்றி ஏறத்தாழ 15 வருடங்களாகி விட்டுள்ளது. போதனை செய்து, போதனை கேட்டு, பைபிளை வாசித்தபடி இப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. இராணுவ வழிமுறையினூடாக அதனைத் தீர்க்க வேண்டும்''

**ஸ்ரீ லங்கா மஹாபோதி நிறுவனத்தின் தலைவர் காமினீ ஜயசூரிய - லங்காதீபவில் -31.01.1994**

### குமார் யாழ் போவாரா?

''இலங்கையில் 13 தமிழ்க் கட்சிகள் உள்ளன. இக் கட்சிகள் கொழும்பிலேயே இருக்கின்றன. இக் கட்சியினர் வடக்குக்குச் செல்ல முடியுமா? வடக்குக்குச் சென்றால் கொல்லப்படுவார்கள். புலிகள் இவர்களை ஏற்றுக் கொள்ளவில்லை. அவ்வாறெனில் வடக்கு- கிழக்கைக் கொடுக்கச் சொல்கிறார்கள். குமார் பொன்னம்பலம் யாழ்ப்பாணத்துக்குச் செல்ல முடியுமா?

**மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரும், பா.உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தன -லங்காதீபவில் -31.01.1994**

### படையும் பொறுப்பும்

''இலங்கையில் சுயாதிபத்தியம், புவியியல் தொடர்ச்சி, தேசிய சுயாதீனத்துவம் ஆகியவற்றைப் பாதுகாப்பதில் பாதுகாப்புப் படையினருக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பு மிக விசாலமானதாகும்.''

**கலாநிதி காமினீ கொறயா -திவயினவில் -31.01.1994**

### விஜிதசேன தேரர் கூற்று!

எமது இனம் சுரணையற்றதாக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுவது முற்றிலும் நியாயமானதாகும். இன்று எம்மை அடித்தாலும், ஏசினாலும், கொலை செய்தாலும் பார்த்துக் கொண்டு அப்பால் போகும் நிலைக்கே நாடு உள்ளாகியுள்ளது.''

**மடிதியவெல விஜிதசேன தேரர் -திவயினவில் -01.02.1994**

### விமலறிதன தேரர் கூற்று!

'இனப்பிரச்சினை ஒன்று எமது நாட்டில் இல்லை. இங்கு இருப்பது பயங்கரவாதப் பிரச்சினை. இது சிங்கள தமிழ் மக்களைப் பிரிக்கும் பிரச்சினையொன்றாகும். எமது நாட்டிற்கு ஏற்பட்டுள்ள இப்பிரச்சினையை நாம் நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும்.''

**பெல்லனவில விமலதன தேரர் - திவயினவில் -01.02.1994**

### ஆரிய சேன தேரர் கூற்று!

''சிங்களவரைப்பற்றி அக்கறையாகப் பேசுவது இனவாதமாகாது. பயப்படாது நேராகப் பேச வேண்டும்.

**கம்புறுபிட்டியே ஆரியசேன தேரர் -திவயினவில் -01.02.1994**

### காமினி சொல்கிறார் இப்படி!

''சில காலமாக ஐ.தே.க. விலிருந்து பிரிந்து இருந்த நான் திரும்பவும் ஐ.தே.கவில் சேர்ந்தது ஜனாதிபதி டீ.பி.விஜேதுங்கவின் அழைப்பினாலாகும். விசேஷமான விடய மொன்று அதற்குக் காரணமாயிற்று. அதனை இங்கு கூற வேண்டும். இன்று இலங்கையில் மரண யுத்தமொன்று நடைபெறுகிறது. 15 வருட காலத்திற்கு மேலாக இனப் பிரிவொன்று போராட்டத்தில் ஈடுபட்டு இன யுத்தமொன்றை நடத்துகிறது. அப் பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு எதுவித வசதிகளும் இல்லை. அவர்களுக்கு மின் வெளிச்சம் இல்லை, மண்ணெண்ணெய் கொஞ்சம் கூட இல்லை, சில வேளைகளில் உணவும் இல்லை. சந்தோஷமும், மகிழ்ச்சியும் அறவே இல்லை. நிலக் கண்ணி வெடி வெடிக்கும் என அவர்கள் பயத்துடன் உள்ளனர். இந்த யுத்தத்தினால் எம்மவர்களும் சாகிறார்கள். அதனால் நாம் வாழும் காலத்தினுள் அதனைத் தீர்த்துப் பிள்ளைகளுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்க வேண்டும். ஜனாதிபதியின் கோரிக்கைக்கு நான் இணங்கியது இக்காரணத்தினால்தான்.''

**முன்னாள் ஐ.தே.மு.வின் தலைவர் காமினி திசாநாயக்கா -லங்காதீபவில் -02.02.1994**

### எல்லாம் புலிமயம்!

''புலிகள் சென்ற வாரம் முதல் தனியாகப் பணம் அச்சிடுகின்றனர். எமது ஒரு ரூபாய்க்குப் புலிகள் கொடுப்பது 80 சதவீதமாகும். யாழ்ப்பாணத்துக்குச் சென்றதும் எமது பணத்தைக் கொடுத்து விட்டுப் புலிகளின் பணத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். ஈழப் பரீட்சையில் சித்தியெய்திய பிள்ளைகளுக்கு மட்டுமே வேலை வழங்கப்படுகிறது. புலிப் பாடசாலை, புலி வங்கி, புலி அரசாங்க அதிபர் அலுவலகம், புலி வானொலி, புலிப் பொலிஸ் ஆகியனதான் இன்று வடக்கில் செயலபடுகிறது.''

**ஸ்ரீ.ல.சு.க.வின் பிரதான அமைப்பாளர் சமறவீர வன்னி -லங்காதீவில் -02.02.1994**

### முடிவுக்கு வரவேண்டிய காலம் இது

''இன்று எமது நாட்டின் எரிந்து கொண்டிருக்கும் பிரச்சினையாகவுள்ள வடக்கின் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து தேசிய ஒற்றுமையை அர்த்தமுள்ளதாக ஆக்குவதற்கான நேரம் வந்து விட்டது. அதனால் எம் மத்தியிலுள்ள பல்வேறு விதமான பேதங்கள் -உடைவுகளை மறந்து யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ஒன்றிணைந்து செயற்படும் அவசியம் இன்று எம் முன் எழுந்துள்ளது.''

**முன்னாள் விமானப் படைத்தளபதி ஏயர் வைஸ் மார்ஷல் ஹறி குணதிலக -லங்கதீபவில் -02.02.1994**

... 18/2 அலோ சாலை ... கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன்